உலகத்திற்கு லட்சுமி, சிவன், பார்வதி, கிருஷ்ணன், இராமன், இலக்குமணன் ஆகிய உருவங்கள் எப்படி இருக்க வேண்டுமென்று மேன்மைதங்கிய ஓவியர் ராஜா ரவி வர்மா அவர்கள் அந்த உருவங்களை யெல்லாம் தீட்டி நம்பும் படியாகச் செய்திருக்கிறார். அது எல்லோரும் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டதாகும்.

அதுபோல உலக மக்களுக்கு அறிவூட்டும் கடவுளாகிய திருவள்ளுவருடைய உருவச் சித்திரத்தை, இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று நமது நண்பர் திரு. கே. ஆர். வேணுகோபால் சர்மா அவர்கள் தீட்டிக் காட்டியிருப்பதை நாம் எல்லோரும் மகிழ்ந்து, பாராட்ட வேண்டியதாகும். ஆகவே திரு வேணுகோபால் சர்மா அவர்களும் ராஜா ரவி வர்மாவினுடைய ஸ்தானத்தைப் பெற்று விட்டார் என்றே நாம் சொல்ல வேண்டும்.

வள்ளுவர் படவிழா வாழ்த்து

காவியத்திற் குறட்பாவின் கருத்துக்களை ஆய்ந்தெடுத்து
ஓவியத்தில் வள்ளுவரை உருவாக்கித் தந்த எங்கள்
வேணுகோபால் சர்மா அவர்கள் வெற்றியும், பெற்றியும்
பெறுகப் பெறுக என வாழ்த்துகிறோம்.

அன்புள்ள,

P. S. சிவானந்தம்
நிர்வாகி,
M. S. D. நாடக மன்றம்.

M. S. திரௌபதி
உரிமையாளர்,
M. S. D. நாடக மன்றம்.

திரு. சாண்டில்யன்

கருத்திலே தோன்றும் எண்ணங்களைக் காதுக்கு எடுத்துக் கொடுப்பது ஒலி. அவற்றைக் கண்ணுக்குக் கொடுப்பது எழுத்து. அந்த எழுத்தையே ஆதாரமாகக் கொண்டு ஆண்டவனுக்கு உவமை காட்டி குறளைத் துவக்கியவர் வள்ளுவர். அந்த வள்ளுவர் பெருமான் சித்திரத்தை நமக்கு கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் படியாக திரு. சர்மா அவர்கள் தீட்டித் தந்திருக்கிறார்கள். இது தமிழ் நாட்டுக்கு அவர்செய்த ஒரு மாபெருந் தொண்டு. ஏன்? பரத நாட்டுக்கே செய்த ஒன்று என்றால் அது மிகையாகாது.

★

எவ்வளவோ வடநாட்டுக் கலைஞர்கள் திருவுருவப் படங்கள் நம் தபால்பில்லை களில் காட்சியளிப்பதைப் பார்க்கிறோம். அப்படி ஒரு தமிழ்க் கலைஞன், அதாவது குறிப்பாக வள்ளுவர் பெருமானின் திருவுருவம் அந்த தபால் பில்லைகளில் குறிக்கப் படவில்லையே என்று தமிழ் மக்கள் ஏங்கியதுண்டு. அந்த ஏக்கத்திற்கு நிவர்த்தி அளிக்கும் வழியில், இந்த அழகான படத்தை திரு. சர்மா அவர்கள் நமக்கு வடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அவர் செய்தது தமிழருக்குத் தொண்டு, தமிழ்த் தொண்டு; உலகுக்கே பெருந்தொண்டு என்று சொல்லலாம். ஏனென்றால், வள்ளுவர் ஒரு உலக மகா கவி.

★

தில்லைவாணன், பி. ஏ.,
அ. வ. அ. கல்லூரி

மன்னன் பந்தல்,
மாயூரம்.

தேனொக்கும் தமிழ்மொழியில் காவியங்கள் உண்டு
செஞ்சொல்லோர் வரலாறு தெளிவாக இல்லை

மீனொக்கும் விழியென்பார் இயற்கையினை நன்கு
விளக்கமுறக் கண்டறிந்தார் மெய்வடிவைக் காணோம்.

வானொக்கும் பெருங்குறளை வள்ளுவனார் தந்தார்
வள்ளுவனார் உருவத்தை யாரேதான் தந்தார்

கோனொக்கும் பாவலரை நூலாகக் காண்போம்
குளிரவிழி அவருருவைக் கண்டதுவும் உண்டோ

பெம்மைக்கே உருத்தந்தார் வள்ளுவரும்; அந்தச்
சிற்பிக்கே உருத்தந்தார் அருங்கலைஞர் "சர்மா"

இம்மைக்கும் மறுமைக்கும் உறுதிபகர் சீரோன்
எழுத்தினின்றும் உயிர் பெற்றுத் திகழ்கின்றான் அம்மா!

வெம்மைக்குக் குளிர்நீர்போல் வேதனைக்கு மாற்றும்
வித்தகரின் ஓவியந்தான் வண்டமிழாம் நங்கள்

அம்மைக்குப் பெரும்படைப்பாம்; வளர்ந்தோங்கி வாழ்க
வேணுகோபால் சர்மாவின் அரும்சித்தி ரக்கோல்.

விழிதன்னில் நுதல்தன்னில் கவரும்ஒளி உண்டு
விளங்கிடுமவ் வொளியிலறி வன்பமைதி உண்டு

மொழிதன்னில் சுவைதன்னை எழுத்தாணி ஊட்டும்
முகமுடிதான் நம்முளத்தே பக்தியினைக் கூட்டும்.

பழிதன்னை அறியாத தெய்வஒளி மேனி;
பங்கமிலா வலிசிறக்கும் எழில் தோற்றம்; வாழும்

வழிதன்னை வகுக்கின்ற அவர் கரந்தான் ஏட்டில்
"பிறப்பொக்கும்" குறளதனை வரையுமெழில் என்னே?

எவர்க்கும் பொதுவாய் இனிய நூலைப்
புவனம் உணர்ந்து போற்றி நடக்க

வழங்கிய கவிஞர் வள்ளுவர் வாழ்க
எவர்க்கும் பொதுவாய் எழிலும் இனிமையும்
தவழும் வள்ளுவர் வடிவினைத் தந்த
தனிப் பெரும் கலைஞர் சர்மா வாழ்க!

கோ. இலக்குமணன்
அஞ்சல் தொழிற் சங்கம்.

29. முத்தியால் நாயக்கன் தெரு
சென்னை - 7.

தென்னக அஞ்சல் ஊழியர்கள், தங்கள் மண்ணைச் சார்ந்த ஒரு மாமேதையின் உருவப் படத்தை அஞ்சல் இலாகாவின் "ஸ்டாம்ப்" களில் எதிர்பார்த்தது இயற்கையே. திரு. டாக்டர் சுப்பராயன் அவர்கள், அஞ்சல் இலாகா அமைச்சர் பதவி ஏற்றதும், திருவள்ளுவர் உருவப் படத்தை "ஸ்டாம்ப்"களில் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டார்கள். இந்த முயற்சியில் வெற்றி காண உயர்திருவாளர் கலைஞர் வேணுகோபாலனார் அவர்கள் உலக மக்கட்கு உருவாக்கித் தந்த திருவள்ளுவரின் உயிர் ஓவியம் பெரிதும் உதவி செய்தது. திருவள்ளுவர் உருவப் படத்தை, மிக நல்ல முறையில், ஆயிரத்து முன்னூற்றுமுப்பது குறள்களையே ஆதாரமாகக் கொண்டு தீட்டியுள்ளார்கள். எனவேதான் இந்தப் படம் நாட்டில் உள்ள எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பலர் திருவள்ளுவர் உருவப் படத்தை எழுதியுள்ளார்கள்; வெற்றி காணாதவர்கள் ஏராளம். ஆனால் வேணுகோபாலனார் அவர் கள்கண்ட வெற்றி சாதாரண வெற்றியன்று. தென்னக மக்களின் மன எழுச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் படம் அமைந்துள்ளதால் தான் அவர் வெற்றி கண்டார். எனவே, மக்களுக்காக எதனையும் செய்பவர்கள் வெற்றி காண்பார்கள் என்பது திரு. வேணு கோபாலனார் அவர்கள் முயற்சியிலிருந்து நாமெல்லாம் உணரும் படிப்பினையாகும். திருவள்ளுவர் உருவப்படம் குறள்கண்ட மக்கள் உள்ளங்களிலே யெல்லாம் இடம் பெற்றுள்ளது — அதற்குத்தான் திரு. வேணுகோபாலனார் உருவம் தந்துள்ளார்கள். இந்த நல்ல முயற்சியில் ஈடுபட்டு வெற்றிகண்ட திரு. வேணுகோபாலனார் அவர்களைத் தென்னக அஞ்சல் ஊழியர்கள் சார்பில் பாராட்டுவதோடு எங்கள் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திருவள்ளுவர் படத்தை ஸ்டாம்பில் வெளியிட முடிவு எடுத்து பிப்ரவரி திங்கள் 15-ல் வெளியிடக் காரணமாயிருந்த அஞ்சல் இலாகா அமைச்சர் நமது டாக்டர் சுப்பராயன் அவர்களை நாம் எப்பொழுதும் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

வாழ்க தமிழ் !

அன்புள்ள,

கோ. இலக்குமணன்.

திருவருள் துணை.

உலகுக் கொரு புலவர் – திருவள்ளுவர்

உரு–ஓவியம் வரைந்துதவிய

கலைக்கொரு சன்மா அவர்களைப் பாராட்டும்

'கருத்தோவியம்'

★

தமிழகத் தியல்பு தான்பெற்ற புதுமையை
இமிழ்கடல் புவிக்கும் அளித்(து)இன் புறுதல்
அந்த முறையில் அரியவள்ளு வரைத்
தந்துவான் புகழைத் தான்கொண்ட திந்த
நாடெனப் புலவருள் நயம்பெற நவின்றவர்
ஈடில் பாரதி யாரிங் கொருவரே!
அதுபோல் முப்பா லவர்தம் மெய்யுரு
"இதுதான் இயற்கை" என்றுல கேத்தும்
நிலைக்கொரு ஓவியம் நிறுவினர் கவின்செய்
கலைக்கொரு 'சன்மா' என்னுமெம் காவலர்!!

'கலைஞர்'

தில்லை – பொன்னப்பா

திரு. டி. என். சிவதாணு

அண்ணா வேணுகோபால சர்மா அவர்கள், தான் எழுதிய திருவள்ளுவரின் திரு உருவத்தை எல்லோரும் பார்த்து, அதனுடைய விளக்கங்களை தெளிவுபடுத்த வேண்டுமென்ற ஆசை கொண்டு, எல்லா பெரியார்களையும் அழைத்ததுபோல, அடியேனையும் அழைத்தார். நான் பெரியவனும் அல்ல. இருந்தபோதிலும், கலைஞன் என்ற முறையிலே, என்னை அண்ணா அவர்கள் அழைத்ததாக எனக்குத் தெரிகிறது.

திருவள்ளுவரின் திருவுருவை, தான் எப்படி அமைத்தேன் என்பதைப் பற்றி அண்ணா ஆரம்பத்திலே எனக்கு விளக்கமாகச் சொல்லவில்லை. ஒரு கலைஞன், தான் செய்த பணியை மற்றவர்கள் ரசிக்க வேண்டும், மற்றவர்கள் பார்த்து மகிழ்ச்சியுற வேண்டும் என்று நினைப்பது இயல்பு; இயற்கை. அதுபோல கலைப் பெரியார்களில் ஒருவராகிய அண்ணா வேணுகோபால சர்மா அவர்கள், எல்லோரையும் அழைத்து தன்னுடைய பணியை மற்றவர்கள் பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டதில் ஒண்ணும் ஆச்சரியமில்லை.

நான் இன்று காலையில் அண்ணா அவர்கள் எழுதிய திருவள்ளுவரின் ஓவியத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையுடன் வந்தேன். வந்தபொழுது, திருவள்ளுவரின் உருவம் நம்முடைய மனதிலே, பொதுவாகத் தமிழ் மக்களுடைய மனதிலே, இப்பொழுது எவ்வாறு அமைந்துகொண்டிருக்கிறது? எப்படி இருக்கிறது? இதை எவ்வாறு அவர் எழுதியிருப்பார்? என்று நான் சிந்தித்தபொழுது, படத்தை எனக்குக் காண்பித்தார். காண்பித்தவுடனே, எனக்கு அதைப் பற்றி என்ன சொல்லவேண்டுமென்றே புரியவில்லை. ஏனென்றால், இதுவரையில் திருவள்ளுவரின் உருவம் நமக்கு வேறு வகையாகத் தெரிந்திருக்கிறது. அந்த உருவத்தை மாற்றியமைக்கும்போது—எப்பொழுதுமே கலைஞன், ஒரு நல்ல காரியத்தைச் செய்யும்போது, அவனுக்கு எதிர்ப்பு வந்தாலுங்கூட அதை சமாளிக்கக் கூடிய சக்தி இருக்கும். ஆனால் நம் போன்றவர்கள் அதைப் பார்க்கும்பொழுது, இதுவரையில் வந்த உருவத்தை என்ன துணிவுடன் இவர் மாற்றியமைத்தார் என்ற எண்ணம் எனக்குத் தோன்றிற்று. ஏனென்றால், பழந் தமிழ்ப் பெரியார்கள், பல புலவர்கள் எண்ணத்திலே ஊறிக்கொண்டிருந்த திருவள்ளுவர் வேறு, இப்பொழுது அண்ணா அவர்கள் அமைத்திருக்கும் திருவள்ளுவருடைய உருவம் வேறு. ஆனால், என்னைக் கேட்டால், என்னுடைய சிறு அறிவை பயன்படுத்திப் பார்க்கும்போது, இதுதான் சரியான உருவம் என்பது எனது எண்ணம். ஏனென்றால், வள்ளுவருடைய பாடல்கள் உலகத்திலே எல்லா மதத்தினராலும், எல்லா மொழியினராலும், பாராட்டப்படக்கூடியது. அப்படி பாராட்டப் படக்கூடிய ஒரு பாடலை எழுதியவர், ஒரு மதத்துக்கு உரியவர் அல்ல என்பதை விளக்கமாக, அவருக்கு எந்த மதத்தினுடைய சின்னமும் இல்லாமல் அண்ணா அமைத்திருப்பது ஒரு உயர்ந்த நோக்கு. என்னைக் கேட்டால் சொல்லுவேன், இந்த உருவத்தினால் வள்ளுவப் பெருமானுடைய பெருமை இன்னும் உயரும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இப்போது உயரவில்லை என்பது நோக்கமல்ல. மென்மேலும் என்றென்றும், உலகம் பூராவும், வள்ளுவருடைய மொழிகள் நீடித்திருக்க வேண்டுமென்பதற்கு அறிகுறியாக, எல்லா மதத்தினரும் பாராட்டவேண்டுமென்பதற்கு அறிகுறியாக, இந்தப் படத்தை அண்ணா சித்தரித்திருக்கிறார்கள்.

இதன் முன்பு பல பெரியார்கள் இந்தப் படத்தினுடைய சிறப்பைப் பற்றி அழகாகப் பேசியிருக்கிறார்கள்.

இன்று நமது இந்திய சர்க்கார் தபால் பில்லைகளில் எந்த வள்ளுவரை உருவப் படுத்தவேண்டும் என்று நினைத்துக்கொண்டிருக்கும் காலையில் இதோ உண்மையான வள்ளுவர், தமிழ்ப் பெரியார் வள்ளுவர், தமிழ்கலைப் பெரியார் வள்ளுவர், உலகத்துக்கு, உலக மொழிகளுக்கு, உலக மதங்களுக்கு, நெறியாக இருந்த வள்ளுவப் பெருந்தகையை உருவமாக உங்களுக்குத் தருகிறேன் என்று சொல்லக் கூடிய அளவிலே அண்ணா அவர்கள் இந்தப் படத்தைத் தீட்டியிருக்கிறார்கள் என்றே கருதுகிறேன்.

இந்தப் படத்தைப் பார்த்தால் போதும், 1330 அருங்குறளை நாம் படிக்கவேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால், அந்த நூலிலுள்ள ஒவ்வொரு விஷயங்களையும், நன்றாய் ஆராய்ந்து, நன்கு ஆராய்ச்சி செய்தே அண்ணா எழுதியிருக்கிறார்கள் என்றே நான்

நம்புகிறேன். அதற்கு அறிகுறியாக, ஏற்கெனவே அண்ணா இந்தப் படத்தைத் தீட்டுவதற்குக் காரணமாக, ஆராய்ச்சி செய்ததின் அறிகுறியாக, ஒரு சில குறிப்புகளைக் குறித்து வைத்திருந்தார். அதை நான் நன்ருகப் படித்தேன். படிக்கும்பொழுது வள்ளுவப் பெருமான் இப்படித்தான் இருந்திருக்கவேண்டும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆகவே, கலைஞன் ஒரு காரியத்தைச் செய்யும்பொழுது நன்ருக ஆராய்ச்சி செய்துதான் செய்வான் என்பதற்கு அறிகுறியாக இந்தப்படத்தை அண்ணா அவர்கள் நன்ருக ஆராய்ச்சி செய்து எவ்வித ஐயப்பாடுக்கும் இடமில்லாமல் மிக அழகாகத் தீட்டியிருக்கிருர்கள்.

இந்தப் படத்தை இந்திய சர்க்கார் துணிந்து, தைரியத்துடன், எந்தவிதமான சர்ச்சையும் எழாது என்ற உண்மையான நோக்கத்துடன், உள்ளன்புடன் இந்தப் படத்தை தபால் முத்திரையில் பொறிப்பதற்கு மிகப் பொறுத்தமானது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும், அதுபோன்ற பல பெரியோர்களின் படத்தை அண்ணா அவர்கள் வரைந்து, தமிழுலகத்திற்கல்ல, உலகத்திற்கே கொடுப்பார்களானல்—எங்கள் கலை உலகம். பெருமைப்படும். கலைஞர் அண்ணா அவர் வெறும் ஓவியர் மாத்திரமல்ல நடிகர், சிறந்த பாடகர், சிறந்த சங்கீத விற்பன்னர், சிறந்த ஒரு நிர்வாகி, இவர் ஓவியத்திலும் சிறந்தவர் என்பதை உங்களுக்கு எடுத்துக் காட்டிவிட்டார்.

ஆகவே நடிகன் என்கிற முறையிலே, கலைஞன் என்ற முறையிலே, கலைத் தொண்டன் என்ற முறையிலே அண்ணாவை நான் பாராட்டுகிறேன். அண்ணாவை மிகவும் பாராட்டுகிறேன். வாழ்த்துவதற்குரிய வயது எனக்கு இல்லை. இருந்தாலும், எல்லா பெரியார்களும் இதை வாழ்த்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நீண்டகாலம் ஆயுளுடன் இருந்து, அண்ணா அவர்கள் இதுபோன்ற பல பெரியார்களின் படத்தை, உண்மையான படத்தை நமக்குத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.

P. பாலகிருஷ்ணன், B. A., B. T., போர்டு உயர்நிலைப் பள்ளி

தலைமை ஆசிரியர். **மகுடஞ்சாவடி, சேலம் ஜில்லா.**

அன்புமிக்க திரு. சர்மா அவர்களுக்கு, வணக்கம். தாங்கள் எழுதிய வள்ளுவர் படத்தை பல செய்தித் தாள்களிலும், அஞ்சல் தலையிலும் பார்த்து மிக மகிழ்வெய்துகிறேன். என் பாராட்டுதல்களை இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சர்ச்சைக்கிடமான வள்ளுவர் உருவத்தை தங்களுடைய மதிநுட்பக் கற்பனையால் வரைந்த தங்களுக்கு தமிழ்நாடு கடமைப் பட்டிருக்கிறது. அறிஞர்கள், அரசியல் தலைவர்கள், புலவர்கள் இன்னும் பல லட்சோப லட்ச மக்கள் தங்களைப் பாராட்டும் அளவிற்குக் காரணம், தாங்கள் திருக்குறளின்மீதும், தமிழ் இலக்கியத்தின்மீதும் வைத்துள்ள பக்தியும் கைவண்ணமும்தான். தாங்கள் இன்னும் பல தமிழ்ப் பெரியார்களின் உருவங்களை வரைந்து, அவைகள் அஞ்சல் தலைகளில் வெளிவர நீண்டநாட்கள் ஆகாது என்று கருதினுல் மிகையாகாது. தங்கள் வாழ்க்கையில் எல்லா நலங்களும் பெற்று சீரும், சிறப்புமாக விளங்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானுக!

தங்கள் அன்புமிக்க,

P. பாலகிருஷ்ணன்.

திரு தமிழ்வாணன்

எழுதியவன் இல்லாத நேரத்தில், எழுதியவன் எப்படி இருப்பான் என்று முடிவு கட்டுவது ஞானிகளால்தான் முடியும். அத்தகைய முடிவு, அவனுடைய எழுத்துக்கு இயல்பாக, அவனுடைய கருத்துக்கு ஒத்ததாக இருக்கும் என்பதற்குரிய சான்றுகளைத் தேடிக் கண்டுபிடிப்பது என்பது அதே ஞானிகளால்தான் முடியும். அத்தகைய ஒரு பெரிய ஆராய்ச்சியை, கலைஞர் சர்மாஜீ அவர்கள் வள்ளுவனுடைய கருத்துக் கிணங்க, வள்ளுவன் எப்படி இருப்பான் என்கின்ற நேர்மையான கருத்தை, சமய சார்பின்றி, சாதி வேற்றுமையின்றி, எத்தகைய மாறுபட்ட கருத்துக்கும் இடங்கொடுக்காது, தன் மனதிலே உள்ள கருத்தை அப்படியே வள்ளுவன் படமாக வடித்துத் தந்திருக்கின்றார்கள்.

இந்த வள்ளுவன் படத்தை குறள் கற்றவர்கள் எவரும் மறுக்க முடியாது. குறளுக்கு மட்டுமல்ல, சமய நெறிகளுக்கும் மாறுபடாது, வள்ளுவன் கருத்துக்கு மாறுபடாது, உலகத்தில் உள்ளவர்கள் எல்லாரும் ஒப்பக் கூடிய நிலையிலே, இந்த படத்தை அவர்கள் வரைந்து தந்திருக்கின்றார்கள்.

எந்த மதத்தவனும், எந்த கொள்கையுடையவனும், எந்த இனத்தவனும், எவன் வந்து இதைக் கண்டாலும் தன்னுடைய இனத்தின் சார்பாகவோ, தன்னுடைய கொள்கையின் சார்பாகவோ மாறுபட்ட கருத்துக் கொள்ளாது, இது எனக்கு உடன்பாடு, இந்த உருவச் சின்னத்தை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன், இவன் அறிஞன், இவனுடைய உருவத்தில் நமக்கு மாறுபட்ட கருத்து இல்லை என்கின்ற அளவுக்கு, எல்லாருக்கும் ஒப்பதாகத் தருகிற ஒரு உருவத்தை சர்மாஜீ அவர்கள் தந்திருக்கிறார்கள்.

இது சாதாரணமாக எழுதுகோலில் மட்டும், வண்ணத்தால் மட்டும் தரக்கூடியதல்ல. அந்த உள்ளம் இருக்கிறதே, அந்த உள்ளம்தான் இதற்கு முக்கிய கருத்து. அதற்கு அடுத்தபடியாக இந்த வள்ளுவனுடைய படத்தைப் பார்த்தால்

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்கின்ற குறளிலிருந்து முடிகின்ற குறள் வரையிலும் இந்த கலைஞர் படித்திருக்கிறார் என்பதற்கு இந்த வள்ளுவருடைய உருவமே சான்றாக இருக்கிறது.

உலகத்தைப் பொருத்த அளவில், எந்த மதத்தைச் சேர்ந்தவன் என்று அறிய முடியாத அளவுக்கு சாக்ரட்டீஸ் ஒரு பெரிய, ஒரு நிரந்தர அறிஞனை அவனுடைய உருவத்தை மட்டும் நாம் காட்சியிலே காணமுடிந்தது. அத்தகைய ஒரு உருவத்தை, இன்றைக்கு கீழ் நாட்டிலே வள்ளுவனைத் தந்து விட்டார்கள் சர்மாஜீ அவர்கள்.

★

இதற்கு முன்பு, நான் கண்ட வள்ளுவன், பொய்மை வள்ளுவன், அவனுடைய கருத்துக்குப் புறம்பான உருவத்தை சமய வெறி கொண்டவர்கள் படைத்துவிட்டார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இந்த தூய்மையான உருவத்தை சர்மாஜீ தந்திருக்கிறார்கள்.

★

ஆகையால், இதற்கு முன்பு உள்ள வள்ளுவன் பொய்மை வள்ளுவன். இவனே வாய்மை வள்ளுவன். வாய்மை வள்ளுவனைத் தந்த - வாய்மை வள்ளுவனைத் திரும்பத் திரும்ப இந்த நாட்டிலே நிலைநிறுத்துதற்கு உடன்பாடாகத் தந்த சர்மாஜீ அவர்கள், இன்றல்ல என்றுமே வாழவேண்டுமென்று என்னுடைய தாழ்மையான பிரார்த்தனையை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

★

அறிஞர் சி. என். அண்ணாதுரை,

எம்.ஏ., எம்.எல்.ஏ.

★

தமிழர்கள், தரணி போற்றும் நிலையில், ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்தனர் என்ற பேருண்மை, அடியோடு மறக்கப்பட்டுப் போய்விட்டது. இனி என்றேனும் ஒரு நாள், மறைந்த உண்மை மீண்டும் வெளிப்போந்து அரசோச்ச இயலுமா என்ற ஐயப்பாடு மிகப் பெரும்பாலாருக்கு இருந்து வந்தது. தமிழர்களின் இன்றைய நிலையை, அவர்தமை வறுமை வாட்டுவதை, அறியாமை அலைக்கழிப்பதை, வேற்றுமை பீடித்துக்கொண்டிருப்பதைக் காணு போர் எவரும், ஒரு காலத்தில், இதே தமிழ்க் குலம் அறிவாற்றலைப் பெற்றிருந்ததுடன், பிறருக்கும் அதனை வழங்கிடத் தக்க நிலை பெற்றிருந்தது என்பதை ஏற்றுக் கொள்ளக்கூடத் தயங்குவர்.

பிற நாடுகளில் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி, படிப்படியாக ஏற்பட்டு, இன்று கனிந்து நிற்கக் காண்கிறோம். அதுவும் சில நூற்றுண்டுகளிலே எத்தனையோ ஏற்றம் அந்த நாடுகளிலே ஏற்பட்டுள்ளன. நம் தமிழகத்திலோ, குன்றின்மேலிட்ட விளக்கென, மிகப் பழம் காலத்திலேயே புகழ் திகழ்ந்தது. பேய்க்காற்றென்று கிளம்பி ஒளிதரும் விளக்கினை அணைத்ததுடன், விளக்கினையே சுக்குநூறாக்கி விட்டிடும் தன்மை போல, தமிழகச் சிறப்பு பாழ்படுத்தப் பட்டது. 'விளக்கு இருந்தது; அதனால் ஒளி கிடைத்தது' என்பதை எடுத்துக்காட்ட உடை பட்டுப் போன விளக்குத் துண்டுகள் கிடைக்குமாயின், காண்போருக்குக் கருத்தில் மகிழ்ச்சி ஏற்படுமன்றோ! உடைபட்டுப்போன சிப்பியைக் கண்டதும் முத்து மீது நினைவு செல்வதும், சிதறிக் கிடக்கும் இதழ் கண்டதும் மலர் பற்றிய எண்ணம் எழுவதும் இயல்பன்றோ! அஃதே போல மட்டுமன்றி, விளக்கே கிடைத்தால், எத்துணை மகிழ்ச்சி ஏற்படும்!

திருக்குறள், தமிழகத்துக்குச் சிறப்பொளி தந்துவந்த நந்தாவிளக்கு! அதனை இன்று தமிழர் கண்டெடுத்து, தம் உள்ளத்துக்கு ஒளி தேடிக் கொள்கின்றனர், உவகையுடன், பெருமிதத்துடன்.

குறள் தந்த ஒளி தமிழகத்துக்கு இருந்தும், பிறகு ஏன் ஓர் இருட்படலம் மக்கள் மனதைப் பீடித்துக் கொண்டது? எல்லாத் துறைகட்கும் ஏற்புடைய கருத்தளித்து, எழக்கூடிய ஐயப்பாடுகளை நீக்கி, தெளியவைத்து, பண்பினைச் சமைத்தளிக்கத் தக்கதாக, திருக்குறள் இருந்தும், தமிழர் பிறகு ஏன் சாதிச் சமயப் பிணக்காலும், மூடக் கோட்பாடுகளாலும், கல்லாமைப் பிணியாலும் பீடிக்கப்பட்டுப் போயினர்.? **'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'** என்ற பெருநெறி பெற்றிருந்தும், என்ன காரணம் பற்றி தமிழர், ஜாதிச் சேற்றிலே உழலலாயினர்? **நீட்டலும் மழித்தலும் வேண்டாம்** என்ற கொள்கையினைக் கொண்டிருந்த தமிழர், பிறகு ஏன் கும்ப மேளாக்களிலே ஈடு பட்டனர்? இல்லற மல்லது நல்லறம் இல்லை என்று வாழ்ந்து வந்த தமிழர், பிறகு ஏன், 'ஆஸ்ரமவாசிகளே அறிவின் இருப்பிடம், பிறப்பிடம்' என்றெண்ணி தொழத் தொடங்கினர்? அறநெறி அறிந்தொழுகிவந்த தமிழர், பிறகு ஏன், 'தர்மம்' செய்யத் தலைப்பட்டு, இருப்பதை இழந்து, இல்லாததைப் பெற ஏங்கலாயினர்? விளக்கொளி இருந்தும், கீழே வீழுந்துபடக் காரணம் என்னை! ஒளி கிடைத்திருந்தும், வழி தவறிச் சென்ற காரணம் யாது? இருளைப் போக்கும் திருவிளக்கைக் கரத்தே கொண்டிருந்தும், தமிழர், இடறி வீழ்ந்திடக் காரணம் என்ன? ஒளி தரா விளக்கெனில், இக் கேள்விகள் எழா. திருக்குறள், காலமெல்லாம் ஞால மெங்கணும் ஒளிதரும் திருவிளக்கு என்பதனை மறுப்பார் இலர்! அத்தகையதோர் ஒளிவிளக்கு பெற்றிருந்தோம் எனினும், சிற்றினம் என்று பிறர் ஏசிடும் வண்ணம், கீழ்மைச் செயல்களில் ஈடுபட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். இதனை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் பெருவியப்பே எற்படும்.

குன்றின் மேலிட்ட விளக்கைப் பேய்க் காற்றென்று அணைத்ததுடன், உடைத்தெறிந்தது. எனவே, இருள் கப்பிக்கொண்டது என்பது போலவே, ஏதோ ஓர் கருத்துப்புயல்,—தேவையற்ற—எட்டாத—தீது தரத்தக்க—இருப்பதை

மாய்த்திட வல்ல—கெடுத்திடத்தக்க—கருத்து புயல் வேகத்தில் வீசி, குறள் அளித்து வந்த ஒளியினை அணைத்தது; தமிழர் மனதிலே இருட்டறிவு குடிகொண்டது. திருவிளக்கு இழந்தனர்; திரு அழிந்து பட்டது; ஒளிவிளக்கு இழந்தனர். உலகு தமிழரை மறந்தது, வழி தவறினர், வதைபட்டனர். இயல்பு திரிந்தது; இடர்ப்பட்டனர். அய்யர் வந்தனர்; அறவோர் குறைந்தனர்! வணிகர் மறைந்தனர்; செட்டியார் வந்தார்! உழவர் மறைந்தனர்; பல்வேறு ஜாதியினர் தோன்றினர்! தமிழர், தாசராயினர்!! குன்றெலாம் ஒளிதந்து வந்த விளக்கு அணைந்து உடைந்து போயின் சச்சரவுகட்குத்தானே கொண்டாட்டம்! இருள் அரசோச்சக் கிளம்பின!! குறள்ஒளி அணைக்கப்பட்டதும், தமிழகமும் அதே நிலை பெற்றது! உறுமல் கிளம்பிற்று! கதறலொலி கேட்கலாயிற்று! எத்தரிடம் சிக்கிய ஏமாளிகள் நிரம்பினர். கற்றது, மற்றவரை அடிமை கொள, என்ற முறை எழுந்தது. பெற்ற செல்வம் பிறரைப் பேண அல்ல; மேலும் பொருள்பெற என்ற திட்டம் வந்தது. அரசு, மக்கட்கு என்ற முறை மாய்ந்தது. மக்கள் அரசு சுமந்திட, என்ற கொடுமை கிளம்பி ஆர்ப்பரித்தது. இல்லறம் வேதனைக் கூடமாயிற்று! துறவு தொல்லை யில்லாமல் எல்லா இன்பமும் பெறும் வாய்ப்பு என்று ஆகிவிட்டது! மலர்க்காடு கள்ளிக் காடாயிற்று! மாண்பு நிறை தமிழகம், கேடுசூழ் பாழிடம் ஆயிற்று! குறள் பிறந்த இடம் இருள் மயமாயிற்று! இருளே இனி என்றென்றும் தமிழகத்தில்! என்று பலர் எண்ணி, செயலற்றுக் கிடந்தனர். ஒரு சிலர், ஒளி அணைக்கப் பட்டதால் இருள் கப்பிக்கொண்டது என்பதனைக் கூட அறிய மாட்டாமல், இருள் கிளம்பி ஒளியை அழித்துவிட்டது என்றும் எண்ணத்தலைப்பட்டனர். இருளே வாழி! என்று ஏத்தித் தொழுதிடவும் சிலர் முனைந்தனர்!

எனினும், ஒரு சிலரின் உள்ளம் பொங்கு கடலாயிற்று. ஒரு சிலர், ஒளி நிரம்பிய அந்த நாட்களை மறப்போம் அல்லோம் என்று கூறினர். 'அந்த ஒளி அளித்தது குறள்; அறிமின்!' என்று எடுத்துரைக்கலாயினர். அவர் மிகச் சிலர். காய்வோர் மிகப்பலர்! எனினும், அவர் தம் நெஞ்சுரம் வென்றது. காய்ந்தோர் காய்ந்தனர்! களிதரு காலம் பிறந்தது! விளக்கு, உடைபடாத நிலையில் கிடைத்தது! விளக்கு கிடைத்த பிறகு, ஒளி பெற முயற்சி செயின், வெற்றி நிச்சயமன்றோ! வெற்றி, நாடிவரக் காண்கிறோம். இருளைக் கிழித்துக் கொண்டு ஒளிச்சிதறல்கள் தெரிகின்றன 'சிறிது காலம் மறைந்து கிடந்தது; காண்மின் ஒளியை! கருதுமின் குறளை! கருத்திற்கொண்மின் திருக்குறளை!' என்ற பேச்சு வலிவு பெற்றது; வாழ்வுக்குப் பொலிவு தந்தது. மீண்டும் அரியாசனத்தில் திருக்குறள்! தமிழருக்கு ஒளிதரு விளக்கு மறுபடியும்!!

இந்நிலையில், வள்ளுவர் பெருந்தகையை, நெஞ்சிலே கொண்டோரின் தொகை நாளுக்கு நாள் பெருகலாயிற்று. பெருகவே அப்பெருந்தகையின் 'திரு உரு' தமிழகத்துக்கு அணியாகத் திகழ வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. அந்த ஆர்வத்தால் உந்தப்பட்ட பலர், தத்தமது திறமைக்கு ஏற்ப 'வடிவம்' தீட்டினர். தீட்டிய 'வடிவங்கள்' அழகளித்தன; ஆயின், 'வள்ளுவரை' அளிக்கவில்லை! நீறு பூசுவோர், நிகண்டு தாங்குவோர், நூலணிவோர், காடேகினோர் என்பன போன்றுரின் மனம் களிப்புற 'வடிவம்' காட்டினர்; தீட்டினர். அழகிய ஓர் ஆண் மகன் வள்ளுவன்! சிறிது முதிர்ந்த பருவத்தினன்! முற்றுந் துறந்த மோன நிலையில் இருப்பவன்! அருள் ஒளிப் பிழம்புக்கு நடுவிலே அமர்ந்திருப்பவன்!—இவ்விதமெல்லாம் எண்ணி, அவ்விதமெல்லாம் தீட்டிக் காட்டத் தலைப்பட்டனர்.

இவ்விதமாகவா இருந்திருப்பார்? இது போல இன்ன மடத்திலே உள்ள இன்னார் உளரே! ஜடை இவ்விதமாகவா இருந்திருக்கும்? வசிஷ்டருக்கும் இதுபோல் இருந்ததாக அல்லவா, புராணத்தை ஒட்டி தீட்டப்பட்ட ஓவியம் காட்டுகிறது!—என்றெல்லாம் பேச்சு எழலாயிற்று.

இன்ன குறளில் இங்ஙனம் கூறப்பட்டுள்ளது. எனவே, வள்ளுவருக்கு, நெற்றியில் நீறும், மார்பிலே நூலும் இருத்தலே முறை, என்று ஒரு சாராரும், புறக்கோலம் பொருள் தருவதல்ல என்ற பொன்மொழி தந்தவரன்றோ வள்ளுவர்! அவருக்கோ இந்தக் கோலம்? என்ன தீங்கிழைத்தார் உங்கட்கு? அவரை இதுபோல் மாசு படுத்திக் காட்டுகிறீரே என்று மற்றோர் பிரிவினரும்

கூறினர். தமிழகத்திலே, வள்ளுவர் குறளால் ஒருவர் எனினும், வடிவத்தால் பலராகி, இலராகிப் போயினர்!

வள்ளுவரைக்காண, திருக்குறளே சிறந்த இடம்! நீருள்ள இடமெல்லாம் தேடினல் முத்து கிடைக்குமா? கடலன்றோ அதற்கு உறைவிடம்! சேறெல்லாம் செந்தாமரை தந்திடுமோ? சில இடமன்றோ, அதுபோல் கிடைத்திடும்! அஃதேபோல பேரறிவாளன் எங்ஙனம் இருப்பான் வடிவத்தால், என்று எண்ணி எண்ணிப் பார்த்தால் மட்டும் வடிவம் கிடைத்து விடுமா? கிடைக்கும், நமது விருப்பத்துக்கு ஏற்ற வண்ணம்; உள்ளபடி அன்று! உள்ளபடி வேண்டுமெனின், கடலில் மூழ்கி முத்து எடுத்தல் போல, குறளில் தேடி வள்ளுவரைக் காணவேண்டும்.

அந்த முயற்சியின் விளைவாக நமக்குக் கிடைத்திருப்பதே, திரு. வேணுகோபாலரின் ஓவியம்! வள்ளுவப் பெருந்தகை!

திரு. வேணுகோபாலர், ஒரு நல்ல ஓவியம் தீட்டி மகிழ வேண்டும், மகிழ வைக்க வேண்டும் என்று மட்டும் எண்ணம் கொண்டிருந்தால், காவியக் காட்சிகளைத் தீட்டி இருக்கலாம், புண்ய புருஷர்களைப் படமாக்கி இருக்கலாம், இயற்கை எழிலைத் தந்திருக்கலாம். சிறந்த ஓவியர் என்று பாராட்டுவர். ஆயின், தமிழருக்குத் தரும் ஓவியமாகாது, அவை! பொழுது போக்குக்கு மனமகிழ்ச்சிக்குப் பயன்படத் தக்கவைகளாகத் திகழ்ந்திருக்கும் அந்த ஓவியங்கள். மாளிகைக் கூடங்களில், சீமான்களின் மாடங்களில், இடம் பெற்றிருக்கக் கூடும்! தமிழரின் இல்லங்களில் அல்ல! வள்ளுவர் ஓவியம் அங்ஙனமன்று! தமிழர் வாழும் குடிலெல்லாம், இருந்திடத் தக்கது! இடம் பெறவேண்டியது!! ஏனெனில், தமிழரின் நெஞ்செலாம் நிரம்பிடும் குறள், அந்த ஓவிய வாயிலாகக் கிடைத்திடு மன்றோ! நெஞ்சில் குறள் எனில், வஞ்சகம் வீழ்ந்துபடும், வாழ்வு துலங்கும், தமிழ் நெறி நிலைக்கும், தரணி தழைக்கும்.

தமிழர் எங்ஙனம் ஏற்றம் பெற்று வாழ்ந்தனர் என்பதனைக் காட்டிட வல்லது குறள் எனில், குறள் எத்தகைய கருவூலம் என்பதனை எடுத்துக் காட்ட வல்லதாக வள்ளுவர் வடிவம் இருத்தல் வேண்டும். இருக்கிறது, மகிழ்கிறேன்!

'கற்கக்கசடு அற' என்ற குறள், அறிவு பெற வழி காட்டி நிற்கிறது. ஓவியத்தில் தெரியும் களங்கமற்ற முகத்தோற்றம், 'இவர் தான் இத்தகு குறளைத் தந்திருக்கமுடியும்' என்று எடுத்துக் காட்டி நிற்கிறது.

அஞ்சாமையும் கனிவும் கண்களிலே அழகுற வெளிப்படுகின்றன.

புலியின் கண்கள் அஞ்சாமையை உமிழுகின்றன. மானின் கண்களிலே கனிவு குழைந்து காணப்படும். இரண்டினையும் ஒருசேரக் காண்பது எங்ஙனம்? அறவோர்க்கே அது இயலும். வள்ளுவர் அறவோர் ஆகலான், அவர் கண்களிலே, அஞ்சாமையும் கனிவும் ஒரு சேரக் காண முடிகிறது. திரு. வேணுகோபாலர், பல முறை தமது மனக்கண்ணால் இதனைக் கண்டு கண்டு, மகிழ்ந்து, தீட்டுக்கோல் கொண்டு காட்ட எண்ணி முயன்று, பலமுறை வெற்றி காணது சலிப்புற்று, மீண்டும் மீண்டும் அந்தக் கனிவுடைக் கண்கள் எதிர்நின்று அழைக்க அழைக்க, திடம்கொண்டு, மறுபடியும் முயன்று, இறுதியில் வெற்றி கண்டிருக்க வேண்டும்.

அங்கங்கள் தனித்தனி எங்ஙனம் இருத்தல் வேண்டும் என்று ஆய்ந்தறிதல் எளிதன்று. எனினும், ஓவியத்துறை வல்லார்க்கு இயலாத தொன்று அல்ல! ஆனால், அவையாவும் சேர்ந்து, முழு வடிவமாகத் திகழும் போது காண்போர் எவருக்கும், பொருள் விளங்கி பூரிப்பு எழ வேண்டும். அவ்விதம் ஓவியம் அமைவதிலே தான் சிறப்பு உளது. இதுபோது நமக்குக் கிடைத்துள்ள வள்ளுவர் ஓவியம், இம்முறையில் உளது. எனவே, தமிழர்க்குப் பெரு மகிழ்ச்சி அளிக்க வல்லதாக உளது.

வள்ளுவப் பெருந்தகை இனி அஞ்சல் அட்டைகளிலே அரசோச்சப் போகிறார். அமைச்சரான சுப்பராயன் அவர்கள் பலமிழந்து நொந்து கிடக்கும் தமிழர்க்கு, இந்தச் செந்தேன் தருகிறார். மகிழ்ச்சி! நன்றி!

ஓவியம் காணும் பிறநாட்டார், தமிழரின் தனிச் சிறப்பினை எண்ணத் தலைப்படுவர்.

மனிதனை மேம்பாடுள்ளவனாக வாழச் செய்ய வழி வகுத்த பேரறிவாளனைக் காணுங்கள்.

இருபதாம் நூற்றாண்டின் இணையில்லாக் கருத்து என்று எவை எவைகளைக் கூறிப் பெருமை கொள்கிறீரோ, அந்தக் கருத்துக்களை எல்லாம், ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே எடுத்துரைத்த அறவோனைக் காணுங்கள்!

காடு ஏகாமல், கடுந்தவம் செய்யாமல், வீடுவாழ நாடுவாழும் என்றுரைத்த வித்தகரைக் காணுங்கள்!

நாடு எங்ஙனம் இருத்தல் வேண்டும் என்று நவின்ற நல்லாசானைக் காணுங்கள்!

அரசு எங்ஙனம் அமைத்தல் வேண்டும், அமைச்சர் எங்ஙனம் இருத்தல் வேண்டும் என்பதனை விளக்கி, குடியரசுக் கோட்பாட்டினைத் தந்த குடிமகனைக் காணுங்கள்!

இயற்கையை வடித்தெடுத்துக் காட்டிடும் வள்ளுவனும் வண்ணத் தமிழ் ஓவியனைக் காணுங்கள்!

கல்லாமை, இல்லாமை, பொறாமை என்பன வற்றைக் களைந்தெறியும் அஞ்சாமையை அளித்திட்ட மாவீரனைக் காணுங்கள்!

'காதல் ஓர் அறமே' என்று காட்டிச் சென்ற கவிஞனைக் காணுங்கள்!

இதன்பால் எல்லார்க்கும் எல்லாம் உளது என்று கூறத்தக்க விதத்தில், அமைந்துள்ள அற நூல் தந்த எமது அறிவரசைக் காணுங்கள்! என்றெல்லாம் உலகோர்க்கு நாம் கூற முடியும், இனி நமக்குக் கிடைத்த, நாடாள்வோரும் ஏற்றுக் கொண்டுவிட்ட, வள்ளுவப் பெருந் தகையின் ஓவியத்தைக் காட்டி.

திரு. வேணுகோபாலரின் ஓவியத் திறன் தமிழர்க்கு வாய்ப்பாக அமைந்தது; ஓவியத்திறன் மட்டுமல்ல, அவர் உள்ளப் பாங்கு.

வள்ளுவரின் வள்ளற் றன்மையைத்தான் பாருங்கள்! இன்று நின்று நாளை மறைந்திடும் முறை கூறினோர் பலரும் கோயில் பெற்றனர்! கொட்டுமுழக்குடன், அவர் தம்மை வந்தித்து வழி பட 'பக்தர்' உளர்! காலமெல்லாம் நின்று நிலைக்கத் தக்க கருத்துக் கருவூலத்தைத் தந்தார் அவருக்கு வள்ளுவர்! நாம் தந்தது என்ன? அழகு நகர் அவர் பெயரால்? இல்லை! அவ்வப்போது அரசாள வருவோரின் பெயரெல்லாம் அமைய வேண்டுமே!! இவர் பற்றி எவர் எண்ணுவார்!! மணிமாடம்? இல்லை! வடிவமேகூட அல்லவா இல்லாதிருந்தது!! அக்குறை இன்று தீர்ந்தது! நமக்கு அவர் அளித்தது கருத்துக் கருவூலம்; நாம் அவருக்கு அளித்தது ஏதும் இல்லை.

அஃதே போலவே வள்ளுவர், திரு. வேணு கோபாலருக்கு, தமது வள்ளற் றன்மையால் புகழினை வாரி வழங்குகிறார். தமிழரின் பாராட்டுதல், ஓவியருக்குக் கிடைக்கிறது எனில், எதனால்? வள்ளுவருக்கு வடிவம் அமைத்தார் என்பதனால்!

ஆம்! வள்ளுவர் இஃதே போன்று, தமிழர்க்கு நல்லன பலவும் நல்கும் ஆற்றலுடையார். அவர் 'திருஉரு' காணக் காண, தமிழருக்கு, மகிழ்ச்சியும் பெருமையும் எழல் இயல்பு.

'ஏதுமற்றோம் என்று எண்ணாதீர்; இதோ எமது வள்ளுவர்!' என்று உலகை நோக்கி, நிமிர்ந்து நின்று தமிழர் கூறலாம்!

'எல்லாம் உளது என்று இறுமாந்து கிட வாதீர்; வள்ளுவர் உண்டோ உம்மிடம்?' என்று உலகோரைப் பார்த்துத் தமிழர் கேட்கலாம்!

ஆனால் அவரோ எனில், 'வள்ளுவர் உமக்கு மட்டுமோ சொந்தம்? அவர் உலகக் குடிமகன்! எமக்கும் உரியவர்!' என்று கூறுவர். அஃது உண்மையுங்கூட!

ஆக, வள்ளுவரின் ஓவியம், இங்குமட்டு மல்ல, அறிவு அரசோச்சும் நாடுகளிலெல்லாம் இடம் பெறப் போகிறது!

உலக நாடுகள் பலவும் உறவாடி கேடு களைந்திட முயலும் ஐக்கிய நாடுகள் மன்றத்தின்

மணிமண்டபத்தில் உலகிற் தோன்றிய பேரறிவாளரின் திரு உருவப் படங்களை அமைத்திட வேண்டும். ஆங்கு, நமது வள்ளுவரின் படம் இடம் பெற்று, 'தமிழர் என்றோர் இனம் உண்டு! தனியே அவர்க்கோர் குணம் உண்டு!' என்று, மற்றையோர்க்கு அறிவித்திடல் வேண்டும்.

ஆயின், அந்த நெடுந் தொலைவு செல்வது, முறையா? வள்ளுவருக்கு, நாம் செய்ய வேண்டியதையே இன்னம் சரியாகச் செய்தோமில்லையே! உலக நாடுகள் மன்றத்துக்கு அறிவுறுத்துவது முறையாமோ!! இப்போதுதான் எத்தனையோ கூப்பாட்டுக்குப்பிறகு, அரசாள்வோர், அஞ்சல் அட்டையில் பொறித்திட முன் வந்துள்ளனர், வள்ளுவர் படத்தை.

நமது நெஞ்சலாம் இனி அத் திருவுரு இடம் பெறட்டும்! திருவினைப் பெறுவோம்! தரணிக்குத் தருவோம்!.

வாழ்க குறள்நெறி !

வெல்க குறள்நெறி ! ★

★

யாதெனின்

வெண்மை யெனப்படுவ(து) யாதெனின் ஒற்றுமை
யுடையம் யாமென்னுஞ் செருக்கு

டாக்டர் மு. வரதராசனார்,
எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.

★

மனிதன் எவ்வளவுதான் நுட்பமான கருத்துக்களையெல்லாம் உணர்ந்த போதிலும், சில வேளைகளில் பருமையான வடிவத்தையும் காண விரும்புகிறான். அதற்குக் காரணம் மனிதனுடைய மனம் வளர்ந்த வளர்ச்சிதான். திருவள்ளுவருடைய கருத்துக்களை நுணுகி நுணுகி ஆராய்ந்த போதிலும், திருவள்ளுவருடைய வடிவம், உருவம் ஒன்று இருக்குமானால், அதன் வாயிலாக அந்தக் கருத்துக்களுக்கெல்லாம் தந்தையாக இருந்த ஒருவரைக் காண்பது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்படுகிறது. மனம் வளர்ந்தபிறகு, நுட்பமான கருத்துக்களை யெல்லாம் எண்ண முடிகின்றது. ஆனால், இந்த நுட்பமான அறிவின் வளர்ச்சிக்குக் காரணம் புலன்களின் வழியாக மனம் பெற்ற உணர்வுகள்தான். கண்ணின் வழியாகவும், செவியின் வழியாகவும் வளர்ந்தது மனத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு. அந்த வளர்ச்சியின் பயனாக, நுட்பக் கருத்துக்களை எண்ணக் கற்றுக் கொண்ட போதிலும், ஓய்ந்த நிலையிலோ, அல்லது சோர்ந்த நிலையிலோ, பருமையான வடிவத்தைப் பற்றிக் கொள்ள விரும்புகின்றது. ஆகவே, பைபிள் படிக்கின்றவர்கள் ஏசுநாதருடைய கருத்துக்களில் எவ்வளவுதான் திளைத்த போதிலும், உருகி நின்ற போதிலும், ஏசுநாதருடைய வடிவத்தையும், அவர்களுடைய மனக் கண் காண விரும்புகிறது. அதுபோலவே, புத்தருடைய உபதேசங்களில் எவ்வளவு ஈடுபட்டிருந்தபோதிலும், மனக்கண் அவருடைய வடிவத்தையும் காண விரும்புகின்றது.

திருக்குறளைப் படித்தவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு ஆசை, வேட்கை இருப்பது இயற்கை. இவ்வளவு உயர்ந்த கருத்துக்களை நமக்கு வழங்கிய ஒரு பெருமகன், அவர் அறவோராயிருந்தார், சிறந்த அறிஞராயிருந்தார், நல்ல கலைஞரா யிருந்தார் என்று மட்டும் அறிந்து விட்டுவிட மனத்தால் முடிய வில்லை. இதற்காக நம்முடைய முன்னோர்களும் முயற்சி செய்திருக்கின்றார்கள். அந்த முயற்சியின் பயனாக பலவேறு வடிவங்களை யெல்லாம் எழுதி யிருக்கின்றார்கள். ஆனால், நம் காலம் வேறு; நம்முடைய முன்னோர்கள் காலம் வேறு. நம்முடைய முன்னோர்கள் காலத்தில், மக்கள் தமிழரென்று ஒன்று பட்டு வாழ்ந்த ஒரு நிலை, சங்க காலத்திற்குப் பிறகு மெல்ல மெல்லக் குறைந்து கொண்டே வந்தது. தமிழ் நாட்டு மக்கள் சைவரென்றும், வைணவரென்றும், சமணரென்றும், பௌத்தரென்றும்— அப்படிப் பிரிந்திருப்பதிலே முனைந்திருந்தார்களே தவிர, எல்லோரும் சேர்ந்து தமிழர் என்று சொல்லிக் கொள்வதிலே அவ்வளவு முன் நிற்கவில்லை. அதனாலே, திருவள்ளுவருடைய திருக்குறளைப் பயன் படுத்திக் கொண்டார்கள். அந்தக் கருத்துக்களை யெல்லாம் பாராட்டினார்கள். வழி வழியாக நமக்கெல்லாம் தந்துவிட்டுப் போனார்கள். விளக்கமெல்லாம் கொடுத்து, நம்மை யெல்லாம் நல்ல வழியிலே வாழ வைக்க வந்த திருவள்ளுவருடைய பெருமை யெல்லாம் நமக்கு சொல்லிவிட்டுச் சென்றார்கள். ஆனால், திருவள்ளுவர் இவர்தான் என்று காட்டும்போது, சமணராகவே காட்டி விட்டுச் சென்றார்கள் சிலர், சைவராகவே காட்டி விட்டுச் சென்றார்கள் சிலர், வைணவராகவே காட்டி விட்டுச் சென்றார்கள் சிலர். கடைசியாக தமிழ் நாட்டிலே, சில நூற்றாண்டிலே திருவள்ளுவர் சைவக் கோலத்தில் விளங்குகின்ற ஒரு வடிவந்தான் நின்றது. ஆனால், திருக்குறளை நடுநிலையில் நின்று ஆராய்ந்து பார்க்கும்போது, திருவள்ளுவர் இந்தக் கோலங்களுக்கு அவ்வளவாக மதிப்புத் தராத ஒருவர்; புதுமை நாட்டம் கொண்டவர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பிறந்த அந்தப் பெருமகனார், இந்தக் காலத்தில் நம்மிடையே வாழ்ந்த காந்தியடிகளைப் போல, ஒரு பொதுமை நெறியை மேற்கொண்டு, தோற்றத்திலே தாம் பிறந்த சமயத்தையோ, அல்லது, தாம் வழிபடும் முறைகளையோ— இவற்றையெல்லாம் காட்டிக் கொள்ளாமல், மக்கள் அனைவருக்கும்—இன்னும் சொல்லப் போனால், உலக மக்கள் அனைவருக்கும் பொது மனிதராக விளங்க வேண்டுமென்ற ஆர்வமுடையவராக வாழ்ந்திருப்பார் என்று எண்ண இடம் இருக்கின்றது. அவருடைய திருக்குறளே சான்று. அவருடைய திருக்குறளிலே உலகம்

முழுவதும் போற்றத் தக்க புதுமைக் கருத்துக்கள் தான் நிலவுகின்றன. தமிழ் என்ற சொல்லும் இல்லை அந்த நூலிலே; தமிழகம், தமிழ் நாடு என்ற பேச்சும் இல்லை. அவர் செய்ததாகச் சொல்லப் படுகின்ற அந்த நெய்தல் தொழிலுக் கும் அங்கே இடமில்லை. அவர் சைவரென்றோ, வைணவரென்றோ, சமணரென்றோ, பௌத்த ரென்றோ துணிந்து சொல்வதற்கு வேண்டிய சான்றுகளுமில்லை!

•

உலகத்தில் எங்கெங்கே ஒளி உண்டோ, எங்கெங்கே சிறந்த கருத்துக்கள் உண்டோ, உயர் நூல்களுண்டோ, அவற்றையெல்லாம் நாடுகின்ற வேட்கை இருந்தது அவருக்கு. வாழ்க்கையின் அனுபவத்தைக் கொண்டு, உண்மையின் ஒளியைக் கண்டு, அதை உலகத் துக்கு, உலக மக்களுக்கெல்லாம் பயன்படும் வகையிலே பரப்ப வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இருந்தது. அவர் வாழ்க்கை ஒரு தனி வாழ்க்கை. அந்த வாழ்க்கையைப் பற்றி நமக்குக் கிடைக்கின்ற கதைகளையெல்லாம் விட்டு விட்டு நாம் எண்ணினால்தான் அவருடைய உயர்ந்த வாழ்க்கை விளங்கும்.

திருக்குறள்தான் அவர் வாழ்க்கையை நமக்குச் சொல்லுகின்ற ஒரு சிறந்த நூல். அந்த திருக்குறளிலே, அவரை ஒரு பக்கம் புத்தர் போல் பார்க்க வேண்டியதாயிருக்கின்றது. மற்றொரு பக்கம் சாக்ரடீஸ் போன்ற ஒரு ஞானியாகக் காண வேண்டியிருக்கின்றது. இன்னொரு பக்கம் ஷேக்ஸ்பியர், காளிதாசர் போன்ற சிறந்த கலைஞ ராகக் காண வேண்டியிருக்கிறது. இப்படி வாழ்க் கைக்கு இன்றியமையாத மூன்று பகுதிகளிலும் சிறந்திருந்த ஒரு பெரியவருடைய வடிவத்தை நமக்கு உணர்த்த வேண்டுமானால், அவருடைய உருவத்தைத் தீட்டுகின்ற ஓவியர் மிகப் பொறுப் பாக இருக்க வேண்டும். இந்தப் பெரும் பொறுப்பை உணர்ந்தால்தான் ஓவியர் நமக்கு பயனுள்ள, நல்ல வகையிலே அந்த ஓவியக் கலையைத் தந்துவிட்டுச் செல்ல முடியும்.

ஏனென்றால் திருவள்ளுவர் அரசியல் ஞானி மட்டுமல்ல, அறவோர்க்குத் தலைமை தாங்கும் அற வோர் மட்டுமல்ல, கலைஞருக்குத் தலைவராகிய கலைஞர் மட்டுமல்ல அவருடைய வாழ்க்கையிலே இந்த மூன்றும் முப்பாலாக விளங்கின. மூன்று பகுதிகளாக விளங்கியவை இவை யெல்லாம். புத்தராக இருந்த அவருடைய முகத்திலேயே, அரசியல் அறிவொளியைப் படைக்க வேண்டும். புத்தருடைய அறத்தின் தெளிவைக் காட்டும் கண் களிலே, அரசியல் ஒளியைக் கண்ட நான், அடுத்தாற்போல கலைஞருடைய கலை ஆர்வத்தை யும் அதிலே காணவேண்டும்.

திருவள்ளுவருடைய கண்களை அமைப்பது எவ்வளவு பெரிய பொறுப்பு. அறவோரின் அருள் நெஞ்சத்தை அந்தக் கண்கள் காட்ட வேண்டும். அரசியல் ஞானியின் திட்பத்தையும், நுட்பத்தை யும் அந்தக் கண்கள் காட்டவேண்டும். கலைஞ ருடைய கலை ஆர்வத்தையும், மகிழ்ச்சியையும் அந்தக் கண்கள் காட்ட வேண்டும். உடம்பிலேயே மிகச் சிறந்த பகுதி முகம். அந்த முகத்திலே மிக நுட்பமான பகுதி கண். அந்தக் கண்களைத் தீட்டு வதற்கே பெருமுயற்சி வேண்டும். அதற்கு ஏற்றாற்போல ஒரு இயைவு கொள்ளவேண்டும் முகத்திலே உள்ள மற்றப் பகுதிகளெல்லாம். நெற்றி, இதழ், மூக்கு இவைகளெல்லாம் ஒத்து, இயைந்து அமைய வேண்டும். அவருடைய கை முனைகள், கால்விரல்முனைகள்—இவைகளெல்லாம் அவருடைய பெருவாழ்வைக் காட்டக்கூடிய வகை யிலே, அந்த வாழ்க்கையின் மென்மை, திட்பம் எல்லாவற்றையும் எடுத்துக் காட்ட வேண்டும். இவ்வளவு பொறுப்போடு பல கூறுகளையும் எண்ணியெண்ணிப் பார்த்து ஒரு ஓவியர் அந்தத் திருக்குறளுக்கே வடிவம் தருவதுபோல முயன் றால்தான் திருவள்ளுவருடைய ஓவியத்தை நன்றாகத் தீட்ட முடியும்.

அவருடைய வாழ்க்கையைப் பற்றிய கதை களை மனதிலே வைத்துக்கொண்டு எழுதினால், அது உலகம் போற்றத் தக்க ஒரு சிறந்த உருவமாக விளங்க முடியாது. வாழ்க்கையைப் பற்றிய கதைகள் ஆராய்ச்சிக்கு நிற்காத கதைகளாக இருக்கின்றன. ஆனால் அவருடைய திருக்குறளிலே உள்ள உண்மைகள், இன்று மட்டுமல்ல, இன்னும் எத்தனை தலைமுறை ஆராய்ந்தாலும் போற்றத் தக்க உண்மைகளாக உள்ளன.

ஆகவே, நூலை வைத்துக்கொண்டு அந்த நூலாசிரியருடைய ஓவியத்தைத் தீட்டுவது மிகப் பெரும் கடமையாகும். அத்தகைய பொறுப்பான கடமையை நல்ல முறையிலே, நாமெல்லாம் மகிழத்தக்க வகையிலே, நிறைவேற்றியிருக்கின்றார் கலைஞர் திரு. வேணுகோபால் சர்மா அவர்கள்.

திருவள்ளுவருடைய ஓவியத்தை அழகாகக் காணவேண்டுமென்ற வேட்கையுடையவன் நான். நான் ஓவியனாகப் பிறக்கவில்லை. ஆனால் எனக்கு ஒரு வேட்கை இருந்தது. திருவள்ளுவருடைய உருவத்தைத் தீட்டுகின்ற வாய்ப்பிருந்தால் இப்படியிருக்கலாம், அப்படியிருக்கலாம் என்று அவருடைய குறள்களிலே ஒவ்வொன்றை எண்ணி யெண்ணி மகிழ்ந்திருப்பது உண்டு.

திருவள்ளுவருக்குப் பெரும் தொந்தியும், நல்ல பருத்த தசைகளும் அமைந்த அந்த வடிவங்களைப் பார்த்துப் பார்த்து என் மனத்திலே நேர் மாறான எண்ணம் வந்து விட்டது. திருவள்ளுவர் மெலிந்தவராக, இளைத்தவராக இருக்க வேண்டும், குறைந்த உணவு உண்டவராக இருக்க வேண்டும், என்றெல்லாம் எண்ணினேன் நான். திருவள்ளுவருக்கு என்ன பின்னணி அமைக்கலாம் என்றெல்லாம் எண்ணிப் பார்த்ததுண்டு. ஓவியன் இல்லாவிட்டாலும் இப்படிப்பட்ட கற்பனைகள் எனக்கு எழுந்ததுண்டு. ஆனால் திரு வேணுகோபால் சர்மா அவர்களின் இந்த ஓவியத்தைப் பார்த்த பிறகு எனக்கும் பின்னணி வேண்டாம் என்றே பட்டுவிட்டது.

மிகவும் இளைத்தவராக ஏன் திருவள்ளுவரைக் காட்ட வேண்டும். இந்த உலகத்தில் அறிவொளியை நாடுகின்ற கண்கள், அறிவொளியைப் பரப்புகின்ற முகம், கை, கால். இப்படிப்பட்ட தொண்டு செய்கின்ற வாழ்க்கை இப்படி அமையட்டும். அறிவைத்தேடும் வாழ்க்கை, அறிவைப் பரப்பும் வாழ்க்கை. ஒளியைத் தேடி ஒளியைப் பரப்பும் சிறந்த கதிரவனாக அந்தக் கண்களிலே வீசுகின்ற ஒளி விளங்கவேண்டும் என்று அவர்கள் விரும்பித் தீட்டி யிருக்கின்றார்கள். அவர்கள் விரும்பிச் செய்த முயற்சியிலே வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். அவரை நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

மக்கள் இனி நல்ல வடிவத்தைக் காண வேண்டும். நல்ல உருவத்தைக் காண வேண்டும். பள்ளிக்கூடத்துக் குழந்தைகள் முதல்கொண்டு அனைவரும் திருக்குறளை இயற்றித் தந்த ஒரு பெருமகனாரின் வடிவம் இது என்று காணும்போது, அது உயர்ந்த நோக்கங்களையெல்லாம் உணரக் கூடிய வகையிலே அவர் உள்ளத்திலே ஒரு வடிவம், ஓர் உருவம் பதியுமாறு செய்த கலைஞர் அவர்களுக்கு என் நன்றி உரியதாகுக. அவர்கள் வாழ்க்கையிலே இளங்கோவடிகளுக்கும் இப்படி ஒன்று தீட்டித்தந்தால் மிகவும் மகிழ்வோம். வெல்க அவர்தம் முயற்சி. ★

★

யாதெனின்

அஃகாமை செல்வத்திற்(கு) யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்

என்னுடைய ஆசிரியப் பிறகுகிய மகா மகோபாத்தியாய டாக்டர் அய்யர் அவர்கள் ஒரு நாள் காலஞ்சென்ற ராஜ ராஜேஸ்வர சேதுபதி அவர்களைப் பார்க்கப் போனார்கள். அப்பொழுது அவர் ஒரு புதுமையைச் சொன்னார். யாரோ ஒரு பேரறிஞர், ஓவியர் நல்ல ஓவியர் நல்ல ஓவியங்களை யெல்லாம் எழுதுவதாகச் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் அந்த ஓவியர் எல்லோரையும்போல ஏதோ ஒரு படத்தையோ அல்லது உருவத்தையோ பார்த்து எழுதுகிறவர் அல்ல. நாம் மனத்திலே ஒருவரை நினைத்தால், அந்த நினைக்கின்ற உருவத்தையே எழுதுகின்ற ஆற்றல் பெற்றவர் என்ற அதிசயத்தை சேதுபதி அவர்கள் சொன்னார்கள். அது உண்மையோ, இல்லையோ அதைப் பற்றி அப்பொழுது ஆராய்ச்சி பிறக்கவில்லை. ஆனால், அய்யர் அவர்கள் "அப்படியா? அவர் எங்கே இருக்கிறார்?" என்று கேட்டார்கள். சேதுபதி அவர்கள் கொஞ்சம் சிரித்துக் கொண்டார்கள். "நீங்கள் பிள்ளையவர்களுடைய படத்தை எழுத ஆசைப் படுகிறீர்களோ?" என்று கேட்டார். முன்னாலே கேட்டபோது உண்டான ஆச்சரியத்தைவிட இந்தக் கேள்வியிலே அதிக ஆச்சரியப் பட்டார்கள் அய்யரவர்கள். "அது எப்படித் தெரியும்?" என்று கேட்டார்கள். "ஏன்? நீங்கள் பிள்ளையவர்களைவிட வேறு யாரை உருவம் பார்க்கவேண்டு மென்று விரும்புவீர்கள்?" என்று சொன்னார்களாம். ஆனால், அப்படி உள்ளத்திலே இருக்கிறதை உருவமாக்குகிறவர்கள் யாருமில்லை. சோதனைக்காக சேதுபதி அவர்கள் அப்படிச் சொன்னார்களாம்.

திருவள்ளுவர் படத்தை நான் பார்க்கிறபொழுது, எனக்கு இந்த வரலாறு ஞாபகம் வந்தது. நமக்கெல்லாம் மிகவும் அழகான பொருளைக் காணவேண்டும் என்ற ஆசை இருக்கிறது. பாராத பொருளிலே குணங்களோ, வேறு திறமைகளோ இருப்பதாகக் கேட்டால் அதைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். வேறு புலன்களினாலே நுகர்கின்ற பொருளுக்கு, கண்ணினாலே பார்க்கின்ற உருவம் அமைந்தால், ஏதோ அதற்கு தனிச் சிறப்பு இருப்பதுபோல மனிதன் மனத்திற்குப் படுகிறது. கம்பன் என்று சொன்னாலே அவனுடைய உருவத்தை நாம் பாராவிட்டாலும் நாமாக மனத்திற்குள் ஒரு உருவத்தை நினைக்கிறோம். உருவமும், பெயரும் இல்லாவிட்டால் மனம் நினைக்க முடியாது. வேதத்தாலே சொல்லப்படுகின்ற பரம்பொருளுக்கு உருவம் இல்லை. பெயர் இல்லை என்றுதான் சாத்திரங்கள் கூடச் சொல்லுகின்றன. ஆனால், மனம் படைத்த

திரு. கி. வா. ஜகந்நாதன்

*

மனிதனுக்கு அந்தக் கடவுளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால் அவனுக்கு உருவமும் வேண்டும். பெயரும் வேண்டும். இதுதான் அனுபவபூர்வமான உபாசனை. கடவுளுடைய திருவுருவங்கள் பல என்று சொல்வது தவறு. உருவம் இல்லாத கடவுளுக்கு, உருவத்தில் நாட்டமுடைய மனிதன் கொடுத்த உருவங்கள் பல. ஆகவே, அந்த உருவத்தைக்காணும் பொழுது கடவுளுடைய தத்துவங்களெல்லாம் என்ன, என்ன என்று அவன் கல்வியினாலும், கேள்வியினாலும் உணர்ந்தனவற்றையெல்லாம் நினைக்கிறான். நினைக்கும்படியான அறிகுறிதான் ஆண்டவனுடைய திருவுருவம். ஆகவே, குணங்களையும், விளையாடல்களையும் தெரிந்து கொண்ட மூர்த்திக்கு உருவம் கொடுத்த பிற்பாடு நமக்கு பற்று அதிகமாகிறது. திருவள்ளுவரும் ஒரு வகையில் தெய்வம்தான். தம்முடைய உயர்ந்த பண்பினாலே, உலகத்தாருக்கு இறவாத நூலைக் கொடுத்ததனாலே மனித ஜாதியையே உயர்த்துகின்ற ஒரு பெரிய படைப்பையும் உண்டாக்கினதினாலே அவர் தெய்வம். மற்றொரு வகையிலும் அவர் தெய்வம். தெய்வத்தைக் காண முடியாது. பேச முடியாது. நமக்கும் திருவள்ளுவரோடு இப்பொழுது பேச முடியாது. அவரைக் காணவும் முடியாது. கடவுளைக் காண முடியவில்லை என்று சும்மா இருக்கிறோமா? எத்தனை படங்கள், எத்தனை கோயில்கள் சிருஷ்டி செய்து விட்டோம். அதுபோல திருவள்ளுவரைக் காண முடியாதென்று சும்மா இருக்கலாமா? நம்முடைய ஆசையைத் தடுக்க முடியாது. திருவள்ளுவருக்கும், நமக்கும் தொடர்பு இல்லாமலிருந்தால் அவரைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. நாளுக்கு நாள் அவருடைய தொடர்பு விரிந்து வருகிறது. ஒரு காலத்திலே அவர் பிறந்த ஊரிலே அவருக்குத் தொடர்பு இருந்தது, அவர் காலத்தில் நாளடைவிலே அது பரந்து பரந்து, தமிழ் நாடு முழுவதற்கும் அவருடைய தொடர்பு ஏற்பட்டது. பின்பு இந்தியா முழுவதற்கும் ஏற்பட்டது. இப்பொழுது உலகம் முழுவதுக்குமே சொந்தக்காரராகிவிட்டார் வள்ளுவர். நானா சொல்லுகிறேன். பாரதியார் சொல்லுகிறார்.

"வள்ளுவன் தன்னை உலகினிற்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று. இனி இன்னும் சில காலம் போய் அமெரிக்கா நாட்டினர் சந்திர மண்டலத்தி

லேயோ, செவ்வாய் மண்டலத்திலேயோ போய் குடியேறி விட்டால் அப்பொழுது வள்ளுவர் இந்த உலகத்திற்கு மாத்திரம் சொந்தமல்ல. மனிதன் வாழ்கின்ற எல்லா உலகத்திற்குமே சொந்தமானவராகி விடுவார். அதாவது சர்வ பிரபஞ்சத்துக்கும் ஒரு தனி கவிஞன் வேண்டும். கருத்தினாலே பிரபஞ்சங்களையெல்லாம் அளக்கின்ற பேராண்மையுடைய ஒருவன் வேண்டுமென்றால், உலகத்திலே அப்படி ஒரு புலவனைக் கண்டு கொள்வது எளிது அன்று. நிச்சயமாக திருவள்ளுவர் முன் வரிசையிலே இருப்பார் என்பதிலே சந்தேகமில்லை. ஆனால், அவருடைய பெருமை வர வர கடவுளையும் மிஞ்சிப் போய்விடுமோ என்று தோன்றுகிறது. இப்படிச் சொன்னால் உங்களுக்குக் கொஞ்சம்கோபம் வரலாம். கடவுளை நம்பாத மனிதர்கள் இருக்கிறார்களல்லவா? அங்கே திருவள்ளுவர்இருக்கிறார். ஆகவே கடவுளையும் மிஞ்சினவர் என்று சொல்வதில் என்ன தவறு சொல்லுங்கள்.

மனிதன். உள்ளம் படைத்த மனிதன். எங்கே எங்கே இருக்கிறானோ, அவனுக்கெல்லாம் தெய்வமாக, வணங்குவதற்குரிய பொருளாக இருப்பவர் திருவள்ளுவர், இதை, திருவள்ளுவர் இருந்து சாதிக்கவில்லை. திருவள்ளுவருடைய உருவம், உண்மையான உருவம் அல்லது அவர் இயற்கையாகப் பெற்ற உருவம் நமக்குக் கிடைக்கவில்லை. இன்றைக்கு நாம் திருவள்ளுவராகப் பார்ப்பது திருக்குறள் தான். திருவள்ளுவர் என்றால் ஆகு பெயரால் திருக்குறள் என்கின்ற வழக்கு தமிழ் நூல்களிலே இருக்கிறது. ஆனாலும் மனிதனுடைய ஆசை விடுகிறதா? குணங்களையும், குறையும் வைத்துக் கொண்டு திருவள்ளுவர் மிகச் சிறந்தவர் என்று சொல்லிக் கொள்ளும் பொழுதே ஒவ்வொருவனும் தன்னுடைய மனத்திற்குள்ளே ஏதாவது ஒரு உருவத்தைக் கற்பித்துக் கொள்கிறான். இப்படி கற்பித்துக் கொண்ட உருவம் அழிந்து போகிறது. அப்படியில்லாமல், திருக்குறளுக்கு எப்படி தமிழ் வடிவம் இருக்கிறதோ அதுபோல திருவள்ளுவருக்கும் ஒரு தமிழ் வடிவம் இருக்க வேண்டும். தமிழ் என்றால் ஏதோ 'அ' முதல் 'ன்' வரை இருக்கிறதே அந்தத் தமிழைச் சொல்ல வில்லை. இனிமையே உருவாக ஒரு தமிழ். திருக்குறள் இனிமையே வடிவான ஒரு உருவம். அதை இயற்றிய, அதனைப் படைத்த பிரம்மாவாகிய திருவள்ளுவர் இருக்கிறாரே, அவருக்கும் இனிமையான வடிவம் வேண்டும். இனிமை என்று சொன்னால் நாம் வாயிலே போட்டுக் கடித்துக்கொள்வது அல்ல. உருவம் கண்ணுக்கு இனிமையாக இருக்க வேண்டும். கண்ணுக்கு புறக்கோலத்திலே இனிமையாக இருந்தால் மாத்திரம் போதாது. உள்ளே இருக்கின்ற ஆற்றலைக் காட்ட வேண்டும். ஏதோ புறக்கோலத்தில் அழகாக வண்ணம் தீட்டி விட்டால் ஓவியம் என்று நினைக்கிறார்கள். அது பொய். அது ஓவியம் அன்று. உள்ளக் கருத்தையெல்லாம் காட்டக் கூடியதாக ஓவியம் இருக்க வேண்டும்.

மணிமேகலையிலே ஒரு அடி வருகிறது.

''ஓவியன் உள்ளத்து உள்ளியது வியப் போல்'' என்று சொல்லுகிறான் புலவன். ஓவியத்தைக் கண்டவுடனே, "அடடா! என்ன வர்ணம்! என்ன வடிவு!'' என்று அவன் சொல்லவில்லை. இதை எழுதின சித்திரக்காரன், சிந்தனையிலே எவ்வெவற்றையெல்லாம் மனத்திலே கொண்டு, அவற்றுக்கு வடிவம் கொடுத்திருக்கிறான் என்று ஆச்சரியப்பட்டான் அவன். ஆகவே, புறத்திலே இருக்கிற உருவம் மாத்திரம் பெருமை தருவது அன்று. உருவத்தின் ஊடே புதைந்திருக்கின்ற உள்ளுறை, அதுதான் ஓவியத்தினுடைய கருவாக இருக்கவேண்டும்.

மன்மதன் சீதையினுடைய உருவத்தை எழுத ஆரம்பித்தான். அவனுக்கு வெறும் அங்கங்கள்தான் தெரியும். சீதை அங்கத்தினுடைய குவியல் அல்லவே! சீதை பண்பாட்டிற்கெல்லாம் ஒரு பெரிய திருவுருவம். பண்புகளெல்லாம் சேர்ந்த திருவுருவம். பண்புகளெல்லாம் சேர்ந்த ஒரு உருவம் என்று கம்பன் பேசுகிறான். ஆகவே, சீதையினுடைய உருவத்தை எழுத வேண்டுமானால், சீதையினுடைய பண்புகளை நன்றாகத் தேர்ந்து கொண்டு அந்தப் பண்பினுடைய அறிகுறிகளாகிய உருவத்தைத் தேர்ந்து எழுத வேண்டும். அப்படியில்லாமல் ஆசைப்பட்டான் மன்மதன்-அழகு ராஜா!

> ''ஆதரித்து, அமுதில் கோல் தோய்த்து
> அவயவம் அமைக்கும் தன்மை
> யாது எனத் திகைக்கும் அல்லால்
> மதனுக்கும் எழுத வொண்ணாச்சீதை''

என்று கம்பன் பேசுகிறான்.

அவனுக்கு அங்கத்தை எழுதவேண்டும். அங்க சமுதாய சோபிதாம் சீதை என்று நினைத்தான், பாவம்! அறியாதவன். ஆனால் குணங்களால் நிறைந்த பெருமாட்டி ஆகையினாலே அந்த குணங்களை சிந்திப்பதற்கு ஆற்றல் இல்லை.

திருவள்ளுவரும் அப்படித்தான். குணங்களைச் சிந்திக்கின்ற ஆற்றல் உள்ளவர். குறளிலே அவருடைய குணங்களெல்லாம் நிரம்பியிருக்கின்றன. அவற்றையெல்லாம் சிந்திக்கும் ஆற்றலுள்ளவன் தான் அந்த உருவத்தை எழுதலாம். ஏதோ, கையிருக்கிறதென்று சித்திரத்தை எழுதலாம் என்று நினைக்கிறார்கள். அதைக்கூட கம்பன் சொல்கிறான், "கையிருந்தால் போதாது தம்பி! கண்ணிருந்தால் போதாது. கருத்து வேண்டும்" என்று.

"கருத்திலான் கண்ணிலான் ஒருவன்—சித்திரம் [கைகொடு

திருத்துவான் சித்திரம் அனைய."

என்று சொல்கிறார். வெறும் கையாலேயே எழுதி விடலாம் என்று நினைக்கக் கூடாது. கண்ணாலே பார்க்க வேணும். அதைவிட அகக் கண்ணாலே நன்றாக சிந்திக்க வேண்டும். இப்பொழுது அகக் கண்ணாலே சிந்திப்பதற்கு வள்ளுவரைப் பற்றிய செய்திகள் நமக்கு நிறம்பக் கிடைக்கின்றன. ஏதோ கதையாக வழங்குகின்ற வரலாறுகளை நான் சொல்லவில்லை. திருக்குறளைக் காட்டிலும் வள்ளுவருடைய உயர்ந்த குணங்களைக் காட்டுவதற்கு வேறு அறிகுறி எங்கே இருக்கிறது? திருக்குறளைப் போல ஒரு அழகான, இனிமையான, முழுமையான, உண்மையான, நுட்பமான நூல் உலகத்திலே ஒன்று மில்லை என்று சொல்லிவிடலாம். அந்த நூலைத் தந்தவன் எப்படிச் சிந்தித்திருக்க வேண்டும்? பல ஆயிரம் ஆண்டு வாழ்ந்த மனித ஜாதியிலே நாகரிகப் பிழம்பாயிருக்கின்ற ஒருவன் தான். அதைச் செய்யமுடியும். ஆகவே அவன் பலகாலம் சிந்தித்தான். சிந்தித்துச் சிந்தித்து தன்னுடைய உள்ளத்திலே ஆழ்ந்தான். ஆழ்ந்து ஆழ்ந்து கவி வடிவம் கொடுப்பதற்கு யோசித்தான். கற்பனையைப் பரப்பினான். கடைசியிலே முழு உருவாகக் குறள் தோன்றியது.

ஆகவே, அம்மாவும் அப்பாவும் பெற்ற திருவள்ளுவன் அல்ல, திருக் குறளைச் செய்யவில்லை. தானே ஒரு உருவத்தை ஏற்றுக் கொண்டு, ஆழ்ந்த சிந்தனையெல்லாம் தன்னுடைய கண்ணிலே ஒளியாகப் படர, சிறந்த கற்பனையெல்லாம் தன்னுடைய முகத்திலே முறுவலாக மலர, மிகவும் அமைதியான நிலையில் இருந்து அதனை யாத்திருக்க வேண்டும். குறளைப் படைத்த வள்ளுவருடைய சிந்தனை ஆயிரம், ஆயிரம் புயல்கள் எழுந்த சிந்தனையாகத்தான் இருக்க வேண்டும். அப்படி எழுந்த புயலெல்லாம் அடங்கி, கவி உருவாக வர வேண்டும்.

பிரசவ வேதனைப் படும் போது அம்மா எப்படி யெல்லாம் துடிக்கிறாள். துடித்துக் குழந்தை வெளி வந்தவுடனே போய்ப் பாருங்கள்; அவளுடைய குரல் தோன்றாது. குழந்தையினுடைய குரல்தான் இருக்கும். அவள் ஆய்ந்து, ஓய்ந்து, அமைதியே உருவமாகக் கிடப்பாள்.

இப்பொழுது, திருவள்ளுவரை எப்படிப் படைக்க வேண்டும். பெரிய புயலையுடைய முகத்தோடு படைப்பதா? இல்லை. புயலெல்லாம் வந்து ஓய்ந்த பிற்பாடு, குழந்தையைக் கண்ட ஒரு நிலை. ஆனால் ஒரு இன்ப வேதனை, இணைப்பின் சோர்வு அமைந்த ஒரு எல்லை. அது கண்ணிலேயும், முகத்திலும் தோன்ற வேண்டும். பிரசவம் ஆன பிற்பாடு அந்தக் குழந்தையைக் கண்ட மகிழ்ச்சி. ஆனால், அதற்கு முன்னாலே பட்ட வேதனையினுடைய ஒரு தளிர்; இவைகளெல்லாம் அமைய வேண்டும். வேதனை என்றால் துன்பம் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. துன்ப வேதனை. Sweet Agony. சிந்தனைதான் அந்த வேதனை. சிந்தனையினுடைய மலர்ச்சிதான் கற்பனை. கவிதைதான் குழந்தை. ஆக, சிந்தனையாகிய வேதனைக்கு அப்பாலே, கற்பனையாகிய நம்பிக்கையிலே, கவியாகிய ஒரு குழந்தை பிறந்தது.

இப்பொழுது திருவள்ளுவர் படத்தைப் பாருங்கள். எல்லாரையும் போல நேரே பார்க்காமல், யாரையோ பார்த்துச் சிரிக்காமல் இந்தப் படம் இருக்கிறது என்று நினைக்கலாம். எங்கேயோ ஆழ்ந்த யோசனையிலே இருக்கிறார். ஆழ்ந்த கடலிலே முத்தெடுத்தவர். முத்தைக் கொண்டு வருகின்ற அந்த நிலையிலே ஆழமும் இருக்கிறது, தோற்றமும் இருக்கிறது. இந்த இரண்டும் அவருடைய திரு முகத்திலே புலனாக வில்லையா? வந்து பாருங்கள். அவருடைய கண்கள் எதைக் காட்டுகின்றன? ஆழ்ந்த யோசனையைக் காட்டுகின்றன. அவருடைய உதடுகள் மலர்ச்சியைக் காட்டுகின்றன. உதடு மூடவில்லை. நிரம்பத் திறக்கவுமில்லை. பல்லெல்லாம் காட்டுகின்ற சிரிப்பு இருக்கிறதே, அது சாமான்யச் சிரிப்பு. ஆனால், அந்த உதடுகள் சிரிக்கின்றன. தெரிகின்றதா உங்களுக்கு? கண்ணிலே உள்ள ஆழம். உதட்டிலே உள்ள மலர்ச்சி ஆகிய இரண்டும் வேதனையும், இன்பமும் கலந்த ஒரு சூழ் நிலை. சிந்தனையின் முடிவிலே, கற்பனையின் செறிவிலே, கவிதை என்ற குழவி பிறந்து விட்டது. ஆம். திருக்குறள் என்ற கவிதை. சிறந்த சிரஞ்சீவிக் குழந்தை. இன்று நம்முடைய நாவிலே விளையாடி, உல

கத்து மக்களுடைய கருத்திலேயும் விளையாடு கின்ற குழந்தை. அந்தக் குழந்தையைப் படைத்த அன்னையைப் பார்க்கிறோம். ஆடவனுடைய உருவத்திலே ஒரு அன்னை இருந்தால் எப்படி இருக்க முடியும்? இதோ, நம் கண் முன்னாலே இருக்கும் திருவள்ளுவருடைய உருவம்தான்.

அந்த உடம்பிலே ஒரு குழைவு தோன்றுகிறது. ஆனால், தளர்ச்சி தோன்றவில்லை. குழைவுக்கும், தளர்ச்சிக்கும் வித்தியாசம் என்ன தெரியுமா? குழைவிலே முறுக்கேறிய மிடுக்கு இராது. தளர்ச்சியிலே உள்ள வளைவு இராது. வள்ளுவனைப் பாருங்கள். நிமிர்ந்து நிற்கிறார். ஆனால் அவருடைய கண்ணிலே ஒரு கனிவு. அவருடைய கையிலே ஒரு நெகிழ்ச்சி. அவருடைய மார்பிலே விசாலத்தோடு கூடிய ஒரு நெகிழ்ச்சி இருக்கிறதைப் பார்க்கலாம். வீரர்களுடைய உடம்பைச் சற்றுப் பாருங்கள். முறுக்கேறிய நரம்பும், திரண்ட தோள்களும், நன்றாகத் தடித்த தசைகளும் இருக்கும். ஆனால் வள்ளுவருடைய திருமேனியிலே இல்லை. விரிவு இருக்கிறது. ஆனால், மிடுக்கு அல்லது திரண்ட தசைகள் இல்லை. காரணம், குழைந்த உடம்பு அல்லவா? குழைந்த உள்ளத்திலே குழைந்த உடம்பு இருக்கும்

கனி போன்றது இவருடைய திருமேனி. நன்றாகப் பழுத்த திருமேனி. ஆனால் கொழுத்த திருமேனி அல்ல. கொழுப்பு வேறு, பழுப்பு வேறு. பழுப்பிலே மெருகு இருக்கும். கொழுப்பிலே திரட்சி இருக்கும். இங்கே திரட்சியில்லை. மெருகு இருக்கிறது. உடம்பு, முகம், கண், உதடு, நெற்றி ஆகிய எல்லாமே எதைக்காட்டுகிறது. மிடுக்கைக் காட்டவில்லை. நிறைவைக் காட்டுகிறது. குறைவு என்பது சற்றும் காணாத, கனிவு நிறைந்த பழம். மெருகேறிய பழம். சாற்றினாலே சிறந்த பழம். நாம் இப்பொழுது பாக்கிறோம். சாறு பழத்திற்கு மெருகு ஊட்டுகிறது. ஆனால் சுவைத்தவர்களுக்குத் தான் சாற்றினுடைய பெருமை தெரியும். ஓவியக் கலையின் நுட்பத்தைக் கண்டவர்களுக்கு திருவள்ளுவருடைய படம் எதைஎதைக் காட்டுகிறது. பல காலம் சிந்தித்த ஒரு திருவுருவம். சிந்தனையைப் பாதியிலே நிறுத்தி விடாமல், சிந்தனையைக் கற்பனையோடு கலக்கவிட்டு, அவற்றின் நிறைவான ஒரு கனிவு. மலர்ச்சியல்ல. கனிவு மலர்ச்சிக்கும் கனிவுக்கும் வேறுபாடு உண்டு. மலர்ச்சியிலே இன்பம் இருக்கும் ஆனால் இன்பத்தின் நிறைவு இல்லை. மலர் கனிந்த பிற்பாடுதான் நிறைவு உண்டாகிறது. மலரிலே மணம் உண்டு. கனிவிலே சுவை உண்டு. மலர் அருகிலே இருப்பவர்களும் காணலாம். ஆனால் கனியின் கனிவைச் சுவைத்தவர்கள் காணமுடியும். ஊடுருவிக்காண்கிறவர்கள் அதனுடைய மெருகிலே உள்ளே சாறு இருக்கிறது என்று கண்டு கொள்ளலாம். இங்கே திருவள்ளுவருடைய படம் திருக்குறளைப் போல ஆழமாயிருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஏதோ பார்த்த மாத்திரத்திலே, இப்பொழுது தான் படங்களுக்குக் குறைவில்லையே கண்ணிலே பார்த்த மாத்திரத்திலே ஆஹா. ஓஹோ !! என்று சொல்லும் அளவிலே நிற்பது அன்று அது. ஆழந்த கடல் அலையோடிக் கடந்த கடல். அலையில்லாமல் அமைந்து கிடப்பது போன்ற ஒரு உருவம் இது பலகாலம் சிந்தித்த ஒரு பெரிய மலை, அடங்கி நிற்கிற திருவுருவம் இது. மலர்ந்து, விரிந்து, மணந்து, காய்த்து, கனிந்து நிறைவு பெற்றிருக்கின்ற திருவுருவம் இங்கே பார்க்கிறோம்.

மற்றொன்று, திருவள்ளுவர் என்று சொன்னவுடனே முன்னாலேயே பல படங்களைப் பார்த்த நமக்கு அதுதான் தோற்றத்திற்கு வருகிறது. தயவு செய்து அதை மறந்து விடுங்கள். திருக்குறளை நினைத்துப் பாருங்கள். திருக்குறளை மலை என்று சொல்வோமா? கடலென்று சொல்வோமா? வானமென்று. சொல்வோமா? உன்னதத்தினாலே மலை. மனிதன் எட்ட முடியாத சிந்தனைக் கெல்லாம் சென்று சிந்தித்த விளைவு அது. ஆகையினாலே மலை. ஆனால் அதே சமயத்தில் ஆழம். மனிதன் மிக மிக நுட்பமாகப் போக முடியாத இடங்களுக்குக் கூட வள்ளுவர் சென்று சிந்தித்திருக்கிறார். ஆழமாகச் சிந்தித்திருக்கிறார். அதனாலே அது கடல். அதனுடைய பரப்பை என்னவென்று சொல்வது? காலங் கடந்து, இடங்கடந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையிலே உரை விரிக்குமாறு அமைந்திருக்கிறதென்றால் அதனுடைய பரப்பை என்னவென்று சொல்வது? கடலைக் காட்டிலும் பெரிய பரப்பு அது. அலையடங்கிய கடல். உயரம், முனையில்லாத மலை. அதே சமயத்தில் உவரில்லாத கடல். அமுதப் பெருங் கடல். இவைகளெல்லாம் சேர்ந்தது திருக்குறள் ஆனால் அதற்கு வடிவம் எழுத்து அல்ல. திருக்குறளுக்கு ஒரு வடிவம் வேண்டுமா? திருவள்ளுவர்தான். வேறு எப்படி இருக்க முடியும்.

நம்முடைய நண்பர் வேணு கோபால் சர்மா அவர்கள் திருக்குறளுக்கு வடிவம்

தந்துவிட்டார். திருவள்ளுவருக்கா? அவர் காலத்திலே வாழ்ந்த திருவள்ளுவர் எப்படி இருந்ததாரோ, நாம் அறியோம். திருக்குறளைப் பாடிய திருவள்ளுவர், எப்படி இருக்க முடியும்? இப்படித்தான் இருக்கமுடியும். முகத்திலே பொலிவு, ஆழ்ந்த சிந்தனையைக் காட்டும் கண்கள், அதே சமயத்தில் நிறை வைக்காட்டும் உதடு, விரிந்த நெற்றி, குழைந்த உடம்பு, ஆனால் கோணாத உடம்பு, இவை கள் எல்லாம் சேர்ந்த ஒரு திருவுருவம் திருவள்ளுவருடைய உருவம் என்பதை எப்படியோ வேணு கோபால சர்மா அவர்கள் தெரிந்துகொண்டார்கள். அவர்களுக்கு காவிய மும் தெரியும், ஓவியமும் தெரியும். காவியத்தைக் கண்டு ஓவியத்தைப் படைத்திருக்கிறார்கள். குறளைக் கண்டு நெடியவராகிய வள்ளுவரைப் படைத்திருக்கிறார்கள். அவருடைய கையிலே ஏடு, எழுத்தாணி. ஆணியையும் ஏட்டையும் கண்டவர்கள் எப்படி அதைப் பிடிப்பது என்று தெரியாமல் இருக்கிறவர்கள் இருக்கிறார்கள். நாமும் படத்திலே பார்க்கிறோம். ஆனால் ஒவ்வொரு நுட்பத்தையும், ஒவ்வொரு வகையும் நன்கு ஆராய்ந்து வள்ளுவரை மனத்திலே தியானம் பண்ணி, தம்முடைய அகக் கண்ணிலே வள்ளுவருடைய உருவத்தை நன்றாக தரிசித்து அதற்கப்புறம் புறக்கண்ணிலே நாம் காணும்படியாகச் செய்திருக்கிறார்கள், வேணு கோபால சர்மா அவர்கள். நான் அவரைப் போற்றுகிறேன். தமிழ்த் தாயின் தனிமகன், தமிழ்த்தாயின் சிரஞ்சீவிக் குழந்தையாகிய திருவள்ளுவரின் திருவுருவத்தை அகக் கண்ணினாலே கண்டு, சிந்தனையினாலே, சரம் ஏற்றி, கற்பனையினாலே மெருகூட்டி தம்முடைய கை வளத்தாலே நாமும் காணும் படியாகச் செய்த அவருடைய கைகள் வாழட்டும். கருத்துக்கள் வாழட்டும், கற்பனையும் சிந்தனையும் வாழட்டும்.

ஆண்டவனுடைய திருவருளினாலே இந்தப் படம் உலகமெல்லாம் சென்று பாஷையில்லாத படம். மொழி யில்லாத படம், மொழிகளெல்லாம் கடந்த படம் என்று உலகோர் போற்றும்படியாக ஆகவேண்டுமென்று நான் வாழ்த்துகிறேன். வாழ்க வள்ளுவர், வாழ்க திருக்குறள்.

வாழ்க தமிழ்.

யாதெனின்

—

பழமை யெனப்படுவ(து) யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு

*

அன்பு கெழுமிய நண்பர்களே! என்னுடைய வாழ்நாளில் மிக்க மகிழ்ச்சியான ஒரு சூழ்நிலையை இன்றையதினம் நான் பெற்றிருக்கின்றேன். ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே, தமிழகத்திலே பிறந்து, தமிழகத்து மக்களுக்கு மட்டுமல்லாமல், உலகத்தாருக்கு எல்லாம் ஒரு உயர்ந்த வழியைக் காட்டிய வள்ளுவப் பெருந்தகையை நேராகக் காணுகின்ற ஒரு மனிதன், எத்தகைய உணர்ச்சியை இன்று பெறுவானோ, அந்த உணர்ச்சியை நான் பெற்றிருக்கின்றேன் என்று சொன்னால் அது மிகையாகாது.

*

வள்ளுவப் பெருந்தகையினுடைய உள்ளம் எந்த அளவு விரிந்து, பரந்த உள்ளம் என்பதையும், அவருடைய அறிவு எந்த அளவு ஆழ்ந்து நுணிகிச் சென்ற அறிவு என்பதையும், அவருடைய வாழ்க்கை எந்த அளவு உயர்ந்து மேம்பட்டுத் திகழ்ந்தது என்பதையும், இன்று நான் காணுகிற இந்த திருவள்ளுவருடைய உருவம் எனக்கு மிக நன்றாக எடுத்துக் காட்டுகிறது என்று நான் உணருகிறேன்.

*

வள்ளுவப் பெருந்தகையினுடைய இந்த அழகான ஓவியத்தைக் காணவேண்டும் என்ற விருப்பம் எனக்கு ஏறத்தாழ இருபது ஆண்டு காலமாக என்னுடைய உள்ளத்திலே குடி கொண்டிருந்தது. நான் பலவகையான வள்ளுவருடைய திருவுருவங்களைப் பார்த்த போதும், நான் ஒவ்வொரு அளவிலே மகிழ்ச்சியுற்றிருக்கிறேனே தவிர, இன்று நான் காணுகிற இந்த வடிவத்தைக் காணுகிறபோது, எந்த அளவு முழு மகிழ்ச்சி எந்தவிதமான குறைவுமற்ற மகிழ்ச்சி பெறுகிறேனோ, அந்த மகிழ்ச்சியை நான் பெற முடிந்தது இல்லை. ஒருவேளை என்னுடைய கருத்து மாறுபாடு தான் அந்த குறைபாட்டை எனக்கு உண்டாக்குகிறது என்று நான் எண்ணினேன். என்றாலும். வள்ளுவருடைய புதுமைக் கருத்து இன்றையதினம் அவருடைய வடிவத்தை, வடித்துத் தருவதற்கு காரணமாயிருக்கிறது என்று நான் உணருகிறேன். நண்பர் வேணுகோபால் சர்மா அவர்கள் இன்று இயற்றியிருக்கின்ற இந்த திருவள்ளுவர் படம் ஒரு தனி ஓவியர் வரையக்கூடிய படமல்ல. அல்லது ஒரு தனி எழுத்தாளர் எடுத்துக் காட்டக்கூடிய படமல்ல. ஒரு நல்ல உள்ளம் படைத்தவர் ஆழ்ந்து சிந்தித்ததற்குப் பின்னால் எண்ணிப் பார்த்திருந்தால்

பேராசிரியர், திரு. க. அன்பழகன், M.A.

*

தான் இத்தகைய ஒரு நல்ல ஓவியத்தை வரைந்து தரமுடியும். கண்ணும் கையும் மட்டும் கலந்தால் ஓவியம் உருவாகும். ஆனால், கண்ணும் கையும் மட்டும் கலக்கின்ற போது, தோன்றுகிற ஓவியங்கள், பிறருடைய உள்ளத்திலே சென்று, தான் நினைக்கின்ற அதே நினைப்பைத் தோற்றுவிப்பதில்லை. கண்ணும், கையோடு உள்ளமும் கலக்கின்றபோது தான், பிறருடைய உள்ளத்தைத் தொடுகின்ற ஆற்றலும், தான் நினைக்கின்ற அதே குறிக்கோளை பிறருடைய உள்ளத்திலே பதிய வைக்கின்ற வாய்ப்பும், ஓவியத்தைத் தீட்டுகின்றவருக்குக் கிடைக்க முடியும். அந்த வகையிலே, திருவாளர் வேணுகோபால் சர்மா அவர்கள் இயற்றியிருக்கின்ற இந்த ஓவியம். பிறருடைய உள்ளங்களையெல்லாம் தொடத்தக்கதாய், பிறருடைய உள்ளத்திலெல்லாம் வள்ளுவருடைய நினைவை எழுப்ப வல்லதாய், அதன்மூலம் தமிழகத்தினுடைய மாட்சியை உயர்த்த வல்லதாய், தென்னகத்திற்கே பெருமை தேடித் தரக்கூடியதாயிருக்கிறது என்று நான் பூரிப்போடு அவரைப் பாராட்ட விரும்புகிறேன்.

*

உண்மையாகவே வள்ளுவரை எண்ணிப் பார்க்கின்றவர்களெல்லாம் வள்ளுவரை உணரமுடியும். சிந்திக்க இயலாதவர்களுக்கு வேண்டுமானால், வள்ளுவர் அரிதாகக்காணப் படுவாரே தவிர, சிந்திக்கத் தக்கவர்களுக்குக் கடவுள் தோன்றுவாரோ இல்லையோ நான் அறிய மாட்டேன், ஆனால், வள்ளுவர் தோன்றுவார். அந்த அளவு, சிந்திக்கத் தக்கவர்களுக்கு வள்ளுவர் தோன்றுவதற்குக் காரணம் அவர் சிந்தனையினுடைய வடிவமாகவே இன்றைய தினம் உலகத்துக்கு தன்னைப் புலப்படுத்திக் கொண்ட ஒருவர் அறிவால்தான் உள்ளத்தையும் ஒழுங்கு படுத்திக் கொள்ள முடியும். வாழ்க்கையையும் சீர்படுத்திக் கொள்ளமுடியும். அறிவு என்ற கருவியை விடச் சிறந்த கருவி இல்லை. அந்தக் கருவி வள்ளுவருக்கு அவர் கையிலே கிடைத்த எழுத்தாணியைப் போல், மிகப் பன்னெடுங் காலத்திற்கு முன்னால் அவருடைய ஆற்றலுக்கு உட்பட்டதாய் அவருக்குக் கிடைத்தது. அவருடைய காலத்திலே வளர்ந்திருந்த மிகச் சிறந்த விஞ்ஞான அறிவும் அவருக்கு எளிதாகக் கிடைப்பதற்கு

வாய்ப்புக் கிடைத்தது. உண்மையாகவே தமிழகம் அப்பொழுது உயர்ந்திருந்தது ஒரு காரணமாக இருக்கலாம். தமிழகம் அப்படி பெரும் புலவர் பரம்பரையைக் கண்டது ஒரு காரணமாக இருக்க லாம். தமிழ் மொழி அந்த வளப்பத்தைப் பெற்றிருந்தது ஒரு காரணமாயிருக்கலாம். அதனாலே அவருடைய அறிவோடு அவர் உலகத்து இயலை, எண்ணிப் பார்த்தபோது, அந்த உலகியல் மனித வாழ்க்கையினாலே தான், மனிதன் மேற்கொள்ளுகின்ற நடை முறையினாலேதான் சிறப்புப் பெறுவது என் பதை அவர் உணர்ந்தார்.

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு' என்று சொல்லுகின்ற தத்துவம் வள்ளுவர் காலத்தில் தமிழகத்திலே உள்ள எல்லா புலவர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட நெறி யாகும். தாழ்ந்தவர்கள், இழிந்தவர்களாலே உலகம் உயர்வதில்லை. உயர்ந்தவர்கள் போற்றுகிற நெறியினாலேதான் உலகம் உயரு கிறது என்று கண்டவர் அவர். எனவே அந்த உயர்ந்த நெறி எது என்பதைக் கண்டு விட்டால், அந்த நெறியை மக்களுக்கு உரைத் தால், மக்கள் அதைப் புரிந்துகொண்டால், மக்கள் அதைப் பின்பற்றக் கூடிய முறை யாக அதை அமைத்துத் தந்தால், எல்லா மக் களும் உயர்ந்து உலகமே உயரும் என்பது வள்ளுவர் கண்ட முடிவாகும். அதனாலே தான் வள்ளுவர் தம்முடைய திருக்குறளில்,

> "வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்."

என்ற உயர்ந்த தத்துவத்தை, தெய்வங்க ளெல்லாம் எங்கோ இருக்கிறது என்று எண்ணு கிற பாமர மக்களும் விரும்பி ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையில், தெய்வங்கள் என்பது நாம் உருவாக்கியதுதான் என்று தெளிந்த மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில், வாழ வேண்டிய நெறியறிந்து வாழ்கின்ற மனிதன் தெய்மாக வைத்துப் போற்றப் படுவான். உத்தமர் காந்தியடிகளைப் போல, என்ற கருத்தை அவர் எடுத்துக் கூறினார்கள். அப்படி வாழவேண்டிய மனிதன் தெய்வமாக உயர்வதற்கான வழியை அவர் எண்ணிப் பார்த்தபோது அவர் உலகத்தார் ஏற்றுக் கொள்ளுகிற நெறி முறையை, உணவு தேவை என்று சொன்னால் உணவுக்கு என்னென்ன துணைப் பொருள்கள் தேவையோ அந்தத் துணைப் பொருளையெல்லாம், எடுத்துச் சொல்லி உணவு சமைப்பதைப் போல் வாழ்க்கையி னுடைய தேவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லுகின்ற முறையினாலேயே அந்த வாழ்க் கையை ஒழுங்கு படுத்தினார். ஆனால் அந்த உணவிலே சுவை கூட்டுவதுபோல் அந்த வாழ்க்கையை ஒழுங்கு படுத்துகிற அதே முறையிலேயே உள்ளத்து உணர்ச்சியைப் பக்குவப் படுத்தினார்.

உணவைத் தராமல் சுவையை மட்டும் பேசுவது என்பது சுவைக்கு உண்மையான சிறப்பினைத் தராது அல்லது சுவையைப் பற்றி பேசவேண்டுமென்று விரும்புகிறவர் உணவு படைக்காமலிருப்பார்களேயானாலும் அப்பொழுதும் அது சிறப்படையாது. அந்த முறையிலேயே வள்ளுவர் வாழ்க்கையிலே அடிப் படையாகத் தேவை மனிதனுக்கு என்ன என்று எண்ணுகிறபோது மனிதன் உடலால் வாழ்கிறான். மனிதன் சூழ்நிலையால், சமு தாயத்தால் வாழ்கிறான். மனிதன் எண்ணத் தால் வாழ்கிறான். உடலால் வாழ்கின்ற வாழ்க் கைக்கு எல்லா மனிதனும், எவ்வுயிரையும் போல இன்பத்தோடு இணைந்து வாழ உரிமை பெற்றிருக்கின்றான். அந்த இன்பத்தைப் புறக்கணிப்பதற்கில்லை. அந்த இன்பம் மனித வாழ்க்கைக்கு அடிப்படை மட்டுமல்ல. அது இன்றியமையாத தேவையுமாகும். அதை நிறைவேற்றுவது குறைபாடு உடையது அல்ல. முறையாக நிறைவேற்றுகிற பொழுது அந்த இன்பம் முழு இன்பம். அதை அவர் காமத்துப் பாலிலே வரையறுத்து, சிறப்புச் செய்து அதனை வழங்கியிருக்கின்றார். அதனை தவறு என்று கருதுகிறவர்கள் அதன்மீது காயாம லிருக்கவும், அதை தவறான முறையிலே பயன் படுத்துகிறவர்கள் அந்தத் தவறான வழியிலே போய் இன்பத்தைக் கெடுத்துக் கொள்ளாம லிருக்கவும், அவர் காட்டிய காமத்துப் பால் கற்பு நெறியிலே நிற்பதற்கு, துணை செய்து உண்மையான இன்பத்தினுடைய அடிப் படையை வகுத்தும் தந்திருக்கிறது. உயிரி னுடைய இயற்கை அந்த இன்பத்தை எய்தி அதிலே கிளர்ச்சியடைவது. அந்த கிளர்ச்சி வாழ்க்கைக்கு, பூரணத்துவத்துக்கு, இது ஆணுக்கும் பெண்ணுக்கும் இன்றியமையாதது. எந்த ஒரு ஆணும், பெண்ணும் வாழக்கையிலே அந்த இன்பத்தைக் காணாத போது, அதுவும் நல்லின்பமாக இல்லாத போது, அவர்கள் அரை வட்டமாக நிற்கிறார்கள். அல்லது அந்த இன்பத்தை தவறான வழியிலே பெறுகிற பொழுது அவர்கள் முழு வட்டமாக ஆகாமல் ஒடிந்த வட்டமாக ஆகிறார்கள். அந்த இன்பம் நல்லின்பமாக இருக்கிற பொழுது அது முழு வட்டமாகிறது. அது பூரணத்துவத்தை, வாழ்க் கையிலே உடலால் எய்த வேண்டிய பூரணத் துவத்தை, பிற உள்ளத்துக்கும், அறிவுக்கும் அடிப்படையான பூரணத்துவத்தை அது

எய்துவிக்கின்றது. அந்த இன்பத்தை அவர் எடுத்துக் காட்டினர்.

அதற்கடுத்து சமுதாயம் ஒழுங்கு படாத பொழுது, தனி குடும்ப வாழ்க்கை மட்டும் அந்த சமுதாயத்திலே சீராக நடத்த முடியாது. சமுதாயத்தை ஒழுங்கு படுத்த வேண்டுமானல் பொருள் ஒழுங்குபடுதல் வேண்டும். அந்தப் பொருள் என்பது உணவுப் பொருள் மட்டுமல்ல. அதைத் தொடர்ந்து இருக்கின்ற வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுப் பொருளை பாது காத்துத் தருகின்ற அரசு வரையில், அக்கால முறையிலே அரசனுடைய ஆட்சி. இக்கால முறையிலே மக்களாட்சி. இந்த ஆட்சி முறை வரையிலே எல்லாம் ஒழுங்கு பட்டிருக்கிற பொழுதுதான் சமுதாயம் சீர்படும் என்ற காரணத்தினலே அந்த நல்ல அரசுக்கு எவை எவை தேவையோ, அவற்றையெல்லாம் எடுத்துக் காட்டி பொருட்பால்இயற்றித் தந்தார் கள். பொருட்பால் உலகை ஒழுங்கு படுத்துவது. இன்பத்துப் பால் தனி மனிதன், மனித வாழ்க்கையை ஒழுங்கு படுத்துவது, பொருட்பால் சூழ்நிலையை, சமுதாயத்தை, நாட்டை ஒழுங்கு படுத்துவது. அந்த பொருட் பாலை இயற்றித் தந்தார்கள்.

இவையெல்லாம் ஒழுங்காக இருந்தாலும், அறிவு மிக்கவர்கள் உள்ளத்தாலே அந்த அறிவைக் கட்டுப் படுத்தாத போது அவர்கள் தவருன வழியிலே ஒவ்வொன்றையும் தம் முடைய நலத்துக்கு பயன்படுத்திக் கொள்வார் கள். தன்னலம் மிகும். பதவி வெறி அதிக மாகும். பண்பு தேயும். இவைகளுக்கு இட மிருக்கக்கூடாது என்று சொன்னல் எவ்வளவு தான் ஆழ்ந்த அறிவு இருக்குமானலும் அந்த அறிவு நல்ல பண்புக்குக் கட்டுப்பட வேண்டும் என்ற காரணத்தினலே, உள்ளத்தை ஒழுங்கு படுத்த வேண்டும் என்று கருதி, மனித உள்ளம் இவை எல்லாவற்றிற்கும் அடிப்படை என்பதை உணர்ந்து, இவை எல்லாவற்றயையும் விட உயர்ந்தது என்பதை உணர்ந்து அவர்கள் அறத்துப் பால் அமைத்துத் தந்தார்கள். அறம் உள்ளத்தை ஒழுங்கு படுத்த ஆகும். அந்த அற உணர்ச்சி இருக்கின்றவர்கள், தம்முடைய உள்ளத்தால் அவர்கள் துறவுக் கோலம் பூண்டிருப்பினும், துறவுக் கோலம் பூணுதிருப் பினும், அவர்கள் உலகத்திற்கு நல்லது செய்ய முடியும். இல்லறத்திலே இருப்பவர்களும் அந்த அறத்தைப் போற்றுகிற காரணத்தாலே தான், 'இல்லற மல்லது நல்லறமன்று, என்ற கருத்துப்பட, அறமெனப் பட்டதே இல் வாழ்க்கை என்ற கருத்தை வற்புறுத்தி வள்ளுவர் தெரிவித்தார்கள். எனவே இல்லறத்தையும் போற்றி அதுபோலே துறவறத்தையும் போற்றி, அது அவரவர் மன நிலைக்கு ஏற்றது என்று கொண்டு ஆனல் அந்த மனம் தூய்மையாக இருப்பது தான் உயர்வு என்று காட்டி, அந்தத் தூய்மையை வற் புறுத்திய வள்ளுவருடைய அறத்துப்பால் மனித வாழ்க்கையினுடைய உயர்ந்த உச்சிக்கு மனிதனை அழைத்துச் செல்வதற்கு அடிப் படையாகும். இப்படி பொருள், இன்பம், அறம் ஆகிய மூன்றையும் கொண்டு, முப்பாலை வழங்கி மக்களுடைய மனதிலே தோன்றக் கூடிய பலவிதமான பிணியைப் போக்கக் கூடிய வகையிலே திருக்குறளை அவர்கள் இயற்றித் தந்தார்கள்.

இவைகளையெல்லாம் அவர்கள் இயற்றித் தந்த காரணத்தினலே வீடு என்ற தனியான ஒரு பேற்றினை அவர்கள் குறிப்பிடவில்லை என்று சிலரும், அவர்கள் வீட்டினை மனதிலே கருதித்தான் இவற்றை இயற்றித் தந்தார்கள் என்று வேறு சிலரும் வாதிப்பதை இன்றும் நாம் காணலாம். ஆனல் வள்ளுவர் அப்படி ஒரு தனி வீட்டைக் கருதிவர் அல்ல. ஆனல் இவையெல்லாம் நிறைவேறுமானல், அதுவே வீட்டு இன்பம் என்று கருதியவர் அவர்.

வெற்றிலை, பாக்குப் போடுகிறவர்கள் அதனல் பெறுகிற இன்பத்தைப் போல் வாழ்க்கையை ஒழுங்காக நடத்துகிறவர்கள் பெறுகிற இன்பம் இருக்கிறதே, அதுவேதான் வீட்டு இன்பம். வெற்றிலை, பாக்குப் போடுகிற வர்கள், போட்டதற்குப் பின்னலே சிவப்பு என்ற ஒரு நிறத்தை வாயிலே தடவிக் கொள்வது இல்லை. அதைப் போல் வாழ வேண்டிய முறையறிந்து வாழ்ந்தவர்கள் அந்த வீட்டைத் தனியாகத் தேடிச் செல்வதில்லை. அதனுடைய பலனே அது. அந்த தனிப்பலன் அல்ல அது. அதை தனித்துத் தேடுகின்ற ஒரு முறை மக்களுடைய தெளிவற்ற சூழ்நிலை யினலே தோன்றியதாகும்.

எனவே மனத்தால் மனிதன் வாழ்கிருன். மனம் உடையவன்தான் மனிதன். அந்த மனம் உயர்ந்தவன்தான் உயர்ந்த மனிதன். அந்த மனம்தான் மனிதனுடைய தனித் தன் மையை சிறப்பிக்க வல்லது. அந்த மனத்துக்கு நல்ல மனத்துக்கு துணை நிற்பதுதான் உலகியல். அப்படி உலகியலை அதற்கு ஒழுங்கு படுத்தித் தருவது தான் அரசு. அந்த உலகிய லுக்கு ஏற்றவனுக தன்னை ஆக்கிக் கொள்வ தற்கு, மனிதன் முழுமனிதன் ஆவதற்கு அவன் அடைய வேண்டிய இன்பத்ததை முறையாக எய்தலாம் என்று சொல்லி

உண்மையாகவே வாழ்க்கை முழுவதும் ஒரு இன்பமாக அமைத்துத் தந்தவர் வள்ளுவர்.

அப்படி வாழ்க்கையே ஒரு இன்பமாகக் கண்ட வள்ளுவர் இன்பத்தினுடைய தோற்ற மாக இருக்க வேண்டும். அவர் காட்டிலே திரிந்து கொண்டிருந்த சில முனிவர்களைப் போல், ஏங்கி தவித்து, அலைந்து, அடிபட்டு, உடலெல்லாம் சிறுத்து காட்சியளிக்க வேண் டும் என்று எதிர்பார்ப்பதும் அவ்வளவு சிறப் பல்ல. அல்லது வேறு சிலரைப் போல் உடலை மட்டும் வளர்த்து, உள்ளத்தை வளர்க்காத சிலரைப் போல் காட்சியளிப்பதும் நல்லதல்ல. எனவே அந்த வகையிலே நோக்குகிற பொழுது அவர் அரசனுக வாழவில்லையே தவிர ஆண்டியாகத் திரியவில்லை.

அவர் இல்வாழ்க்கையிலே ஈடுபட்ட கார ணத்தினுல், பற்றற்ற ஒரு நிலையைக் காணு தவரல்ல. இல்வாழ்க்கையிலே இருந்தும் உலகியலைப் புரிந்துகொள்ள, புரிந்துகொள்ள உயர்ந்த நிலையிலே எல்லாரிடத்திலேயும் காட்டுகிற பற்றுதான் பற்றற்ற நிலை. தன் மனைவி, தன் மக்கள் என்று மட்டும் காட்டுகிற பொழுதுதான் அது பற்றுள்ள நிலை. எல்லா மக்களும் வாழவேண்டும் என்று எண்ணுகிற பொழுது, எவ்வுயிரும் சமம் என்று எண்ணுகிற பொழுது, மறுபடியும் அதிலே ஒரு பற்றற்ற நிலை தோன்றுகிறது. அந்த பற்றற்ற நிலை கண்டவர் அவர். அது பற்றினுடைய பேரின்பம். பற்றற்ற நிலையி னுடைய விளைவு. அப்படிப்பட்ட ஒரு உயர்ந்த மனநிலையைக் கொண்ட வள்ளுவருடைய திருவுருவத்தை எண்ணி எண்ணிப் பார்க் கின்ற நல்ல உள்ளம் படைத்தவர்கள்தான் வரையமுடியுமே தவிர கையிலே எழுதுகோல் கொண்டவர்களெல்லாம் வரைந்துவிடுவ தென்பது இயல்வதல்ல. அந்த வகையிலே நண்பர் அவர்கள் எழுதியுள்ள இந்த திருவள் ளுவருடைய படம் நான் நினைக்கின்ற பல கோணங்களிலேயும் என்னுடைய உள்ளத் திற்கு மிக்க மகிழ்ச்சியையும், ஆறுதலையும் அளிப்பதாக இருக்கின்றது. அப்படிப்பட்ட வள்ளுவருடைய திருவுருவம் நாடெங்கும் வழங்குகிற ஒரு நிலைமை தோன்றவேண்டும்.

மயிலாப்பூரிலே ஒரு வள்ளுவர் கோவில் இருக்கலாம். அங்கே காணப்படுகிற வள்ளு வருடைய வடிவம் உண்மையாகவே பார்த்த வுடனே இந்த பூரண மகிழ்ச்சியைத் தோற்று விப்பதாக எனக்குத் தோன்றவில்லை. வேறு பலர் தோற்றுவித்திருக்கின்ற வடிவங்களும் அந்த மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கவில்லை. அப்படிப்பட்ட வள்ளுவருடைய உருவத்தை யும் எழுதி, வள்ளுவரைப்பற்றிய நல்ல பல கருத்துக்களை அவரைப்பற்றிய விளக்கமாகத் தந்திருக்கின்ற இந்த ஓவியத்தை எழுதிய நண்பருக்கு என்னுடைய உளமார்ந்த நல் வாழ்த்துக்களை நான் தெரிவிக்க விரும்பு கிறேன். அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து மேலும் இப்படிப்பட்ட பல நல்ல தொண்டு களைத் தமிழுக்குச் செய்யவேண்டும். அதிலே யும் அவர்கள் தாய்மொழி தெலுங்கு என்று தெரிவித்தார்கள். இதிலேயிருந்து தெலுங்கு தமிழுக்கு எவ்வளவு மகள் முறை உடையது என்பது எனக்கு நன்ருகப் புலனுகிறது. எனவே அவர் செய்கிற தொண்டு பாட்டிக் குச் செய்கிற பேரனுடைய தொண்டு என்று நான் கருதுகிறேன். அந்த முறையிலே தமிழ்த் தொண்டு ஆற்றுகிற அந்த உணர்ச்சி வளர்ந்து, மேலும் பல வகையிலே தமிழுக் கும் தமிழருக்கும் பெருமை தேடித் தருவார் கள் என்று நான் மனமார நம்பி அவருக்கு என்னுடைய வாழ்த்தைக் கூறுகிறேன். வள் ளுவருடைய திருக்குறள் நெறி தமிழகமெங் கும் பரவி, இந்த உருவம் தமிழகமெங்கும் காணப்படுகிற ஒரு நாளை நான் மிக விரை விலே எதிர்பார்க்கிறேன், என்று தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளு கிறேன்.

வணக்கம்

யாதெனின்

இன்மையி னின்னுமை யாதெனின் இன்மையின்

இன்மையே இன்னு தது

எனது அருமை நண்பர் வேணுகோபால் சர்மா அவர்கள், அவர் தீட்டிய வள்ளுவப் பெருந்தகையின் திருவுருவப் படத்தை கண்டு எனது கருத்தைத் தெரிவிக்க அழைத்து நான் அந்தத் திருவுருவப் படத்தைப் பார்க்கும் நிலையில் எனக்கு ஏற்படும் எதிரொலியை சில கருத்துக்களால் குறிப்பிட விரும்புகிறேன்.

வள்ளுவப் பெருந்தகையை அவனே அறிஞன், அவனே புலவன், அவனே தமிழை அறிந்தோன் என்று தமிழ்ப் பெருமக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஏற்றிப் போற்றி வருகிற ஈடு இணையற்ற பேராசான் வள்ளுவப் பெருந்தகையை நினைக்கும்பொழுது ஆங்கில நல்லிசைப் புலவனுன பென் ஜான்ஸன், ஷேக்ஸ்பியரைப் பற்றி கூறிய ஒரு கருத்து என் நினைவிற்கு வருகிறது. ''ஷேக்ஸ்பியர் நினைவுக் காணிக்கை'' என்ற கட்டுரையில் பென் ஜான்ஸன் கூறுகிருன். ''அவன் ஒரு யுகத்திற்கு மட்டுமல்ல, அவன் எல்லா யுகங்களுக்கும், எல்லாக் காலத்திற்கும் உரியவன்'' என்று.

நமது வள்ளுவப் பெருந்தகை அந்தப் புகழ்ச்சிக்கும், அதற்கு அப்பாலும் அளிக்கப் படும் எந்தப் புகழ்ச்சிக்கும் தகுந்தவன் என்பது எனது பணிவான கருத்து.

சாரத்திலும், தனிச் சிறப்போடு மனித வாழ்க்கையின் குறு நெறிகளைக் காட்டுவதிலும், சிந்தனை ஓட்டத்திலும், திருக்குறள் சங்ககாலத் தமிழ் மக்களின் உலகியல், பண்பியல் சிந்தனையின் சத்தை உருட்டித் திரட்டித் தந்திருக்கிறது.

வள்ளுவப் பேராசான் அவன் காலத்திற்கு முந்திய இலக்கியங்களின் பிரதிநிதியாக மட்டும் நிற்கவில்லை. அவன் காலத்தில் பல்வேறு அறிவுத்துறைகளின் களஞ்சியமாகவும் விளங்கினன். எதிர்காலத்திற்குக் கோடி காட்டுவதில் நேர் நிகரற்ற புலவர் பெருமானுகவும் விளங்குகிருன்.

அவன் தமிழ், ஆரியம், பாலி இன்னோரன்ன அக்கால மொழிகளில் நிரம்பிய புலமை பெற்றவன் என்பதை நாம் அறிய முடிகிறது. அவன் காலத்தில் படிக்கத் தகுந்த நூற்களில் அவன் படியாத நூல்கள் கிடையாது என்பதை வள்ளுவமே எடுத்துக் காட்டுகிறது.

மூதோர் தொகுத்தவற்று ளெல்லாம் தலை என்று கூறுமிடத்திலும், பனுவல் துணிவு என்று கூறுமிடத்திலும் அவனுடைய நூலறி

திரு ப. ஜீவானந்தம்

*

வின் முதிர்ச்சி மிக வெள்ளிடை மலை போல் விளங்குகிறது. மேலும் அவனுடைய அறிவு நுட்பம் பல்வேறு கோணங்களிலிருந்து அவன் காட்டுவதிலிருந்தே, விஞ்ஞான அடிப்படையில் அது கனிந்து நின்றது என்பதை நமக்குக் காணமுடியும்.

''தொட்டனைத்தூறும் மணற் கேணி—மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு''

என்று அறிவுறுத்துவதிலிருந்து மேலும் மேலும் இடையருது அறிவுச் சுரங்கத்தை ஆழமாகத் தோண்டிக் கொண்டே இருந்தவன் அவன் என்பது நமக்குக் காணக் கிடக்கிறது. மேலும் மேலும் அறிவைப் பெற்ருன் என்பதோடு மட்டுமல்ல, அவன் அறிவில், பகுத்தறிவுத் திட்பம் இருப்பதையும் அவன் எடுத்துக் காட்டுகிருன்.

''அறிதொறும் அறியாமை கண்டற்ருல்'' ஆகவே, அறிய அறிய, சென்ற காலத்தில் பெற்றதோடு புதிய அறிவை ஒப்பு நோக்கி, கொள்வதைக் கொண்டு, தள்ளுவதை தள்ளி வந்திருக்கும் சிறந்த அறிவும் அவன் பால் காணக் கிடந்தது என்பதும் நமக்குத் தெரிய வருகிறது.

அதற்குமேல், அறிவினுடைய பெரு நோக்கத்தையும் அவன் எடுத்துக் காட்டுகிருன். தான் இன்புறுவது, உலகு இன்புறுவதைக் கண்டு காமுறுவர் கற்று அறிந்தார் கற்று தெளிந்த அறிவின் தன்மை எத்தகைத்து? 'உலகத்தினுடைய இன்ப வாழ்க்கையில் தன்னுடைய இன்ப வாழ்க்கையைக் காண்பது' என்று அவன் நமக்குச் சுட்டுகிருன். இதையே பிறிதொரு இடத்தில் வலியுறுத்திக் கூறுகிற பொழுது 'அறிவினல் ஆகுவது உண்டோ?' என்று ஒரு கேள்வியைப் போடுகிருன். அந்தக் கேள்வியை வன்மையாகப் போடுகிற பொழுது,

''பிறிதின் நோய் தந்நோய் போல்
போற்ருக் கடை
அறிவினல் ஆகுவ துண்டோ.''

என்று கேட்டு, பிறிதின் நோய், பிறருடைய இன்பத்தையும், துன்பத்தையும் தனது இன்ப துன்பமாகக் கருதி நடக்க வேண்டுவது இன்றியமையாதது, மனித வாழ்க்கைக்கு ஏற்றது என்றும் வற்புறுத்திக் காட்டுகிருன். இதனல்தான் நூல்கள் சொன்னதும், அவன் சிந்தித்ததும் அவனுடைய அறி

வாலும் பகுத்து, உண்டு, பல்லீர் ஓம்ப வேண்டும் என்ற கொள்கையை அவன் வகுத்துக் காட்டும்படியாகச் செய்கிறது.

இதற்குமேல், கடந்த 35 ஆண்டுகளாக வள்ளுவனை நான் படித்துக் கொண்டே இருக்கிறேன். இதே பொழுதில் சில விஞடிகள், அல்லது சில நிமிடங்கள்தான் எனது நண்பர் வேணுகோபால் சர்மா அவர்கள் தீட்டியிருக்கக் கூடிய திருவுருவப் படத்தைப் படிக்கவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இந்த 35 ஆண்டுகளில் நான் வள்ளுவனுடைய பெரும் கொள்கையின் ஆட்சி அல்லது அடிச்சரண் அல்லது ஆணி மூலம் எது என்று காண்பதற்கு முயன்று வந்திருக்கிறேன். நான் கண்டதில் வையத்துள் மனிதன் எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ வேண்டும் என்பதற்கு, அதாவது வாழ்வதற்கு வழி காட்டுவதே அவனுடைய கொள்கையாக இருந்து வந்திருக்கிறது. வாழ்வதற்கு வழி காட்டுகிறதைச் சொல்லுகிற பொழுது மனிதனுடைய வாழ்வு பெரும் வாழ்வு. அந்த வாழ்வு வாழவேண்டியபடி வாழ்வோமேயானுல்,

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்''

என்று கூறுகிருன். அப்பொழுது, வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதை இன்னும் அவன் பிழிந்தெடுத்துக் காட்டுகிருன். காட்டுகிற பொழுது,

''யான் எனது என் செருக்கறுப்பான்
வாஞேர்க்கு உயர்ந்த உலகம் புகும்''

அவன் காலத்தில் மனிதனுடைய கற்பனையில் நின்ற தெய்வ வாழ்வு இருக்கிறதே—அந்த தெய்வ வாழ்வைவிடச் சிறந்தது எந்த வாழ்வு? யான், எனது எனும் செருக்கை மனிதன் அறுத்துத் தள்ளிவிடுதல். அது அற்ற வாழ்வு, இருக்கிறதே அந்த வாழ்வுதான் மிகச் சிறந்த வாழ்வு. தெய்வத்தின் மேல் வாழ்வு, தெய்வம் வாழ்கிற வானுலகத்திற்கும் மேற்பட்ட வாழ்வு என்று அவன் குறிப்பிடுகிருன். இது நம்முடைய குறிக்கோளாக நிற்க வேண்டும். இதைத்தான் அவன் தன்னுடைய 1330 அருங் குறளிலும், இந்த வாழ்க்கையை, வாழ்க்கையினுடைய பல்வேறு துறைகளை, பல்வேறு துறைகளில் அவன் கண்ட சிறந்த உண்மைகளை நமக்கு அள்ளி அள்ளி வள்ளலாய் வாரி வழங்குகிருன். இவைகளை நமக்குக் காட்டுகிருன். இவைகளை காட்டுகிறபொழுதுதான் எனக்கு இந்த இடத்தில், இன்றைக்கு உலகத்தில், உலகத்திலுள்ள பெரும் தத்துவ ஞானிகளெல்லாம், பெரும் தத்துவ ஞானி என்று போற்றப்படுகின்ற ஆல்பர்ட் ஷ்வைட்ஸர் என்று சொல்லக்கூடிய தத்துவ ஞானியின் ஒரு கருத்தைச் சொல்வதற்கு விரும்புகிறேன்.

''இந்திய சிந்தனையும், அதன் வளர்ச்சியும்'' என்ற ஒரு சிறந்த நூல் ஆல்பர்ட் ஷ்வைட்ஸர் எழுதி யிருக்கிருன். அந்த நூலில் வேதத்தை, உபநிடதங்களை, பகவத் கீதையை, மனு நூலை, சமணத்தை பௌத்தத்தை இவைகளையெல்லாம் ஆய்ந்திருக்கிருன் அந்தப் பெருஞ் ஞானி. இவைகளையெல்லாம் ஆய்ந்துவிட்டு, திருக்குறளையும் ஆய்ந்து அதனுடைய கொள்கையை நமக்கு எடுத்துக் காட்டுகிருன். அப்படிக் காட்டுகிற பொழுது, இந்த உலகம் உண்மை. இந்த உலகம் மாயை யல்ல'' என்பதை இதர எல்லா நூல்களைவிடத் தானும் வள்ளுவம் வலியுறுத்திக் கூறுகிறது என்று காட்டுகிருன். காட்டுவதோடு கூறுகிருன், பற்றற்ற பணியின் மூலம் பரதத்துவத்தை அடையலாம் என்பது ஒரு கொள்கை. மனிதன் மனிதனுக, மனிதனை மனிதன் ஆக்கிக் காட்டுகிற அன்பின் மூலம் இறைவனை அடையலாம் என்று ஒரு கொள்கை இந்தக் கொள்கைகளுக்கெல்லாம் மேல் வள்ளுவம் ஒரு படி சென்று,

''மேலுலகம் இல்லெனினும்
ஈதலே நன்று.''

என்று கூறுகிறது. அது மேலுலகத்தைவிட இந்த உலகத்தில் வாழ்வதற்கு வலியுறுத்துகிற கொள்கையை அடிப்படையாக உடையது வள்ளுவம் என்று அவன் பெருமிதப்படுகிருன்.

பிறவிப் பெருங்கடலை நீந்த வேண்டும். மறுமையில் உயர் நிலை அடைய வேண்டும் என்பன போன்ற கொள்கைகள் திருக்குறளிலும் காணக் கிடைக்கின்றன. ஆயினும், வள்ளுவம் இன்னும் ஒரு படி மேல் சென்று பயன் கிடைத்தாலும் சரி, கிடைக்கா விட்டாலும் சரி. நல்ல செயல் மன நிறைவை அளிக்கிறது. கைம்மாறு வேண்டாது கடமை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. என்று கூறிவிட்டு அவன் கூறுகிருன். ஒவ்வொரு மனிதனும் தனக்கும், மற்றவர்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றி கனிந்த பண்பாட்டோடும் சிறந்த மதி நலத்தோடும் வள்ளுவம் கூறுகிறது. உலக இலக்கியத்திலேயே இவ்வளவு நேர் நிகரற்ற அறிவுடைமை வேறு ஒரு நூலிலும் இல்லை என்று

அந்த உலகு புகழ் தத்துவ ஞானி கூறு கிருன்.

ஆகவே, வள்ளுவத்தினுடைய வழி அறிவு வழிதான், எனினும் அறிவை விடத் தானும் அன்பு வழி, அருள் வழி என்பதை நலம் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண் டும். திருவள்ளுவருடைய உள்ளம், 'உள் ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்று சொல் லிய அந்த உள்ளம் 'அன்பின் வழியது உயிர் நிலை' என்று வாழ்க்கையை நமக்குக் கூறுகிறது. திருவள்ளுவனுடைய உள்ளம் 'அன்பின் குழவி அருள்' என்று நமக்குக் காட்டுகிறது. திருவள்ளுவனுடைய உள்ளம்,

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்—
அன்புடையார்
எங்கும் உரியர் பிறர்க்கு."

எல்லாம் பிறர்க்குரியர் என்று காட்டுகிறது.

இந்த உள்ளம், ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக தமிழ் நாகரிகத்தில் பழுத்த உள்ளம். இந்த உள்ளம், ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இந்தியா முழுவதிலும் எழுந்த ஆரிய, அல்லது இந்திய பாரதப் பண்பாட் டுள்ளத்தையும் தன் வயப் படுத்திக் கொண்ட உள்ளம். அந்தக் காலத்தில் "வானம் அளந்ததனைத்தும் அளந்த வன்மை மிக்க அறிவை அடிப்படையாகக் கொண்ட உள்ளம். இந்த உள்ளம் வானம் அறிந்த தனைத்தும் அறிந்து வளர்ந்து நின்ற உள்ளம். இந்த உள்ளத்தை தமிழ் சங்க காலச் சான்றேர்களுடைய குறிக் கோளான சான்றன்மையை அடிப்படையாகக் கொண்ட உள்ளத்தை, துய உள்ளம், அன்பு உள்ளம், பெரிய உள்ளம், தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும் இந்தச் சிறந்த தாயுள் ளத்தை வள்ளுவன் பெற்றிருந்தான் என் பதை வள்ளுவம் பரக்க நமக்கு விளக்கிக் காட்டுகிறது. இந்த உள்ளத்தின் விளைவு தான் சான்றன்மை என்று சொல்வது. சான் றன்மை அன்பு, நாண், ஒப்புரவு, கண் ணேட்டம், வாய்மை இந்த ஐந்தையும் அங்கமாகக் கொண்டது. இந்த ஐந்தையும் திருக்குறள் முழுவதிலும் பரந்து கிடப்பதைப் பார்க்கிற பொழுது இன்றும் நாளையும், அதைத்தான் நான் உங்களுடைய, இன்றும் நாளையும் இந்த அடிப்படைப் பண்புகள், மனிதனுக்கு இன்றியமையாத பண்புகள், காலத்தின் பெருக்கத்தால், புற வாழ்வின் பெருக்கத்தால் நமக்கும் பல்வேறு வாய்ப்பு களும், வசதிகளும் ஏற்பட்டாலும், மனித வாழ்க்கையின் உள் வாழ்க்கை, அதான உள் ஒளி, உள் வாழ்வு அந்த வாழ்வு சிறக் கச் செய்வதற்கு இந்தப் பண்புகள் மிக இன்றியமையாதவை. இவைகளை வள்ளுவம் நமக்கு வடித்துத் தந்து நிற்கிறது. எனவே, எந்தக் காலத்தும், மேற்கத்திய புலவர்கள் அதனுல் தான், வடித்து தந்து நிற்பதால், வள்ளுவத்தில் நாம் எதைப் பார்க்கிரேம்? தமிழனைப் பார்க்கவில்லை. வள்ளுவத்தில் எதைப் பார்க்கிரேம்? தமிழ் நாட்டைப் பார்க்கவில்லை. வள்ளுவத்தில் எதைப் பார்க் கிரேம்? தமிழினத்தைப் பார்க்கவில்லை. வள்ளுவத்தில் எதைப் பார்க்கிரேம்? அந்தக் காலத்தில் எழுந்து நின்ற எந்த சமயங்களை யும் பார்க்கவில்லை. வள்ளுவத்தில் எதைப் பார்க்கிரேம்? தமிழ் நாட்டிலோ, இந்தியா விலோ இருந்த எந்த ஜாதியையும் பார்க்க வில்லை. வள்ளுவத்தில் நாம் எதைப் பார்க் கிரேம்? அந்தக் காலத்தில் மனித வாழ்க்கை யில், சமுதாய வாழ்க்கையில் செயற்கையால் எழுந்த, அந்த சமுதாய வாழ்க்கையில் எழுந்த எந்த வேற்றுமைகளையும் நாம் அங்கே பார்க்கவில்லை. பின் மனிதனைப் பார்க்கிரேம். எந்த மனிதனைப் பார்க்கிரேம்? உலக மனிதனைப் பார்க்கிரேம். மனித வர்க் கத்தின் சராசரி மனிதனைப் பார்க்கிரேம். அவ னுடைய மா காப்பியமாக வள்ளுவம் திகழ் வதை நாம் பார்க்கிரேம். அப்படிப் பார்ப்ப தால் நமக்கு என்ன ஏற்படுகிறது. நாம் பார்ப் பது மட்டுமல்ல. அந்தக் காலத்திலிருந்தே, பார்த்திருக்கிருர்கள். அந்தக் காலத்தில் சிறந்த சைவசித்தாந்த நூல் கல்லாடம்என்பது. கல்லா டத்தினுடைய இலக்கண, இலக்கிய வன்மை யைப் பற்றிக் கூறுகிறபொழுது கல்லாடம் கற்றவனுடன் மல்லாடாதே என்று சொல் வார்கள். அந்தக் கல்லாடம் திருக்குறளை வரையறுத்துச் சொல்லுகிறபொழுது, வள்ளு வனை வரையறுத்துச் சொல்லுகிறபொழுது, "சமயக் கணக்கர், மதிவழி செல்லாது உலகி யல் இது என்ற குறள்." என்று கூறுகிருர். ஆகவே அவர் அப்படிப் படித்திருக்கிருர். அதே மாதிரித்தான் மிகச் சிறந்த சான்றேன் பன்மொழிப் புலவன், இந்தியாவில் வந்து, இந்தியாவில் தமிழ் மக்களில் அருந்தொண்டு செய்தோன் ஆகிய போப்பையர், சிறந்த சன் றேனுகிய போப்பையர் The born of universal man என்று கூறுகிருர். மன்பதை யின் பாடகன் வள்ளுவன் என்று கூறுகிருர். என்பதைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண் டும். இதைத்தான் உலகினிற்கு வள்ளுவன் கொடுக்கப் பட்டான் என்று கூறப்படுகிறது. இன்றும், நாளையும், அப்பாலும் உலகினிற்குக் கொடுக்கப்பட்டான். இதைத்தான் சோவியத் நாட்டில் இருக்கக் கூடிய சிறந்த கலைஞர்

களும் "இறவாத சிறந்த இலக்கியம்" என்று திருக்குறளைக் கூறுகிருர்கள். இனத்தை, நாட்டை, மதத்தை, இதர வேற்றுமைகளை தாண்டி எங்கும் நிற்கக் கூடிய இலக்கியம் என்று கூறுகிருர்கள். ஏன்? வள்ளுவன் மனிதன். மனிதனுடைய அடிப்படைக் கொள்கையைக் பிடித்துக் கொண்டான். அந்தக் கொள்கையை பல்வேறு உருவங்களில் சொல்கிருன். ஆதலால்தான் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று நாம் பார்க்கிருேம். "மேலிருந்தும் மேலல்ல மேவல்லவர்." என்று கூறுவதை நமக்குப் பார்க்க முடிகிறது. எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டவேண்டும். என்று கூறப்படுகின்றது. ஆதலினுல்தான்—எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்ட வேண்டும் என்பதை வலியுறுத்திச் சொல்லுகிருன். இதைத்தான் பின்னுடி வளர்த்த பொழுது,

"வியனுல கனைத்தையும் அமுதென
நுகரும் வேத வாழ்வு"

என்று பாரதி கூறினுன். அன்று வள்ளுவன் காட்டிய வழி, வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழி. பின்ட எ ப் ப டி நமக்கு அது விளக்கம் தரப்படுகிறது. இகத்தில் பரத்தைக் காண்பது என்றுவிளக்கம் தரப்படுகிறது. மண் பயனுறவேண்டும். வானகம் இங்கு தென்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. இங்கு தென்படவேண்டும் என்பதற்கே நின்றவன் வள்ளுவன். வள்ளுவனுடைய தத்துவ ஞானம், ஆங்கிலத்தில் சொல்வது போல Energacing Force உள்ளது. அப்படியானுல் உயிர் தத்துவம் செறிந்த தத்துவம் வள்ளுவனுடைய தத்துவம். "நிற்க அதற்குத் தக" என்று வள்ளுவன் கூறுகிருன்.

பேச்சு வேறு, செயல் வேறல்ல. பேச்சுக்கும், செயலுக்கும் இடையில் ஏற்படக் கூடிய எந்தச் சுவரையும் உடைத்தெறிய வேண்டும். பேச்சும் செயலும் இரண்டறக் கலந்து உயிர்த் துடிப்போடு நடமாடவேண்டும் என்பதற்காக நின்றவன் வள்ளுவன். எல்லாவிதமான, சான்ருண்மை என்று நான் சொல்லுகிறபொழுது, நிறை குணம் என்று கூறுகிருேம். அந்த மனிதன் சராசரி மனிதன். ஆகச் சிறந்த மனிதன். மேலும், மேலும், மேலும், யுக யுகாந்திரமாக மேலும், மேலும், மேலும், காலத்திற்கு ஏற்ப, காலத்திற்குத் தக்கபடி தன்னைப் புதுப்பித்துக் கொண்டே வளர்ந்து வரக் கூடிய அந்த மனிதக் கொடி இருக்கிறதே, மனிதக் கொடி அதிலுள்ள அந்த மனிதன் இருக்கிருனே, அந்த மனிதனை மேலும் செழிப்பூட்டுவதற்கு ஆன குணங்களையெல்லாம், ஆன தத்துவங்களையெல்லாம் ஆன உண்மைகளையெல்லாம். விளக்கமாகத் தந்திருக்கக் கூடிய பெரும் வள்ளல், நிகரற்ற வள்ளல் வள்ளுவன். தந்திருப்பதோடு மட்டுமல்ல, அவன் தந்தது மாதிரி உலக இலக்கியத்தில், மிகச் சிறந்த சான்ருேர்கள் இருக்கிருர்கள். அது ஒன்றும் வேண்டாம். எல்லா சான்ருேர்களையும் விட, எல்லா சிறந்த இலக்கியங்களைவிட திருக்குறள் தனித் தன்மை கொண்டதாக விளங்குகின்றது. உலகத்திலுள்ள பல்வேறு துறைகளிலுள்ள உண்மைகளையெல்லாம் திரட்டி அதை இவ்வளவு சுருங்கச் சொல்லி விளங்க வைத்த நூல். அப்படியென்ருல் அணுவைத் துளைத்து, ஏழு கடலைப் புகட்டி, குறுகதரித்துத் தந்த நூல் குறளுக்கு நிகராக உலகத்தில் வேறு எந்த நூலும் இல்லை யென்பது வள்ளுவனுடைய பெருமையைக் காட்டுகிறது. சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டுமென்ருல், அனுபவத்திலும், சிந்தனையிலும், ஆழ்ந்த நூலறிவிலும், எவ்வளவும் முதிர்ந்த, கனிந்த நிலைமையில் இருந்தால்தான் அப்படிப்பட்ட ஈடும், எடுப்பு மற்ற, உலகம் எங்கும் மூக்கில் விரல் வைத்து மிதந்தோதிப் பெருமைப்படத் தகுந்த அப்படிப் பட்ட சிறந்த பணி ஆற்ற முடியும். அத்தகைய பணியைச் செய்திருக்கிறது வள்ளுவனுடைய உள்ளம். அந்த உள்ளம். எல்லையில்லா உள்ளம் வள்ளுவன் சொல்லுகிருன் பல இடங்களில் கூறியிருக்கிருன். நிலையில் தெரியாத உள்ளம் இருக்கிறதே, அது மலையினும் மாணப் பெரிது, என்று ஒரு இடத்தில் கூறுகிருன். பயன் தூக்காமல் செய்யக்கூடிய நன்றி இருக்கிறதே, அது நல்ல அதனுடைய நன்மை கடலில் பெரிது என்று இன்னெரு இடத்தில் கூறியிருக்கிருன். பிறிதொரு இடத்தில் அவன் கூறுகிருன், காலத்தினுல் செய்த நன்றி இருக்கிறதே, அது சிறிதாக இருந்தாலும் ஞாலத்தில் மாணப் பெரிது என்று கூறியிருக்கிருன். மலையைக் கூட பெரிய பண்போடு, கடலைவிட அந்தப் பெரிய பண்போடு ஞாலத்தை, பூவுலகைவிட அந்தப் பெரிய பண்போடு, ஏன், மலையைவிட, கடலைவிட, உலகைவிட, வானத்தைவிடப் பெரிய பண்போடு, வானத்தை அளாவி நிற்கக் கூடிய பண்போடு வள்ளுவன் சிறந்த நூலைத் தந்திருக்கிருன். வ ள் ளு வ ன், வாழ்க்கை, மனித வாழ்க்கையை, உலகம் முழுவதற்குமுள்ள மனித வர்க்கத்தின் பொதுத் தன்மையில், புதுத் தன்மையில், சிறந்த தன்மையிலுள்ள வாழ்வு முழுவதையும் வடித்து எடுத்து நூல் வடிவில் தந்திருக்கிருன். அதைத் தான் வள்ளுவம் என்று சொல்கிருேம்.

அங்கே, வள்ளுவத்தினுடைய முழு சாயையும் வீசுவதைப் பார்க்கிறோம். அங்கே, வள்ளுவன் அந்த 1330 அருங்குறளையும் கொண்ட அந்த நூலில் உயிர்த் துடிப்போடு, என்றும் இளமையாக, என்றும் வளருந் தன்மையோடு, என்றும் அழகோடு, என்றும் பண்போடு, என்றும் இனிமையோடு, என்றும் பேரொளியோடு அவன் ஒளிவிட்டுப் பிரகாசித்துக்கொண்டே நிற்கிறான்.

அப்படிப்பட்ட வள்ளுவத்தின் உள்ளத்தை எனது மதிப்பிற்குரிய நண்பர் வேணுகோபால் சர்மா அவர்கள், 30 ஆண்டுகள், ஒரு நாள் இரண்டு நாள் அல்ல, 30 ஆண்டுகள் மென்று, மென்று, மென்று, உண்டு, செரித்து, தன்வயப் படுத்தி, தன்னுடைய ஆற்றல் முழுவதையும், முழு மூச்சோடு, சிங்கம் முழு மூச்சோடு, தனது பணியில் பாய்வது மாதிரியாக, முழு மூச்சோடு ஈடுபட்டு, 30 ஆண்டுகள்செய்த அந்த நன் முயற்சி,முன் முயற்சியின் விளைவுதான் எனக்கு முன்னால் இப்பொழுது என்னை மெய்சிலிர்க்கச் செய்கிற, என்னை இன்பக் கடலிலாழ்த்துகிற, என்னை உணர்ச்சி வேகத்தில் முழுக்கி முழுக்கி எடுக்கக் கூடிய இந்த ஒப்பற்ற திருவுருவப் படமாகத் திகழ்கிறது என்பதை நான் கூறுவதற்கு விரும்புகிறேன்.

இந்தப் படத்தைப் பற்றி எனக்கு இப்பொழுதே சொல்வதற்கு நிறைய உண்டு. இந்தப் படத்தைப்பற்றி நான் நண்பர் சர்மா அவர்களிடத்தில் கூறுகிறபொழுது, ஒரு நாள் முழுவதும் ஓய்வோடு இருந்து இந்தப் பாடத்தைப் படிக்க வேண்டும் என்று நான் அவரிடத்தில் கூறினேன். ஆயினும் இந்தத் தருணத்தில், வள்ளுவத்தை வள்ளுவனாக காட்டின, வள்ளுவத்தை வள்ளுவ உருவத்தில் காட்டின பெருமை நண்பர் சர்மா அவர்களுக்கு உண்டு என்று நான் கூறுகிற பொழுது அது ஒன்றுதான் என்னுடைய உள்ளத்தை மேலும் மேலும் இழுத்துக்கொண்டிருக்கிறது, என்றும் இழுக்கும் பான்மை படைத்ததாக இருக்கிறது. 'கண்ணிற் சிறந்த உறுப்பில்லை' என்று அறிஞர்கள் கூறுவார்கள். இங்கே அந்தப் படம் முழுவதுமே வடிவு நிறைந்த படம். எந்த உறுப்பை எடுத்துக் கொண்டாலும் கருத்தாழத்தோடு மலர்ந்திருக்கக் கூடிய வடிவம் கொண்டது என்று நான் பார்க்கிறேன். எனினும், கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்றேனே, அதைப் போன்று, இந்த கருத்தாழத்திலிருந்து மலர்ந்த திருவுருவப் படத்தில் அவர் தீட்டியிருக்கக் கூடிய கண்கள் இருக்கின்றனவே, அவைகள் காவியங்கள், ஓவியங்கள் மட்டுமல்ல, மனித சமுதாயத்தின் காவியங்களையெல்லாம், நண்பர் சர்மாவிற்கே-என்னைப் போன்றவர்களுக்கு மட்டுமல்ல, தீட்டிய சர்மா அவர்களுக்கே, திரும்பத் திரும்ப அதை பார்க்கிற பொழுது படிக்கிற பொழுது மேலும் மேலும் எத்தனை எத்தனையோ கதைகளை, எத்தனை எத்தனையோ உண்மைகளை, மனிதன் முன்னேறுவதற்கான எத்தனை எத்தனையோ தத்துவங்களை அவருக்குக் காட்டிக் கொண்டேயிருக்கும். அவ்வளவு பேராற்றல் வாய்ந்த கண்கள் அந்தக் கண்கள். அந்தக் கண்களிலேயே அவருடைய ஓவியத் திறமை முழுவதும், அந்தக் கண்களிலேயே வள்ளுவத்தில் அவர் பயின்ற,—மென்று, மென்று, மென்று உண்ட அந்த உண்மைகளை வெளியிடும் ஆற்றலும் அடங்கிக் கிடக்கிறது என்பதை நான் பார்க்கிறேன். அந்தக் கண்களுடைய பார்வையில் தான் வள்ளுவன் எல்லோராலும் எல்லாம் கற்றவன் என்று கருதப்படுகிற வள்ளுவன், நிறைகுடம் என்று உலகமெல்லாம் தலையசைக்கத் தகுந்த அற்புதமான, அருமருந்தன்ன, சாதனையான குறளை வடித்துத் தந்த அந்த வள்ளுவன், 'கற்றது கை மண்ணளவு, கல்லாதது உலகளவு.' நான் கண்டது கொஞ்சம். நான் இப்பொழுது பார்க்கிற பார்வையில் எல்லையில்லாத மனித வாழ்வைப் பார்க்கிறேன், எல்லையில்லாத மனித வாழ்வைக் கொண்ட சமுதாய வாழ்வைப் பார்க்கிறேன், எல்லையில்லாத மனித சமுதாய வாழ்வைத்தாங்கி நிற்கக் கூடிய உயிர் வாழ்க்கையைப் பார்க்கிறேன். உயிர் வாழ்க்கையையும் தாங்கி நிற்கக் கூடிய பேருலகம் இருக்கிறதே அந்த வியனுலகம், அந்த வியனுலக வாழ்க்கையெல்லாம் ஊடுருவிப் பார்க்கிறேன். மேலும் மேலும் பார்க்கிறேன். தாகூர் கூறியது மாதிரி, இடையறுத முயற்சி, முழு நிறைவு என்பதை நோக்கி, இரண்டு கரங்களையும் விரித்து, தாவித் தாவி, தாவித் தாவிச் சென்று கொண்டிருக்கக் கூடிய அந்த ஊறிய, நெடுங் கூறிய, ஆமாம் உண்மைகளை மேலும் மேலும் காண்பதற்கான அந்த அளவு கடந்த ஆவல், வேட்கையிருக்கிறதே, அந்த சிறந்த மனித வேட்கை, அறிவு வேட்கை, பண்பு வேட்கை, புதுமை வேட்கை, மேலும் மேலும் புதுப்பிக்கிற வேட்கை, அந்த பிரபஞ்ச வளர்ச்சி முழுவதும் அந்த கண்ணுக்குள் பார்க்க எனக்கு முடிகிறது. இதை மீண்டும், மீண்டும், மீண்டும் பார்க்கிற பொழுதுதான் நண்பர் அவர்கள் நமக்குச் சொல்லித் தருவதைவிட, நாம் படித்துக் கொள்வதைவிட, இன்னும் படித்துக்கொண்டே இருக்கிறதுதான்—அது தான் திருக்குறள். அந்தத்திருக்குறளின் மனித

வடிவம்தான் நண்பர் அவர்கள் வரைந்து காட்டக் கூடிய, உயிர்த் துடிப்புள்ள வள்ளுவ ருடைய படம் என்பதை நான் கூறி, இப்படிப் பட்ட பெரும் பணிக்கு, அரும் பணிக்கு, தமிழ் உலகம், தமிழ் உலகம் மட்டுமல்ல, வள்ளு வனைப் பயன் படுத்துகிற பாரத உலகம், பாரத உலகம் மட்டுமல்ல, உலகம், பூவுலகம் முழுவதுமே, நாள் ஏற ஏற, வள்ளுவத்தின் பெருமைத்தெரியத் தெரிய, வள்ளுவத்தின் பெருமை அதன் மூலம் அறிய அறிய, நண்பர் சர்மா அவர்கள் தீட்டியிருக்கக் கூடிய படத் தின் சிறப்பும், பெருமையும் நாள் ஏற ஏற ஏறும் என்பதை நாம் பார்க்க, இப்படிப்பட்ட ஒரு அரிய தொண்டை தமிழ் மகனுகப் பிறந்து, தம்முடைய சிறந்த நூலான திருக் குறளிலேயே வாழ்ந்து, அந்த வாழ்க்கையை தன்மயமாக்கிக் கொண்டு, அந்த தன்மயமாக் கிக்கொண்ட அந்தத் தன்மையையே முயற்சி, பெருமுயற்சியாக்கி, இப்படிப்பட்ட படத்தை வரைந்து அளித்திருக்கக்கூடிய அந்தப் பணி இருக்கிறதே என்றும் தமிழ் மக்களாலும், நாள் ஏறஏற பாரத மக்களாலும், இன்னும் நாள் ஏறஏற உலகத்து மக்களாலும் பாராட் டப்படும். இப்படிப்பட்ட சிறந்த காரியத்தை நண்பர் சர்மா அவர்கள் செய்திருக்கிருர்கள். அதற்கு, தமிழ் மக்களுடைய சார்பில், உலகத்து மக்களுடைய சார்பில் துணிந்து சொல்வதற்குத் துணிகிறேன். உலகத்து மக்க ளுடைய சார்பில், சர்மா அவர்களுக்கு ஆழ மான, அன்பு கனிந்த, மனம் நிறைந்த, நன்றி யறிதலை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்து, எனக்கு இந்தப் படத்தைப் பார்க்கையில் ஏற் பட்டிருக்கக்கூடிய மகிழ்ச்சி என்னுடைய 35 ஆண்டு வாழ்க்கையில் திருக்குறளைப் படிக் கிறபொழுது, அதில் சிந்திக்கிற பொழுது ஏற் பட்ட மகிழ்ச்சியில் ஒரு கொடுமுடி மட்டு மல்ல, Everest கொடுமுடி மாதிரியான ஒரு மகிழ்ச்சிக் கடலில் நான் திளைக்கிறேன் என் பதைக் கூறி இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

யாதெனின்

பேதமை யென்ப(து) யாதெனின் ஏதங்கொண்(டு)

ஊதியம் போக விடல்

சற்றேறப்ப 20 நூற்றாண்டுகளுக்கு முன்பு மகான் சாக்ரடீஸ் கிரேக்கத்திலே தோன்றி னான். கன்பீஷியஸ் என்ற விஞ்ஞானி சீனத் திலே தோன்றினான், புத்தர் இந்தியாவில் தோன்றினார், ஒரு ஒப்பற்ற மாபெரும் தமிழ் மரபை நமக்களித்தவர் உலகப் பொதுமறை தந்த பொய்யாப் பெருந்தகை 'வள்ளுவர்' நாம் பிறந்த நம் தாயகத்தில் தோன்றினார் என்றெண்ணும்போது சிந்தையெல்லாம் தோள்களெல்லாம் துடிக்கின்றன. இன்று நாம் கண்ட 'வள்ளுவர்' நமக்குக் குறளைத் தான் தந்தார் என்று இதுவரையிலும் நாம் நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் நமது அருமை நண்பர் திருவாளர் வேணுகோபால் அவர்கள் வள்ளுவரையே நமக்குத் தந்திருக் கிறார்கள். வள்ளுவர் குறளையும் வள்ளுவர் படத்தையும் பார்க்கின்றபொழுது தமிழ் அழிந்து படும் என்று நமக்கு இதுவரை இருந்த ஐயப்பாடுகளெல்லாம் உள்ளபடியே நீங்கிவிட்டது.

ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகத்தில் ஒரே ஒரு ஏடு இருக்கின்றவரையிலும் ஆங்கில நாகரிகம் அழியாது என்று அவர்கள் சொல் வதைப் போல, ஷெல்லியும், பைரனும், கீட் ஸும் இருக்கின்றவரையிலும் ஐரோப்பிய நாக ரிகம் அழியாது என்று அவர்கள் சொல்வ தைப்போல, சமுதாய ஒப்பந்தம் என்ற நூல் இருக்கின்றவரையிலும் பிரான்ஸ் நாட்டு நாக ரிகம் அழியாது என்று பிரான்ஸ் நாட்டுக்காரர் கள் சொல்வதைப்போல, மனுநீதி இருக்கின்ற வரையிலும் ஆரிய நாகரிகம் அழியாது என்று நமது ஆசிய நண்பர்கள் சொல்வதைப்போல, குறள் இருக்கின்றவரையிலும் நிச்சயமாக அழியாது என்று திட்டவட்டமாக நம்மால் சொல்ல முடியும். ஏனென்று சொன்னால், குறள் ஒரு நாட்டிற்கோ, ஒரு இன மக்க ளுக்கோ, ஒரு நாகரிகத்தைப் பின்பற்றியவர் களுக்கோ, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ சொன்னதல்ல. எக்காலத்திலும், எந்த நாட் டுக்காரர்களாலும், எப்பொழுதும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு உயிர்த் துடிப்புள்ள குறள் என்று சொன்னால், அதை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் நாளுக்கு நாள் அதிகமாக வந்து கொண்டேயிருக்கிறார்கள். ஏறக்குறைய 32 மொழிகளிலே குறள் மொழி பெயர்க்கப்பட் டிருக்கிறது என்று சொன்னால், உள்ளபடியே குறளைப் பின்பற்றுகிறவர்கள் எல்லா நாடுகளி லேயும் இல்லாமலிருக்கலாம். ஆனால் குறளை மறுக்கிறவர்கள் இதுவரையில் யாரும் தோன் றியதாகவோ, அல்லது மறுப்புக் கூறிய தாகவோ நாம் அறிந்தமட்டில் இல்லையென்று தைரியமாகக் சொல்லிவிடலாம்.

திரு சி. பி. சிற்றரசு

*

சிலர் காதலைப்பற்றி எழுதி, காதல் முடிவு பெறவில்லையானால் சாதல் என்ற முடிவோடு கல்லறைக்குச் செல்கின்ற அளவே அவர்க ளுடைய கருத்துக்களும் கல்லறைக்குச் சென் றிருக்கிறது. சிலர் அரசியலைப்பற்றிப் பேசி அரசியல் முடிவு பெறுவண்ணம் போனபிறகு பெரும் புரட்சியிலே மோதிவிட்டு இரு சாரா ரும் இறந்தனர் என்று அந்தக் கல்லறைச் செய்திகளே நமக்குச் சொல்லிக்கொண்டிருக் கிறது.

அரசியலைப்பற்றி வள்ளுவர் என்ன எழுதி யிருக்கிறார் என்று பார்த்தால், அரசியலைப்பற்றி இதுவரையிலும் எத்தனையோ அரசியல் தலை வர்கள் எழுதியிருக்கிறார்கள். பொதுவாக டெமாக்ரஸி என்று சொல்லுகின்ற ஜனநாய கம், எத்தனை வகைப்பட்டது என்பதை நம் மால் புரிந்துகொள்ள முடிகிறது. Direct Democracy என்று சொல்லுகின்ற நேரடியான ஜனநாயகம், Indirect Democracy என்று சொல்லுகின்ற மறைமுகமான ஜனநாயகம். Capitalistic Democracy என்று சொல்லு கின்ற முதலாளித்வ ஜனநாயகம், Monarchical Democracy என்று சொல்லுகின்ற மன்னராட்சியை அனுமதித்துக் கொண்டிருக் கிற ஜனநாயகம். இதிலே நம்முடைய நாட் டிலே என்ன ஜனநாயகம் நடைபெற்றிருக் கிறதோ அதை நான் இங்கு பேசவரவில்லை. என்றாலும் வள்ளுவர் குறள்படி அமைந்திருக் கின்ற அரசியல் இங்கு நடந்தால் மற்ற அர சியலுக்கு வேலையிருக்காது என்றே கருது கிறேன். ஒரு காலத்தில் இருந்திருக்கிறது என்று நாம் கேள்விப்படுகிறோம். படிக்கி றோம். அனார்கிஸம் என்று சொல்லுகின்ற ஆட்சி முறையே இல்லாமல் அவரவர்கள் பெற்றதை, பெற முடியாதவர்களுக்கு பங்கிட் டுக் கொடுத்து தம்முடைய வாழ்க்கையை செம்மைப்படுத்திக் கொண்டார்கள் என்று சொல்லுகின்ற அந்தக் காலத்திற்கும் மிக முந் திய காலத்தவர் 'வள்ளுவர்' என்று நமக்கு நன்றாகத் தெரிகிறது. கோலாட்சி எப்படி இருக்க வேண்டுமென்பதும், குடிமக்கள் எப் படி இருக்கவேண்டு மென்பதையும் வரை யறுத்துக் கொடுத்தவர் வள்ளுவர்தான்.

காதலைப் பற்றி அவர் ஒரே ஒரு வரியிலே சொல்லிவிட்டார்கள். அதாவது வள்ளுவரைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன்னால்,

வள்ளுவர் எழுதிய குறளைப் படிப்பதற்கு முன்னால், நமக்கு போதிக்கப் பட்டதெல்லாம், மகாவிஷ்ணு உலகத்தை மூன்று அடியிலே அளந்தார் என்று சொல்லப்பட்டது. அது உண்மையாயிருக்குமோ என்று நாம் ஐயப் பட்டுக் கொண்டிருந்த காலத்திலேதான் நம்முடைய கையிலே குறள் வந்து தவழத் தொடங்கியது. குறளைப் படித்த பிறகுதான் மகாவிஷ்ணுவைவிட மிகப் பெரியவர் வள்ளு வர் என்று நமக்குப் புரிகிறது. காரணம், மகா விஷ்ணு உலகத்தை மூன்று அடியிலே அளந் தார் என்றால் வள்ளுவர் ஒண்ணரை அடியி லேயே உலகத்தை அளந்திருக்கிறார் என்று புரிகிறது. அந்த முறையிலே பார்க்கிற பொழுது நான் மகாவிஷ்ணுவை குறை கூறு வதாக யாரும் தயவு செய்து கருதவேண்டாம். வள்ளுவரைப் பற்றி தெரிந்து கொண்டவரை ஒளிக்காமல் சொல்வதற்கு இது நல்ல கருத்து என்றே கருதுகிறேன்.

வாழ்க்கையைப் பற்றியும், காதலைப் பற்றி யும் சொல்லுகின்ற பொழுது, நம்முடைய நாகரிகம் எப்படி திளைத்திருக்கிறது என்பதை கணவன் என்று குறிப்பிட்டால் கண் + அவன் இரண்டும் சேர்ந்து கணவன் என்று ஆகிறது. ஒரு மனைவிக்கு கணவன் கண்ணை போன்ற வன் என்ற கருத்திலேதான் கணவன் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் நம்மி டையே வந்து புகுந்திருக்கிற நாகரிகம் கண வனைப் பற்றி பேசுகிற பொழுது புருஷர்கள் என்று குறிப்பிடுகிறார்கள். புருஷர்கள் என்று சொன்னால் ஆண்கள் என்ற பொதுத் தன்மை யைத்தான் அடைகிறதே தவிர ஒருமனைவிக்கு கணவனுகின்ற பொறுப்பு அந்த வார்த்தை யிலே கருத்து துணிந்திருப்பதாக நம்மால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. தனித் தமிழிலே எழுத முடியுமா என்று பார்த்தால் உள்ள படியே குறளிலே தனித் தமிழ் இருக்கிறதா, இல்லையா என்று நம்மால் புரிந்துகொள்ள முடியும். எப்படியோ, இந்த உலகம் பல்வேறு நாகரிகத்தைப் பொருத்திருக்கிறது என்று நமக்கு நன்றாகப் புரிகிறது.

கங்கைக் கரையிலே ஆரிய நாகரிகமும், காவிரிக் கரையிலே தமிழர் நாகரிகமும், நீப்பா, நேவார், தான் என்ற நதிக் கரை களிலே ரஷ்ய நாகரிகமும், தேம்ஸ் நதிக் கரையிலே வெள்ளையர் நாகரிகமும், மிஸிஸிபி, மிஸ்ஸௌரி என்ற இரு ஆற்றங்கரையிலே அமெரிக்க நாகரிகமும், மஞ்சள் நதிக் கரை யிலே சீன நாகரிகமும், யுவான்ஸி என்ற நதிக் கரையில் ஜப்பான் நாகரிகமும் தோன்றியிருக் கின்றது என்று தெரிகிறபொழுது அந்தந்த நாக ரிகம் எப்பொழுது அழியும் என்று சொன்னால், ஒரு சமயம் காவிரியிலே நீர் வற்றினால் தமிழர் நாகரிகத்திற்கு ஆபத்திருக்கிறது என்று பலர் பேசி நான் கேட்டிருக்கிறேன். காவிரியில் நீர் வற்றட்டும். மணலே கூட மிகுந்திருக்கட்டும். என்றாலும் தமிழர் நாகரிகம், குறளிலே ஒரே ஒரு குறள் இருக்கிற வரையிலும் அதை நிச்சய மாக அழிக்க முடியாது என்று நான் திட்ட வட்டமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். ஒரு சமயம், நம்மைப் பற்றி சரியா கப் புரிந்துகொள்ளாத பிற நாட்டார் உங்களு டைய நாகரிகம் எது என்று சொன்னால் நாம் சிலப்பதிகாரத்தை எடுத்துப் போடுவதற்கு முன்னால், ஐம்பெருங்காப்பியங்களை எடுத்து அவர்கள் முன்னாலே வீசுவதற்கு முன்னால், மணிமேகலையை அவர்களை படிக்கச் சொல்வ தற்கு முன்னால் எங்கள் குறள் இதுதான், இதுதான் எங்களுடைய மார்க்க சமுதாயப் பழக்க வழக்கங்கள், இதன்படி நடந்தால் உலகம் எப்படி இருக்கு மென்பதை, தயவு செய்து படிக்கின்ற மேநாட்டுக்காரர்களே! அயல் நாட்டுக் காரர்களே தயவு செய்து கூறுங்கள் என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லலாம். பிறர் நினைக்கிறார்கள் தமிழர் நாகரிகத்தையும், தமிழையும் அழித்துவிட முடியுமென்று. உள்ளபடியே தமிழ் குறளால் மாத்திரமல்ல, குறள் அதற்கு வேலியாக அமைந்திருக்கிறது. உள்ளே அதற்கிருக்கிற தமிழை, முப்பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள் என்று சொன்னால், நான் தெலுங்கையும் படித் திருக்கிறேன், ஆங்கிலத்தையும் படித்திருக் கிறேன், தமிழையும் படித்திருக்கிறேன். பல மொழிகளைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். என்றாலும் வேறு எந்த மொழியும் முப்பிரிவு களாகப் பிரித்ததாகத் தெரியவில்லை. தமிழ் ஒன்றுதான் மூன்று பிரிவுகளாக பிரிக்கப் பட்டிருக்கிறது. அதாவது இயல், இசை, கூத்து என்று. ஆங்கிலத்திலே இப்படி மூன்று பிரிவுகள் இல்லை. ஆங்கில நாடகத்தில் ஜூலியஸ்ஸீஸர் நாடகத்தை எழுதிய ஷேக்ஸ் பியர் "You too Brutus" என்று சொல்வதற்கு பதிலாக "Ye too Brutus" என்று சொல்கிறார். அது நாடகத்திற்காக தனிப்பட்டு ஏற்படுத் திய ஆங்கிலம் என்று சொல்ல முடியாது. தெலுங்கிலேயும் அப்படித்தான். என்றாலும் தமிழை மாத்திரம் மூன்று பிரிவுகளாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் என்ன காரணம் என்று சொன்னால், இப் பொழுது நான் பேசுவது 'இயல்' ஆகிறது. இதையே கொஞ்சம் சத்தத்தோடு, அல்லது ராகத்தோடு சொல்லுகிற போது அது இசை யாக மாறுகிறது. ஏன் இப்படி இந்த இரண்டு பிரிவாக இருக்க வேண்டுமென்று கேட்டால்,

வள்ளுவரைப் போன்ற பெரியவர்கள், அல்லது அவருக்குப் பிறகு வந்தபெரியவர்கள் குழந்தைகளுக்கு இசையின் மூலம்தான் எதையும் போதிக்க முடியும் என்று கண்டார்கள். குழந்தைகளைத் தூங்கவைக்கப் போகும்போது மாத்திரம் இசை பயன்படாது அவர்கள் உண்ணவும், உடுக்கவும், வேறு பல காரியங்களைச் செய்கின்ற போதும், பெற்றோர்களுடைய சொல்லைக் கேட்காத சிறுவர்களை தம் வயப் படுத்துவதற்காக இயல் என்ற தமிழிலே இசையும் சேர்த்திருக்கிறார்கள். இதற்கு உதாரணம் சொல்லவேண்டுமென்றால், என்னுடைய மகன் பெயர் சாக்ரடீஸ். ''சாக்ரடீஸ்! நீ சாப்பிடு.'' என்று நான் கண்டிப்பாகச் சொல்வேனானால் அவன் ஒரு சமயம் சாப்பிட மறுக்கவும் கூடும். ஆகையினாலே அவனைப் பார்த்து கொஞ்சம் இசையும் சேர்த்து, ''கண்ணே! சாக்ரடீஸ்! சாப்பிடப்பா.'' என்று சொன்னால் அந்த இசைக்கு அவன் அடங்கிவிடக் கூடும். நான் சொல்வதை அவன் பிறகு கேட்கவும் கூடும். அதேபோலத்தான் இவை இரண்டையும் சேர்த்து பிறகு நாடகமாக்கியிருக்கிறார்கள்.

மேலும் நாம் பெருமைப்படத் தகுந்த ஒரே ஒரு கருத்தை குறளிலே நான் சொல்ல முடியும் என்று கருதுகிறேன். ஒழுக்கம் என்றால் எப்படியிருக்க வேண்டும் என்று ஆங்கிலேயன் சொல்லுகிறான். ஒழுக்கமாக இருப்பதுதான் நல்ல உபாயம் என்கிறான். இதை ஆங்கிலத்திலே சொல்லும் பொழுது Honesty is the best policy Honesty is the best policy என்று சொன்னால் ஒழுக்கமாக, யோக்யமாக இருப்பதுதான் நல்ல உபாய மென்று சொல்கிறானே தவிர, அவன் எப்படிச் சொல்லியிருக்க வேண்டும். Honesty is the best principle என்று சொல்வதற்கு பதிலாக Honesty is the best policy என்று சொல்லியிருக்கிறான். அதற்குப் பதிலாக அவன் ஏன் சொன்னான் என்று நாம் அவனைக் கேட்கப் போவதில்லை. ஆனால் குறளிலே வள்ளுவர் சொல்கிறார். ஒழுக்கமாய் இரு. ஏன்? என்று கேட்டால் ''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்'' ஒழுக்கம் என்பது உயிரைக் காட்டிலும் மிக உயர்ந்தது என்ற கருத்திலேதான் உயிரைக் கொடுப்பதானாலும் ஒழுக்கத்தை விடாதே. ஒழுக்கத்தைக் காப்பாற்றுவதற்காக உயிரைக் கொடுப்பதானால் நீ கொடுத்து விடு. காரணம் ஒழுக்கம் என்பது உயிரைவிட அதிக விலை உடையது அதிக மதிப்புடையது என்றுதான் அப்பொழுது பெருமை என்ற பாவத்திலே வந்து நிற்கிறான். ஆனால் ஒழுக்கத்தைக் காப்பாற்றுவதற்காக நீ உயிரைக் கொடுத்தாய் என்று சொன்னால் உயிர் என்று சொல்லுகின்ற மலிவான விலையைக் கொடுத்து ஒழுக்கம் என்ற அதிகமான விலையுள்ள பொருளை நீ காப்பாற்றியிருக்கிறாய் என்ற தன்மையிலேதான் உயிரைக் காட்டிலும் ஒழுக்கம் மேலானதாகக் கருதுகிறது என்ற கருத்திலே அவர் சொல்லியிருக்கிறார். இந்தக் கொள்கைகள் மற்ற சமுதாய அமைப்புகளை அமைத்துத் தந்தவர்களிடத்திலே இருக்கிறதோ, இல்லையோ நாம் அறியோம். ஆனால் நம்முடைய குறளிலே அது இருக்கிறது என்பதற்காக நாம் பெருமைப் படுகிறோம்.

ஆனால் வள்ளுவரை நாம் வழிபடுவது எப்படி? வள்ளுவரைப் பின்பற்ற வேண்டுமென்று சொன்னால் வள்ளுவர் குறளிலே, நாம் படித்த 1330 குறளிலே எவைகளை கூடுமான வரையில் பின்பற்ற முடியுமோ, சாத்தியமான வரை நாம் அதைப் பின்பற்ற வேண்டும். அதை விடுத்து குறளை பெருமைப் படுத்துகிறோம் என்று சொல்லி வள்ளுவருடைய படத்தைத் தூக்கி யானையின்மேலே வைத்து, அதற்கு மாலைகளைச் சூட்டி ஊர்வலம் வருவது என்று சொன்னால் குறளை நாம் பின்பற்றுவதாக இல்லை. இதை எதற்கு ஒப்பிடலாம் என்று சொன்னால், இங்கிருந்து பல்லாவரம் போகவேண்டுமென்று கருதுகிறவன், பல்லாவரம் இங்கிருந்து 12 மைல் என்று காட்டுகின்ற கைகாட்டியின் பக்கத்திலே நின்று, பல்லாவரம் போகவேண்டுமென்று விரும்புகிறவன் பல்லாவரம் 12 மைல் இருக்கிறது என் கைகாட்டுகிற பக்கத்திலே அவன் வண்டியைச் செலுத்த வேண்டும். அப்போதுதான் அவன் 12 மைல் அப்பாலுள்ள பல்லாவரத்தைப்போய் சேர முடியும். அதை விட்டு விட்டு பல்லாவரம் 12 மைல் என்று இருக்கின்ற கைகாட்டிற்கு மாலை போட்டு அதன் கீழ் ஒரு தேங்காயை உடைத்து, சூடத்தைக் கொளுத்தி அங்கேயே சுற்றிச் சுற்றி வந்தால் அவன் பல்லாவரம் போய் சேரமுடியாது. எப்படி அந்த கை காட்டிக்கு மாலை போட்டு அதைக் கும்பிடுவது எவ்வளவு பைத்தியக் காரத்தனமோ, அதைப் போலவேதான் வள்ளுவர் படத்தைத் தேரிலே வைத்து ஊர்வலம் வருவது என்று நான் கருதுகிறேன்.

வள்ளுவருக்கு நாம் பெருமை தரவேண்டும். நாம் பெருமை தருகிறோமா? இல்லையா என்பதைப் பற்றி அவர் உருவம் சிந்திக்கப் போவதில்லை. ஆனால் நம்முடைய முன்னோர்கள் திருப்திக்காக நாம் ஏதேதோ செய்கிறோம். முன்னோர்கள் எப்படி நமக்காக உழைத்தார்கள். உள்ளபடியே வள்ளுவர் நாட்டிலே இத்தனை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா

இல்லையா என்று கருதியிருக்கக் கூடும். அல்லது கருதாமல் இருக்கக் கூடும். என்றாலும் பெரியவர்கள் மனத்திலே நினைத்ததை எழுத்து மூலம் எழுதி வைத்துவிட்டுப் போய் விடுகிறார்கள். 99 வயதிலே ஒரு கிழவன் ஒரு மாஞ் செடியை நடுவானானால் அந்த மாஞ்செடியிலே இருக்கின்ற பலனை அவன் அனுபவிப்பதற்காக அல்ல. அவன் பாட்டன் வைத்த மாஞ் செடியிலிருந்து. நம்முடைய பாட்டன் எப்படி அந்தப் பலனை அனுபவித்தானோ அது போலவே தன்னுடைய கடமை என்று கருதி வருகின்ற வருங்காலத்தாருக்கு நாம் ஏதாவது செய்ய வேண்டுமென்று சொல்லி அவைகளை நமக்கு எழுதி வைத்திருக்கிறார்கள். வள்ளுவர் உள்ளபடியே ஒரு பெரிய அரசனாக இருந்தார் என்று மட்டிலுமே வரலாறு இருந்திருக்குமானால் நாட்டிலே தோன்றி மறைந்துவிட்ட எத்தனையோ அரசர்கள் பட்டியலிலே அவரும் போய்விட்டிருக்கக் கூடும். அல்லது ஏதாவது 10 லட்ச ரூபாயை தமிழகத்திற்கு நன்கொடையாகக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார் என்று சொன்னால் அந்த வள்ளல்கள் பரம்பரையிலே அவருடைய பெயர் சேர்ந்து விட்டிருக்கும். ஆனால் அவர் கொடுத்திருக்கின்ற சொத்து யாராலும் அழிக்கமுடியாது. ஒரு சமயம் குறள்களையே பறிமுதல் செய்வதாக வைத்துக் கொள்வோம். மனதிலே ஏற்றி வைத்துக் கொண்டிருக்கின்ற குறள்களை யார் பறிமுதல் செய்ய முடியும். உள்ளபடியே நாம் ஏற்றி வைத்துக் கொண்டிருக்கின்ற குறள் நம்முடைய மக்களுக்குச் சொல்லிவிட்டுப் போனால் அவர்கள் மனதிலே இருக்கின்ற குறளை எவனும் களவாடவோ, அதை மறந்து விடு என்று சொல்லவோ இந்த நாட்டிலே எந்த வல்லமை மிக்க சக்தியாலும் முடியாது, அந்த சக்தியால் முடியாது என்ற காரணத்தினாலேதான் வள்ளுவர் குறளை, குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு குறளையாவது படிக்க வேண்டுமென்று கருதி வள்ளுவருக்கு நாம் பெருமை தருவோமானால் எப்படி நம் தாய், தந்தையர்களின் படத்தை மாட்டி அவர்களை அன்றாடம் பார்ப்பதிலே நமக்கு ஒரு ஆறுதல் ஏற்படுகின்றதோ எப்படி இந்த சமுதாயம் திருந்துவதற்கு நல்ல கருத்துக்களைத் தந்த தலைவர்களுடைய படத்தை மாட்டி, அவர்களுடைய படத்தை அன்றாடம் பார்த்துக் கொண்டிருப்பது நமக்கு ஒரு ஆறுதல் அளிக்கிறதோ, அத்தன்மையிலே இல்லாமல் இந்தந் தமிழகத்தில் என்றும் உயிர் இருக்குமாறு, அந்தக் குறளை என்றும் அழிக்க முடியாதவாறு, அந்தக் குறளை எந்தக் காலத்துக்கும், எப்பொழுதும் ஒப்புக்கொள்ளுகின்ற அளவிலேயும், எந்த நாட்டுக் கார்ர்களும் ஒப்புக் கொள்ளுகின்ற அளவிலேயும், எந்த நாகரிகத்துக் காரர்களும் அந்த 1330 குறளையும் சுட்டிக் காட்டி அதில் இது தவறு என்று சொல்வதற்கில்லாமல் அமைந்திருக்கிறது.

உள்ளபடியே காதலென்று எடுத்துக் கொண்டால் நம்முடைய வள்ளுவருக்குப் பின்னாலே வந்தவர்கள் எத்தனையோ சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வள்ளுவர் சுருக்கமாகச் சொன்னார்.

> "கண்ணொடு கண்ணிணை நோக் கொக்கின்
> வாய்ச்சொற்கள் என்ன பயனுமில."

கண்ணுக்கே பேசுகின்ற சக்தி இருக்கிறது வாயைத் திறந்து ஏனப்பா வீணாக ஆவியை செலவழிக்கிறாய். என்று நமது ஆவியை மிச்சப் படுத்துவதற்கு—காதலைப் பற்றி வள்ளுவர் தான் மிக அழகாகச் சொல்லி இருக்கிறார்கள். கண்ணோடு கண் பேசினால் போதும் என்று சொல்லுகிறபோது கண்ணுக்கு ஒரே தன்மையான பார்வையா? இல்லை, கோபத்தோடு பார்க்கிறபொழுது கண்ணில் செந்நிறம் தோன்றும். கவலையில் கண்களிலே கண்ணீர். அளவற்ற மகழ்ச்சியில் ஆனந்தக் கண்ணீர் கருத்தொத்தவளை சந்திக்கிறபோது கண்ணுக்கு காதல் பார்வை ஏற்படுகிறது. கண்ணுக்கு ஏற்படுகின்ற பலவித பார்வைகளிலே காதல் பார்வையை மாத்திரம் தனியாக எடுத்து தந்து, அதே பார்வையை அவள் உனக்குக் கொடுக்கின்ற பொழுது சம்மதித்து விட்டாள் என்ற முடிவுக்கு நீ வா என்று வரையறுத்துச் சொல்லி விட்டுச் சென்ற அப்பெருந்தகையினுடைய படத்தைப் பார்க்கிறபொழுது நான் உள்ளபடியே மனம் பூரிக்கிறேன்.

அரசியலார் எப்படியோ மனமுவந்து சரியாகவோ, தவறாகவோ வள்ளுவர் இவர் தான் என்று கீழே காட்டி, எழுதிக் காட்டுகின்ற அளவுக்காவது அதைப் போட்டு தமிழகத்தை ஓரளவுக்கு மதித்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறபோது அந்த வகையிலே அவர்களை நாம் பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். இத்தகைய கருத்துக்களை மேன் மேலும் நம்முடைய நாடு பெறவும், மேலும் இப்பொழுது வள்ளுவரைப் பற்றி மறப்பதற்கில்லாமல் ஆங்காங்கே வள்ளுவர் மன்றங்களும், வள்ளுவர் படிப்பகங்களும், வள்ளுவர் வாசகசாலைகள் என்ற பெயரால் பல இடங்களிலே நம்முடைய கழகத்திற்கு சார்பு மன்றங்களாகவும், நம்முடைய கழகத் தொடர்பில்லாதவர்கள் வெறும் இலக்கியத்தை மட்டும் ஆராய்ச்சி செய்கின்ற தமிழ் பெருங்குடி மக்கள், தமிழ் எழுத்தாளர்கள், தமிழ் சொற்

பொழிவாளர்கள் அனைவருமே குறளை உலக மெல்லாம் பரவுவதற்கு, அல்லது நம்மிடையே எல்லாருமே தெரிந்துகொள்ளுவதற்கு என்னென்ன வழிவகைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் ஆராய்ந்து அதற்கான முயற்சியிலே தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நாள், நமது அருமை நண்பர் திருவாளர் வேணுகோபாலர் அவர்கள் இப்படி ஒரு நல்ல படத்தை, இதற்கு முன்பு இவர்தானா வள்ளுவர், இவராக இருக்க முடியாது, நான் பார்த்த வள்ளுவர் வேருக, இருக்கிருர் என்றெல்லாம் இருந்த சிக்கலை அறவே நீக்கி, இது முதற்கொண்டு தோழர் வேணுகோபாலர் எழுதியதுதான் வள்ளுவர் என்ற முறையிலே நிலை நாட்டிச் சென்ற அன்னாருக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன்.

வணக்கம்.

கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ.

*

அன்புள்ள நண்பர்களே! இன்று காலையில் என்னை வந்து அழைத்த நண்பர்கள் திரு. வேணு கோபாலர் அவர்களுடைய இல்லத்திற்குச் செல்ல லாம் என்று தான் அழைத்தார்கள். ஆனல், அவர்கள் என்னை அழைத்து வந்த இடமோ வேணு கோபாலர் அவர்களுடைய இல்லமல்ல. வள்ளுவருடைய இல்லம். நான் வள்ளுவருடைய வீட்டிற்கு வந்ததாகவே உணர்கிறேன்.

இனி மீண்டும் சந்திக்க இயலுமா என்று கருதி நாளெல்லாம் ஏங்கி, ஏங்கி நாம் நம்முடைய கண்களை மூடுவதற்கு முன்பு ஒரு முறை வள்ளுவரைக் கண்டு விட்டு கண்களை மூடமாட்டோமா என்கின்ற தமிழகப் பெருமக்களுடைய ஏக்கத்தையெல்லாம் துடைத்திடும் வகையில், நம்முடைய அருமை நண் ஓவியப் பரும், பெருந்தகையருமாகிய திரு. வேணு கோபாலர் அவர்கள் திருவள்ளுவப் பெருமானுடைய ஓவியத்தை தமிழகத்திற்கு-இல்லை உலகத்திற்குத் தந்திருக்கின்ருர்கள்.

அத்தகைய ஒரு பெருமுயற்சியை பாராட்டுகின்ற பட்டியலிலே நானும் ஒருவன் என்று எண்ணி இறும்பூ தெய்துகின்றேன். பெருமையடைகின் றேன். ஏன், இறுமாப்புக் கொள்ளுகின்றேன் என்று கூடச் சொல்லுவேன்.

வள்ளுவருடைய உருவம் எத்தகையது என்கின்ற குழப்பம் தமிழகத்திலே பல நாட்களாக இருந்து வருகிறது. சொல்லப் போனல், பல்லாண்டு காலமாக இருந்து வருகின்ற பெரும் போராட்டமாகவும் இருந்து வருகின்றது. தமிழகத்திலே புலவர்களுடைய உருவம் மாத்திரமல்ல, தமிழகத்தினுடைய வரலாறு, தமிழகத்துப் பெருமக்களுடைய சரித்திரம், தமிழகத்து முடிவேந்தர்களுடைய வரலாறு இவைகள் குழப்பத்திற்கு ஆளாகியுள்ள வரலாறுதான், சரித்திரம் தான், ஓவியம் தான் என்பதை நாம் அறியாத ஒன்றல்ல. சேரன், செங்குட்டுவனுடைய காலம் எது? பாண்டியன் நெடுஞ்செழியனுடைய காலத்திலே வாழ்ந்த வேறு நாட்டு மன்னர்கள் யார்? என்கின்ற பல்வகையிலே பலப்பல குழப்பங்கள் நாட்டிலே உண்டு. அத்தகைய சரித்திரங்கள் இன்று நாட்டிலே குழப்ப மிக்க நிலைமையிலே தான் இருந்து வருகின்றன. இந்த சரித்திரங்களிலே உள்ள குழப்பம் தவிர்க்கப்பட்டு, வரலாற்றிலே உள்ள சிக்கல்கள் தவிர்க்கப்பட்டு, ஒரு நிர்ணயமான வரலாறு, அது போலவே ஒரு நிர்ணயமான உருவம், புலவர்களுக்கும் அதுபோலவே மன்னர்களுக்கும் தரப்பட வேண்டும் என்கின்ற கருத்துடையவர்களிலே நானும் ஒருவன். அப்படித் தரப்படுகின்ற உருவம் எல்லோராலும் ஒப்புக் கொள்ளக்கூடிய நல்ல உருவமாக, நல்ல வரலாருக அமைய வேண்டும் என்கின்ற கருத்தை நான் பலமுறை, பல மேடைகளிலே எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். அது போலவே பல ஏடுகளிலே எடுத்து எழுதியும் இருக்கின்றேன். அந்த நிலைமையிலே தான் இன்றைய தினம் நான் மிக மிக மகிழ்ச்சியடையக்கூடிய விதத்தில், திருவள்ளுவர் பெருமானுடைய உருவத்தை நமது ஓவிய நண்பர் வேணு கோபாலவர்கள் தீட்டியிருப்பது கண்டு பெருமகிழ்வு அடைகின்றேன்.

வள்ளுவருடைய திருக்குறள் தான் அவருடைய ஓவியம். அவர் யாற்றித் தந்த 1330 அருங்குறள் பாக்கள் தான் வள்ளுவருடைய உருவத்தை நமக்குக் காட்டக்கூடியவை என்கின்ற எண்ணத்தைத் தான் இதுவரை நாம் கொண்டிருந்தோம். இனி, இவர்தான் வள்ளுவர் என்று அகிலத்திற்கு நாம் அறிவிக்கக் கூடிய வகையிலே அழகான திரு ஓவியத்தை நமக்கு வேணுகோபாலவர்கள் தந்திருக்கின்ருர்கள்.

நான் வள்ளுவருடைய உருவத்தைக் காணுகின்றேன், நாம் எதிரே அமர்ந்திருக்கின்ற அந்த வள்ளுவர் பெருமானுடைய ஓவியத்தை நான் காண்கின்றேன், காணுகின்ற நேரத்திலே அவருடைய கண்கள் உமிழகின்ற அந்த ஒளியை என்னால் காண முடிகிறது. சுவைக்க முடிகிறது.

''அமிழ்தினும் ஆற்ற இனிதே—தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்''.

என்கின்ற, குழந்தைக்காக அவர் பாடிய, குழந்தைக்காக அவர் எழுதிய அந்த அருமையான குறளை நான் எண்ணிப் பார்க்கிற நேரத்தில், எதிரே தவழ்ந்து வருகின்ற குழந்தையை வள்ளுவர் பார்த்து, ரசித்து அந்த பாடலை எழுதுவது போலவே அவருடைய கண்ணொளி அமைந்திருப்பதை நான் காண முடிகின்றது.

''கைவேல் களிற்றொடு போக்கிவருபவன்
மெய் வேல் பறியா நகும்.

என்ற அந்த வீர உரைகள், அந்த வீர உரைகளைச் சிந்திய அந்த வேல்கள்தான் வள்ளுவருடைய இதழ்கள். அதை ஓவியர் வேணுகோபாலவர்கள் அழகாகச் சித்தரித்திருக்கின்றார்கள்.

வள்ளுவருடைய கையிலே பிடித்திருக்கின்ற அந்த எழுத்தாணியும், இன்னொரு கரத்திலே இருக்கின்ற அந்தச் சுவடியையும் காணுகின்ற நேரத்தில், சுவடியை அணைத்து இருக்கின்ற கரத்திலே புடைத்திருக்கின்ற நரம்புகளையும், அது போல எழுத்தாணியை வைத்திருக்கின்ற கரத்திலே புடைத்திருக்கின்ற நரம்பையும் காணுகிற நேரத்தில், ஓவியர் எவ்வளவு சிந்தித்துச் சிந்தித்து, எந்த அளவுக்கு நெஞ்சத்திலே வள்ளுவருக்காக இடம் அமைத்து, அந்த ஓவியத்தை எழுதியிருக்கிறார் என்பதை நான் எண்ணுந்தோறும், எண்ணுந்தோறும் அவரை பாராட்டுவதற்கு கடமைப் பட்டிருக்கின்றேன். இப்படிப் பட்ட ஒரு நல்ல காரியத்தை தமிழகத்திற்குச் செய்கின்ற ஓவியர் வேணுகோபாலவர்களை, அறிஞர்கள் பலரோடும் சேர்ந்து நான் பாராட்டுவதற்குக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

'' இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று,''

என்கிற வள்ளுவருடைய குறளையே இன்று வள்ளுவருடைய ஓவியத்தைப் பற்றி யாராவது ஏதாவது கூறுவார்களேயானால் அவர்களுக்கு நான் சமர்ப்பிப்பதற்கும் கடமைப் பட்டிருக்கின்றேன்.

''பல்லார் முனியப் பயனில சொல்லுவா
எல்லாரு மெள்ளப் படும்.''

என்கின்ற குறளைத்தான் நான் அவர்களுக்கு எடுத்துக் காட்டுவதற்கு விரும்புகின்றேன்.

இந்த வள்ளுவருடைய உருவம் தமிழ் நாட்டாரால், அகில உலகத்தாரால் பாராட்டப்பட வேண்டிய, போற்றி ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒரு உருவம் என்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

இனி உலகத்தில் வள்ளுவருடைய பெயரோடு இன்னும் இரண்டு பெயர்கள் இதுவரை நிலைத்தது போலவே நிலைக்கும். திருவள்ளுவர், திருக்குறள், ஓவியர் வேணுகோபாலர் இந்த மூன்று பெயர்களும் தமிழகத்து மக்களால் மறக்க முடியாத பெயர்கள். வாழ்க வள்ளுவர், வாழ்க வேணுகோபாலர்.

வணக்கம்.

திரு .டி. கே. சீனிவாசன்

*

திரு. வேணுகோபால் அவர்கள் தீட்டிய திருவள்ளுவர் திருவுருவத்தை காணுகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த வாய்ப்பை எப்படிப் பெற்றேன் என்பதுதான் உண்மையிலேயே எனக்கே நினைத்துப் பார்க்க வேடிக்கையான நிகழ்ச்சியாக இருக்கிறது.

முதலிலே படத்தைப் பார்க்காமல் படத்தின் பிரதி அச்சிலே வந்து செய்தித் தாட்களிலே அதைக் கண்டு எனக்கு சீற்றம் பிறந்த பிற்பாடு செய்தித் தாளிலே வந்த சித்திரத்திற்கும், ஓவியர் தீட்டிய உருவத்திற்கும் இடையிலே மாபெரும் வேற்றுமை இருக்கிறது என்பதை நண்பர்கள் உணர்த்த, அந்த வேற்றுமை என்னவாகத்தான் இருக்கும் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தாலே வந்தேன். உருவத்தைப் பார்த்தேன். உருவத்தைக் கெடுத்திருக்கிறார்கள் என்பதுகூட எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை. அது வழக்கமாக நடப்பது. ஒரு ஓவியரின் அருமையான திறனை கெடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கத்தான் நான் மிக மிக வருந்துகிறேன்.

திருவள்ளுவரை தமிழர் சமுதாயம் எந்த அளவிலே வைத்து மதித்துப் பாராட்டுகிறது என்பதை உணராதவர்கள் தமிழர் சமுதாயத்தின் மனம் எந்த அளவுக்குப் புண்படும் என்பதை உணராமல் ஒரு ஓவியர் மனப்பூர்வமாகத் தன் வாழ்நாளெல்லாம் கஷ்டப்பட்டு சிரமத்தோடு செய்து முடித்த ஒரு வேலையை நிமிடத்திலே அந்த சிரமத்திற்குக்கூட துளியளவு செல்வாக்கில்லாமல் செய்திருக்கிறார்கள். என்ன இருந்தாலும் திருவள்ளுவரை இந்த அளவுக்காவது மதிக்கிறார்களே என்று ஏதோ அலுப்போடு வருகிற ஒரு மகிழ்ச்சியே தவிர வேறு எதையும் அந்த தபால் பில்லைகளுக்கு போடப்பட்டிருக்கிற உருவத்திலே நாம் பெற முடிவதில்லை.

இந்த உருவத்தை நான் பார்க்கிறேன். பார்க்கிறபோது என்னுடைய இதயத்திலே விதவிதமான உணர்ச்சிகளெல்லாம் ஏற்படுகின்றன. பொதுவாகவே எனக்கு தமிழ்மேலே ஏதாவது ஒரு ஆர்வம் ஏற்பட்டிருந்தால் அது நான் பெற்ற. பள்ளிகளிலே எனக்குக் கொடுக்கப்பட்ட தமிழ் பயிற்சியாலே அல்ல. தமிழைப்பற்றி மதிப்புக்கொள்வதற்கு முன்னால் ஆங்கிலத்திலே இருக்கிற நூல்களையெல்லாம் படித்து தமிழ் எதற்கும் உதவாக்கறை என்ற முடிவோடு தமிழ் நூல்களையெல்லாம் புறக்கணித்திருந்தவன் நான். ஆங்கில நூல்களையெல்லாம் படித்து முடித்த பின்னால், திருக்குறளை எடுத்துப் படித்த பின்னாலே தான் இத்தனை நாட்களை படித்து நாம் நேரத்தை வீணாக்கியிருக்கிறோமே என்றவருத்தம் எனக்கு ஏற்பட்டது. திருவள்ளுவர் என்ற உருவமோ அல்லது உருவத்தின் பண்போ நமக்குத் தெரியா விட்டாலும் திருக்குறள் நூலைப் புரட்டினால் உலகத்திலே இருக்கிற நீதி நூல் போதனை செய்தவர்கள் அத்தனை பேரும் எந்த நோக்கத்தோடு உலகை கவனிக்க மறுத்து விட்டார்களோ, அல்லது மறந்து போனார்களோ, அந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு உலகை எடை போட்டு முடிவு செய்தவர் நம்முடைய மதிப்புக்குரிய திருவள்ளுவராவார். அவருடைய பரம்பரையிலே நாம் வந்தவர்கள், என்பதற்காக உண்மையிலேயே நாமெல்லாம் பெருமைப்பட வேண்டிய விஷயம்.

நான் இந்த உருவத்தைப் பார்க்கும் போதெல்லாம் எந்த திருவள்ளுவரை நான் நினைத்திருந்தேனோ, அதே திருவள்ளுவரை நம்முடைய மதிப்புக்குரிய வேணு கோபாலர் எனக்கு முன்னாலே காட்டுகிறார்.

உள்ளத்திலே நான் பெற்றிருந்த ஓவியம் எனக்கு நேரெதிரே இருப்பதை நான் நீண்ட நேரம் பார்த்தேன். நண்பர்களெல்லாம் உரையாடல் செய்து கொண்டிருந்தார்கள். அந்த உருவத்தையே நான் பார்த்துக்கொண்டிருந்தேன். உலகத்திலே உள்ள நீதி நூல் போதனையாளர்களுக்கும், நம்முடைய திருவள்ளுவருக்கும் இடையிலே இருக்கிற மாபெரும் வேற்றுமை, கெட்டதை விலக்கு என்று சொன்னார்களே தவிர கெடுதல்களையும் அருகிலே அழைத்து அவைகளையும் ஆராய்ந்து, இதனாலே இவ்வளவுதான் பலன் என்று முடிவு கட்டி முடிவையும், பலனையும், தீமையையும் சேர்த்துச் சொன்ன நீதி நூல் போதனையாளர்களை நான் பார்த்ததே இல்லை. உலகத்தை வெறுப்போடு பார்க்காமல் உலகத்திலிருக்கிற நல்லவைகளையும் பொல்லாதவைகளையும் விருப்போடு பார்த்து நல்லவைகளாலே ஏற்படுகிற நன்மைகளையும், பொல்லாதவைகளாலே ஏற்படுகிற பொல்லாங்குகளையும் தெளிவாக முடிவு கட்டி மனிதன் எதையும் வெறுக்காமல் தேவையற்றதை நீக்கிவிடும்படியாக நல்ல கருத்துரைகளைத்

தந்தவர் நம்முடைய மதிப்புக்குரிய மூதாதையர் திருவள்ளுவராவார்.

அந்த உருவத்தை நம்முடைய மதிப்புக்குரிய வேணு கோபாலர், எந்த நோக்கத்தோடு குறள் செய்தாரோ அந்த நோக்கத்திற்குப் பழுது ஏற்படாமல் செய்திருக்கிறார்கள்.

நான், எனக்கு முன்னாலே இதைப் பற்றி கருத்துரைகள் தந்தவர்களுடைய கருத்துரைகளை யெல்லாம் கேட்டேன். உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்தேன். காரணம் உருவத்தைப் பார்த்தவர்களெல்லாம் உருவத்தை மட்டும் புகழாமல், திருவள்ளுவரை மட்டும் புகழாமல், இந்த உருவத்தைப் பார்க்கும் போதே திருக்குறள் நினைவு வந்து திருக்குறளை பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள்.

எந்த உருவமும், எந்த நோக்கத்தோடு தீட்டப் படுகிறதோ அந்த நோக்கத்தை பிரதிபலித்தால் அதைப்போன்ற உருவம் உலகத்தில் வேறெதுவும் இருக்க முடியாது. பேசுவோர்கள் படத்தைப் பார்த்து படத்தின் அருமை பெருமைகளைவிட, படத்தைத் தீட்டிய நண்பரின் அருமை பெருமைகளைவிட, யாருடைய படம் தீட்டப் பட்டிருக்கிறதோ அவருடைய கருத்தின் அருமை பெருமைகளை நினைக்கிற அளவுக்கு ஓவியம் இருந்தால் உண்மையிலே அந்த ஓவியம் தமிழர்களுடைய இல்லங்கள் தோறும் இருந்து தீர வேண்டிய ஓவியம்.

நான் இந்த ஓவியத்தைப் பாராட்டுகிறேன். ஓவியர் உள்ளத்திலே திருவள்ளுவர் மேலே ஏற்பட்ட அளவற்ற அன்பினால், அந்த அன்பு உருவாகி, திருவள்ளுவர்மேலே அவர் கொண்ட அன்பின் உருவம் ஓர் உயர்ந்த ஓவியமாகி தென்னகத்துக்கு நல்ல பெருமையை அளிக்கத் தக்க அளவுக்கு வளர்ந்திருக்கிறது. திருவள்ளுவர் பார்வையைப் பார்க்கிறேன். அவர் முக அமைப்பைப் பார்க்கிறேன். இரண்டையும் பல நண்பர்கள் எடுத்துப் பேசினார்கள். எனக்குத் தெரிவதெல்லாம், உலகத்தை மிக அன்போடு பார்த்து தான் எழுதப் போகிற உண்மைகள் எந்த அளவுக்குத் தெளிவானவை என்பதை எடை போட்டுக் கொண்டிருக்கிற விதத்தில் அந்த நோக்கத்தையும், பார்வையையும் ஓவியர் அவர்கள் தீட்டியிருக்கிறார்கள். ஓவியர் வேணுகோபாலர் அவர்கள் தமிழகத்திற்கே ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார்கள். திருவள்ளுவர் படத்தைத் தீட்டி அவர் திறனை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதல்ல இப்போது பிரச்னை தமிழர்களுடைய குலத்திற்கு ஓர் நல்ல காரியத்தைச் செய்து முடித்து, அதை நானிலம் புகழ்கிற அளவிற்கு செய்ய வேண்டுமென்று ஆசைப் பட்டிருக்கிறார்கள். அந்த ஆசையை யார் நிறைவேற்றி வைக்க வேண்டுமோ அவர்கள் இப்பொழுது தவறினாலும் எதிர்காலத்திலே நல்ல முறையிலே அந்த ஆசையை வளர்த்து, உலகத்துக்கு தமிழர் குலத்தின் பெருமையை எடுத்துக் காட்ட உதவ வேண்டும். இன்னமும் அதிகமாகச் சொல்லப்போனால் நம்முடைய ஓவியர் வேணுகோபாலர் அவர்கள் திருவள்ளுவர் போலவே இன்னும் பல உருவங்களை தமிழர்களுடைய பண்பு பொங்கித் ததும்புகிற உருவங்களை, தமிழர்களுடைய பண்டைக் காலக் குறிக்கோள் பழுது படாமலிருக்கின்ற உருவங்களை இதே போன்ற முறையில் வள்ளுவரைப் போலவே தீட்டி தமிழகத்திற்கு நல்ல தொண்டு செய்ய வேண்டுமென்று நான் அவரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருவள்ளுவர் படத்தைப் பார்க்கிறேன். வள்ளுவர் குறள் நினைவிற்கு வருகிறது. திருவள்ளுவர் முகத்தைப் பார்க்கிறேன். அவர்களுடைய முகத்திலே உள்ள ஒளி என் நினைவிற்கு வருகிறது. திருவள்ளுவருடைய பார்வையைப் பார்க்கிறேன். உலகத்தில் மனிதன் பெற்றிருக்க வேண்டிய ஒரு உயர்ந்த நோக்கத்தின் உருவமாக அந்தப் பார்வை அமைந்திருக்கிறது. இவ்வளவு பொன்னான ஓவியத்தை நமக்கெல்லாம் தந்த ஓவியர் வேணுகோபாலர், அவருடைய ஓவியத் திறமை இன்னும் மிளிர்ந்து தமிழகத்திற்கு இன்னும் பெரும் சாதனைகளைச் செய்து தர உதவ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வணக்கம்.

திரு சிவபாத சுந்தரம்

*

வள்ளுவருடைய காலத்தைப் பற்றியும் பூரணமான முடிவு இன்னும் ஏற்படவில்லை. அதே விதமாக, அவருடைய சமயத்தைப் பற்றியும் எந்த விதமான பூரண முடிவும் ஏற்படவில்லை. இந்த நிலையிலே பல ஆண்டு களாக, தமிழ் மக்கள் வள்ளுவருடைய உரு வத்தை மனதிலே சிந்திக்கவும், அல்லது மற்றவர்களோடு பார்த்து மகிழவும் ஒரு சந்தர்ப்பம் கிடையாது. சிற்சில ஓவியர் களும், சிற்பர்களும், சில உருவங்களை அமைத்து, சில ஆண்டுகளாகத்தான் வழக் கத்தில் கொண்டு வந்தார்கள். ஆழ்வார், சைவ நாயன்மார் ஆகியோர் வடிவங்களெல் லாம் பல நூற்றுண்டுகளுக்கு முன்னரேயே பல சிற்பிகளால் கல்லிலும், செம்பிலும், வார்த்தெடுக்கப் பட்டு, இப்பொழுது வழக் கத்தில் வந்து, பொது மக்கள் அந்த உரு வங்களை மனத்தில் பதிய வைத்துக் கொள் வதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்திருக் கின்றது.

ஆனல் வள்ளுவர், நாயன்மார்களுக்கும், ஆழ்வார்களுக்கும் முந்தியவராக இருக்கலாம் என்ற ஒரு நம்பிக்கை இருந்தும், அவருடைய வடிவத்தை கல்லிலோ, செம்பிலோ பூரண மான நம்பிக்கை தரக்கூடிய ஒரு முறை யிலே, இன்னும் வடித்தெடுக்கப் படாதது ஒரு குறையாக இருந்தது.

இப்பொழுது, வள்ளுவர் என்ன உருவத் தைக் கொண்டிருந்தார்.? அவர் என்ன சம யத்தவராக இருந்தார்? என்ன மாதிரியான நிலையில் இருந்து அவர் திருக்குறளை எழுதி னர் என்பதைப் பற்றியெல்லாம் சிந்திப் பதற்கு திருக்குறளை மாத்திரம் வைத்துப் படித்துக் கொண்டிருந்தால், ஒரு முடிபான சிந்தனையை அல்லது உருவகத்தை மனதில் கொள்ள முடியாத நிலையிலே, நண்பர் வேணு கோபால சர்மா அவர்கள் இப்பொழுது வள்ளுவர் உருவம் எத்தகையதாக இருந் திருக்கலாம் என்பதை மனதில் கொண்டு, பலவிதமான சிந்தனைகளை உருப் படுத்தி, அந்த சிந்தனைகளின் பெயராக இப்பொழுது ஒரு ஓவியத்தை சிருஷ்டித்துத் தந்திருப் பதைப் பார்க்கும் போது, வள்ளுவர் என்ன உருவமாக இருந்திருக்கலாம்? என்று பொது மக்கள், ஒரு சரியான வடிவாக இல்லாவிட் டாலும், சராசரி முடிவுக்கு வரக்கூடிய ஒரு முறையிலே, இந்த ஓவியத்தை சிருஷ்டித் துத் தந்திருப்பதைப் பார்க்கும் போது, நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இந்த உருவத்தைப் பார்க்கும் போதே, அவர் என்ன சமயத்தவ ராக இருந்தார்? ஜைனராக இருந்தாரா? அல்லது பௌத்தராக இருந்தாரா? அல்லது சைவராக இருந்தாரா? என்பதை நாம் நிச் சயமாகச் சொல்ல முடியாது.

அந்த நிலையில்தான் வள்ளுவருடைய திருக்குறளைப் படிக்கும் போதும் நமக்கு இன்ன சமயத்தவர், இன்ன இனத்தவர் என்று சொல்ல முடியாதவாறு அவர் மக்கள் யாவருக்கும் ஒரு பொது பெரியாராக, யாவருக் கும் ஒரு தலைவராக இருந்து தமது திருக் குறளை சிருஷ்டித்து யாவருக்கும் பொது முறையாக அதைக் கொடுத்திருந்தது என் பதற்கு இந்த ஓவியமே நமக்கு சாட்சி பகரு கின்றது.

ஆகையால் இத்தகைய ஒரு ஓவியத்தை மனத்தில் கொண்டு; நண்பர் வேணுகோபால சர்மா அவர்கள் நமக்குத் தந்திருப்பதை, பாராட்ட வேண்டும். அன்றியும் இந்த ஓவி யம், ஓவிய முறையில் பார்க்கும் போது Realism என்ற இயல்புத் தன்மையைக் கொண் டிருந்த போதும் அதில் கவர்ச்சி தரக்கூடிய சிந்தனை சக்தி நிறைய இருப்பதைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். அன்றியும் நீர்க் கலவை மாத்திரம் கொண்டு, இந்த ஓவியத்தை மிகவும் லக்ஷணமாக சிருஷ்டித் திருப்பதைப் பார்க்கும் போது, அவருடைய கை வன்மையை நாம் பாராட்ட வேண்டும் ஆகையால் நண்பர் வேணுகோபால சர்மா அவர்கள் இதே உருவம் போன்று; இன்னும் பல பழைய முனிவர்களதும், தமிழ்த் தலை வர்களதும் உருவங்களையெல்லாம் ஓவியத் தில் சிருஷ்டித்துத் தரவேண்டு மென்று நாம் வாழ்த்துகின்றோம்.

கருத்துப் பொருளால் இதுவரை என் மனக்கண்முன்னே நின்று விளங்கிய வள்ளுவ பெருமானை காட்சிப் பொருளாய் இன்று என் முன்னே கொண்டு வந்து நிறுத்தி பணிவு கலந்த வியப்பில் என்னை ஆழ்த்தி வைத்து விட்டார் அருங்கலை ஓவியர் வேணு கோபால சர்மா அவர்கள்.

வள்ளுவனை வடிவத்திலே காணவேண்டும் என்று ஏங்கித் தவித்த என் மனம்-வள்ளுவர் என்று சொல்லப்பட்ட பல சித்திரங்களைக் கண்ட பிறகு ஏங்கியிருந்தது. சரியான வள்ளுவனின் முழு வடிவத்தைக் காணாத குறையால் அக்குறை இன்று தீர்ந்தது-சர்மா அவர்கள் தீட்டியுள்ள வள்ளுவரின் உயிர் ஓவியத்தைக் காண நேர்ந்த பொழுது.

இயற்கை இன்பமும், இறைவனுண்மையும், நிலைந்த நூலுணர்வும் ஒன்றி உள்ளத் தூறும்போது உள்ளக் கட்டவிழ அதனின்று கிளர்ந்தெழுந்து சொரியும் இன்பத் தாரையின் ஒழுக்கு-பாட்டு என்பதற்கு இலக்கணமான வள்ளுவரது வதனத்தை - சர்மாவின் சித்திரத்திலே கண்டேன். முழு மனித வடிவத்தைக் கண்டேன். வானினும் விரிந்து, ஆழியினும் ஆழ்ந்து, பாரினும் பரந்து மனிதாபிமானம் நிறைந்த மானிட வடிவத்தைக் கண்டேன். வில்லொத்த வேக மனம், மீனெத்தலாகவச் சொல், கொல் புலியின் வீறுடலம் கொண்ட மனித வடிவத்திற்கு முன் மாதிரியாகத் திகழும் அமைதியும் பேராற்றலும் நிறைந்த அற்புத வடிவத்தைக் கண்டேன்.

'விழித்தகண் வேல் கொண்டெறிய வழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு.'

என்று வீரத்தை உணர்த்தும் விழிக்கு இலக்கணம் சொன்ன ஆசான் வள்ளுவரின் கண்களே அதற்கு இலக்கியம் என்பதை சர்மா அவர்கள் மனதிலே உணர்ந்து, மன் சித்திரக் கோலால் - சான்றோனின் - கண்களைத் தீட்டியுள்ளார்.

ஞாலம் உய்ய, நூல் கூறிய நல்லற ஞானியின் இந்தச் சித்திரம், நானிலத்தின் ஏற்றத்திற்குரிய மாந்தரிலே மேதைகளாக நான் மதித்துப் போற்றும் - மார்க்ஸ், லெனின், கார்க்கி, விவேகானந்தர், தாகூர், வள்ளத்தோல், பாரதி – ஆகிய மனித மேதைகளே-இந்த முகத்திலே நான் காண்கிறேன்.

கண்களிரண்டிருந்தும் காணும் திறமையற்ற கூட்டத்தைக் கண்டு மனம் வருந்திப் பாடிய பாரதிக்கு - நம்பிக்கை ஊட்டும் கண்களாக வள்ளுவன் கண்கள் தான் இருந்திருக்க வேண்டும் என்று இச்சித்திரம் சாட்சியம் கூறுகிறது. 'அரிவாளைக்கொண்டு பிளந்தாலும் கட்டு மாரு உடலுறுதி தருவாய்' என்று பாரதி வரம் கேட்டதற்கு வள்ளுவன் உடலைத்தான் உவமையாக அன்று அவன் நினைத்தது பிசகில்லை என்று இந்தச் சித்திரத்தின் உடல் எடுத்துக் காட்டுகிறது.

திரு முகவை ராஜமாணிக்கம்

*

வள்ளுவன் நினைவெல்லாம் - வையகத்தில் வாழும் மாந்தர் குலத்தைப் பற்றியதே. அவன் அமர்ந்திருக்கும் பாணி, சிந்தனைக் – கடலைத் தேக்கி வைத்திருக்கும் ஒளிவீசும் கண்கள், கண்களிலிருந்து புறப்பட்ட அறிவுச் சுடர், கரத்தின் மூலம் எழுத்தாணி முனையிலே ஏறி, இடது கரத்திலே இருக்கும் ஏட்டிலே பதியத் துடிக்கும் பான்மை - வள்ளுவன் கூறிய அறம் அனைத்தையும், பொருளின் புதையலையும், இன்பத்தின் எல்லையையும் தொட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளது.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற குறளை எழுதி முடித்துவிட்டு, ஆழ்ந்த யோசனையிலே சிந்தனையைச் செலுத்தியிருக்கும் நிலை - அறிவுக் கருவூலத்தைத் திறந்து அள்ளிக் கொள்க என்று அன்புமொழி கூறுவது போலிருக்கிறது.

பிறந்த மதலையை, அதனை ஈன்ற தாய்க் குலத்தை, சமூகத்தை, நாட்டை, அரசை, அமைய வேண்டிய பண்பை அத்தனையும், அ கரந் தொடங்கின கரத்தில் முடித்து - 1330 அருங்குறள் எழுதும் பணி முடித்தே ஆசனம் விட்டு எழுவேன் என்று செம்பவழ வாய்திறந்து, தித்திக்கும் செந்தமிழிலே கூறுவதுபோல வள்ளுவரை, அந்தச் சித்திரத்திலே கண்டேன். மனம் பூரித்தேன். திருக்குறளையே ஒருமுறை ஓதியது போன்ற உணர்வு பெற்றேன்.

உண்மைக் கலையுள்ளம் நிரம்பப் பெற்ற ஓவியர் வேணுகோபால சர்மாவை என் மனமும், வாயும் என்றும் வாழ்த்தும்.

வள்ளுவனை - தான் தீட்டிய சித்திரத்தில் உயிர்ப்பித்தது போல வள்ளுவன் வழிவந்த கம்பனையும், இளங்கோவையும் தீட்டித்தர சர்மா அவர்களுக்கு கலைத்தேவியின் ஆசி என்றும் இருத்தல் வேண்டும் என விரும்புகிறேன்.

வள்ளுவன் நாமம் வாழ்க! ஓவியர் வேணு கோபால சர்மா வாழ்க!

''வள்ளுவன் தன்னை உலகினிற்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளுன் சிலப்பதிகாரன்என்றோர் மணி
ஆரம் படைத்தத் தமிழ்நாடு.''

என்ற பாரதியின் வாக்கு, உண்மையிலேயே இன்று இலக்கியமாகத் திகழும் வண்ணம், நல்ல வகையிலே, என்னுடைய உள்ளத்தில் புத்துணர்ச்சியை எழுப்பக் கூடிய நிலையிலே அமைந்திருந்தது என்ருல் அது மிகையாகாது.

என் நண்பர் வேணுகோபாலனர் அவர்கள் அமைத்த வள்ளுவரின் உருவத்தைக் கண்டபோது, எனக்கு இத்தகைய வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் எதிர்பார்க்கவில்லை. இந்த உருவத்தைப் பற்றி பல முறையில் நினைத்துப் பார்த்ததுண்டு. வள்ளுவருக்கு வெவ்வேறு வகையான கருத்துக்களோடு தீட்டப்பட்ட உருவங்களை நான் கண்டிருக்கின்றேன்.

நான் கள்ளக்குரிச்சியில் ஆசிரியனுக இருக்கின்றபோது அங்கு ஓர்வைணவ அன்பர் வள்ளுவருக்கு எப்படி உருவம் இருக்கவேண்டுமென்று கூறி, அவர் நாமம் போட்ட வைணவ பக்தராகத்தான் இருந்திருக்கக் கூடும் என்றெல்லாம் சொல்லி, நாமத்தையும் போட்டு, திருவள்ளுவ ஆழ்வார் என்றும் கூறி, அதற்கு திருக்குறளிலிருந்து எடுத்துக் காட்டாக ஒரு குறளையும் கூறினர். அப்போது என்னுடைய உள்ளம் கொதித்து அவரிடத்தில் நான் கூறினேன், 'காந்தி, ''ரெகுபதி ராகவ ராஜாராம்'' என்று பாடிக் கொண்டிருக்கிருர். காந்திக்கு நாமம் போட்டு, காந்தி ஆழ்வார் என்று நாளைக்குக் கூறலாமா? அதேபோல் நவகாளி கலவரத்திற்குச் சென்று, பாகிஸ்தானுடைய பிரிவினைக்கு ஆதரவாக அவர்களுக்கு வேண்டிய தொகையும் கொடுக்குமாறு சொல்லி, முஸ்லிம்களுக்கெல்லாம் ஆதரவாக இருந்தார் என்பதற்காக, அப்துல்லா என்ற வகையிலே அவருக்கு குல்லாயைப் போட்டு அவரை சாயபு என்ற வகையிலே அவருக்கு உருவத்தை மாற்றிப் பாருங்கள். ஆகவே, எந்த வகையில், எத்தகைய வகையிலே அவர் கருத்துடையவராக இருக்கின்ருர் என்பதை அவருடைய தோற்றம், இயற்கையான வடிவம் இப்பொழுது இருக்கின்ற நிலையிலே இருக்கவேண்டுமே யொழிய, நாளடைவிலே இப்பொழுதே அவருக்கு நாமத்தைப் போட்டு 'ரெகுபதி ராகவ ராஜாராம்' என்று பாடினுல் பிற்காலத்திலே வருகின்றவர்கள் ஒரு குழப்பமான நிலையை அடைவார்கள்.

திரு புலவர் முருகேசனுர்

*

அதுபோல, வள்ளுவருடைய ஒரு திருக்குறளுக்கே எடுத்துக்காட்டாக, இவ்வாறு நீங்கள் கூறுவீர்களானுல் கருத்துமாறி மக்களுடைய உள்ளத்திலே வள்ளுவரைப் பற்றிய எண்ணமும் மாறி, ''வள்ளுவன் தன்னை உலகினிற்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு.'' என்கின்ற நிலையிலே எக்குலத்தவரும், எந்நாட்டவரும், எம்மதத்தவரும், எவ்விதத்தவரும், எம்மொழியினரும், போற்றக்கூடிய பொதுமறையாக அமைந்திருக்கக் கூடிய திருக்குறளுக்குக் களங்கம் கற்பிப்பது மிக இழிவு என்ற வகையிலே கூட்டத்திலேயே அவரை எதிர்த்து, அதன் காரணமாக அந்த ஊரைவிட்டே நான் வரவேண்டிய நிலையிலே இருந்தேன். அந்த வகையிலே அத்தகைய பெருமகனுர் கூறிய ஒரு குறளை உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன்.

சாதாரணமாக,

''கற்றதனு லாயபய னென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்''

என்ற குறளுக்கு அப்பெருமகன் கூறிய உரை வால் அறிவன் என்று எடுத்துக் கொண்டு வாலை உடைய அறிவன்—வாலை உடைய அறிவன் என்ருல் அனுமான். அனுமானைத் தொழாவிட்டால் படிப்பினுல் உண்டாகின்ற பயனென்ன? எனவே குரங்கு. ஆகவே ராமன். ராமன் திருமாலின் ஆவதாரம். எனவே வள்ளுவர் திருமாலுக்கு பக்தர். அவர் ஆழ்வார் என்றெல்லாம் அதற்குக் காரணம் காட்டி, அப்பெருமகன் பேசியதை எண்ணும்போது தமிழ் நாட்டில் மக்களை எப்படியெல்லாம் மக்கள் ஏசியிருக்கின்ருர்கள் என்ற வகையிலே நான் உள்ளம் கொதித்தேன். இப்படி வள்ளவருக்குப் பூணூலிட்டு, வள்ளுவருக்கு நாமம் போட்டு, வள்ளுவரை சைவரும், நாயனுராக ஆக்கி வள்ளுவப் பெருமானின் பெருமையையே குறைத்து விடுகின்ருர்கள் என்றெல்லாம்பாண்டியில் கூட திரு ஆறுமுக முதலியார் தலைமையிலே பேசியபோது நான் பேசியிருக்கின்றேன்.

அந்த வகையியெல்லாம் ஒவ்வொரு நாளும் வள்ளுவருடைய உருவத்தை ஒவ்வொருவரும் மாறி மாறி எழுதி மக்களுடைய உள்ளத்திலே வள்ளுவருக்கு இருக்கக் கூடிய

ஒரு பெருமையை மாற்றுகின்ருர்களே என்று கவலை கொண்டிருந்த என்னுடைய உள்ளத்திலே, என்னுடைய நெருங்கிய நண்பர் வேணுகோபாலனுர் அவர்கள் இத்தகைய உருவத்தை எழுதியிருகின்ருர் என்று நான் அறியவில்லை. ஆனல் நான் வரவேண்டும் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கின்ருர்கள். என்னுடைய நண்பாகளிடம் சொல்லியிருக்கின்ருர்கள். இது கோப்பெருஞ் சோழன், பிசிராந்தையார் என்ற வகையிலே தான் நான் நினைக்கின்றேன்.

எதிர்பாராத வகையிலே, இன்று நான் வேறு இடத்திற்குச் சொல்ல வேண்டியவன். என்னுடைய நண்பரால் இங்கு அழைக்கப் பட்டு இங்கு வந்து பார்க்கின்ற போது என்னுடைய நண்பர் எழுதியிருக்கின்ற வள்ளுவருடைய உண்மையான உள்ளம், வள்ளுவருடைய தெள்ளிய ஒரு அறிவு, இவை அத்தனையும் எடுத்துக் காட்டக் கூடிய வகையிலே அந்தப் பேருருவம் அமைந்து அனைவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய வகையிலே, அந்த உருவமானது இருக்கக் கூடியதைக் கண்டு களித்தேன் அவருடைய தோற்றம், அவருடைய எழில், அவருடைய கருத்து, அவை அத்தனையும் பொதிந்த வகையிலே, எக்குலத்தவரும், எந்நாட்டவரும், எக் கட்சியினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையிலே அத்தனை பெருமகனும் இங்கே வந்து பாராட்டியிருக்கக் கூடியதைக் கேட்டு என்னுடைய நண்பரின் பெருமுயற்சியைப் பாராட்டுகின்றேன்.

மேலும் மேலும் இதுபோன்ற கருத்துக்களை மக்களிடத்திலே பரப்பக்கூடிய சிறந்த ஓவியங்களை எல்லா கட்சியினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலே அவர்கள் தீட்டி, தமிழக, மக்களையெல்லாம் ஒன்றுபடுத்தக் கூடிய வகையிலே, இது எப்படி பல கட்சியினரும் வந்து திருவள்ளுவரால் ஒன்று படுகிருர்கள் என்பதைப் பார்க்கின்ற போது அதே போல பல கட்சியினரும் வந்து ஒன்றுபடக் கூடிய வகையிலே, இன்னும் பல்வேறு உருவங்களையும் அமைத்து நாட்டுமக்கள் அனைவரையும் ஒரு ஒன்றுபட்ட வழியிலே கொண்டு வருவதற்கு அவருடைய பெருமுயற்சி துணையாக நிற்கும். என்னுடைய நண்பர் இத்தகைய பெருமையை, "வள்ளுவன் தன்னை உலகினிற்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்ற வகையிலே பெருமைப்படக் கூடிய அத்தகைய திருக்குறளுக்கு உலகாமக்களெல்லாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் உருவம் அமைத்திருப்பதனலே அவருடைய பெருமை உலகமெல்லாம் நிலைத்து நிற்கும் என்ற வகையிலே அவருடைய உருவமானது இனி வெவ்வேறு வகையில் இருக்கக்கூடாது, இதே உருவம் தான் பள்ளிப் பாடங்களிலேயும், பள்ளிப்பாட நூல்களிலேயும், ஒவ்வொருவருடைய வீடுகளிலேயும் இருக்கவேண்டும்.

உதாரணமாக கடவுள் என்று சொன்னல் மக்களுடைய உள்ளத்திலே ஒரு எண்ணம் தோன்றவேண்டும் விநாயகர் என்று சொன்னல், ஏதோ துதிக்கையாக இருக்கட்டும், தொந்தியாக இருக்கட்டும், பெருச்சாளியாக இருக்கட்டும், எந்த வகையிலிருந்தாலும் அவருக்கு ஓர் உருவத்தை அமைப்பதை விட்டு, சிதம்பரத்தில் முக்குறுணி அரிசிப் பிள்ளையார் என்று ஒருவர். அவருக்கு வயிறு மிகப் பெரிதாக இருக்கும். இன்னொரு இடத்திலே பார்த்தால் துதிக்கை இருக்காது. அது நரமுகப் பிள்ளையார். இப்படி பிள்ளையாருடைய உருவத்தையே மாறிமாறிக் கொண்டு போனல் மக்களுடைய உள்ளத்திலே நிலையான ஓர் இறைவனுடைய எண்ணம் எழும்புவதற்கு மாருக, அவரவர்களும், கலைஞன் நினைக்கின்றவாறெல்லாம் போய்விடுமானல் அந்த உள்ளத்திலே ஓர் இறை எண்ணம் தோன்றுவதற்கு மாருக வெவ்வேறு வகையான நிலையிலே மனமானது ஒரு அலைபாயத் தொடங்கும். அந்த வகையில் இல்லாதபடி வள்ளுவனுக்கு ஒரு நிலைத்த எண்ணமாக, பள்ளிப் பாட நூல்களிலேயும், ஒவ்வொருவருடைய இல்லங்களிலேயும், இந்த உருவமானது இருந்து, திருவள்ளுவடைய பெருமைக்கு எடுத்துக்காட்டாக, எந்தவிதமான கட்சி வேறுபாடுமில்லாதபடி திருக்குறளுடைய பெருமையே இதனல் சிறப்பாக நாடு முழுவதும், உலகம் முழுவதும் பரவும் என்று நான் நினைக்கின்றேன். ஏனென்ருல் ஒரு தனிப்பட்டவருடைய கொள்கையினுடைய கருத்து வேறு பாட்டினலே—உதாரணமாக நான் காந்தியைப் பற்றியே கூறினேன். காந்தி ஏதோ, தன்னுடைய அறியாமையினலேயோ இளமையினலேயோ புலால் உண்டார் என்பதாகவைத்துக் கொள்ளுங்கள். அந்த புலால் உண்பது போல, பிரியாணிக் கடைக்கு காந்தி போவது போன்ருேஅல்லது புலாலுக்கு பதிலாக அவர் கத்தியையோ மற்ற வற்றையோ வைத்துக் கொண்டோ, உணவு உண்பதைப் போல ஒரு படத்தைப் போட்டு இது காந்தி என்ற வகையிலே தவறு செய்தார் என்று எடுத்துக் காட்டினல் காந்தியைப் பற்றி கொண்டிருக்கின்ற பெருமையான கருத்துக்கள்

அத்தனையும் மறைந்து, சிறுமையான கருத்தினாலே மறைவு பட்டுவிடும்.

அந்த வகையிலே வள்ளுவருடைய தனிப்பட்ட வாழ்க்கையிலே இருக்கக் கூடிய, மற்றவர்கள் கூறுகின்ற கதைகளையெல்லாம் மறந்து, இந்த திருவள்ளுவருடைய நூலை வைத்துக் கொண்டு, திருவள்ளுவருடைய பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்டக் கூடிய வகையிலும் இந்தப் பேருருவமானது அமைந்திருக்கின்றது. அவருடைய கண்ணொளி எவ்வளவு சிறப்பகாவும், அவருடைய தோற்றம் எவ்வளவு சிறப்பாகவும் அமைந்திருக்கின்றது என்பதைப் பார்க்கும் போது வேணுகோபாலனார் அவர்களுடைய ஒரு தனி உள்ளமும், அவர்களுடைய உழைப்பும், நாட்டு மக்களுடைய அனைவருடைய உள்ளத்திலேயும், நின்று நிலவக்கூடிய வகையிலே இருக்கின்றது. அவருடைய வெற்றியானது சிறப்புற்ற, தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு அவருடைய ஊக்கத்தை, அவருடைய உள்ளத்தை மேலும் மேலும் இது போன்ற வகையிலே, நல்ல வகையிலே ஈடுபடும்படியான வகையிலே, தமிழ் மக்கள் தங்களாலான ஒரு வகையிலே ஒத்துழைப்பை நல்கி இந்தப் படமானது எங்கும், எல்லாருடைய வீடுகளிலேயும் இருக்க வேண்டும். இதுதான் நாம் அவருக்குச் செய்யக்கூடிய கைம்மாறு. அவருடைய உள்ளத்தை மேலும் மேலும் உயர்த்துவதற்குரிய வழியாகும் என்று கூறி முடித்துக் கொள்கின்றேன்.

திரு கொடுமுடி ராஜகோபாலன்

*

‘‘வள்ளுவன் தன்னை உலகினிற்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ் நாடு.

என்றார் கவிச் சக்கரவர்த்தி பாரதியார்.

உலகத்திற்கே அளிக்கப்பட்ட ஒரு மாபெரும் கவிஞனின் உருவம், எப்படி இருந்திருக்கும் என்பதைப் பற்றி பலருக்கு பல காலம் சந்தேகமாகத்தான் இருந்திருக்கும்.

நண்பர் சிவபாத சுந்தரம் அவர்கள் சொன்னபடி, வள்ளுவருடைய காலம், வள்ளுவருடைய வரலாறு இவைகளைப் பற்றியெல்லாம், கால ஆராய்ச்சியைப்பற்றி எழுதுகின்ற மாபெரும் எழுத்தாளர்களெல்லாம், அபிப்பிராய பேதம் கொண்டே எழுதியிருக்கிறார்கள் என்பதை அறிகிறோம். அப்படி இருக்க எந்தக் காலத்திலோ, 2000 ஆண்டுகள், அல்லது 1500 ஆண்டுகளுக்கு முன்போ, அல்லது 12-வது நூற்றாண்டோ, அல்லது 9-வது நூற்றாண்டோ, எந்த நூற்றாண்டிலோ நமது தமிழகத்திலுருந்த ஒரு மாபெரும் புலவன் பாரதி சொன்னபடி, உலகத்திற்கே அளிக்கப்பட்ட ஒரு பெரிய கவிஞன், அவருடைய உருவப்படம் இப்படித்தான் இருக்கும், என்று நினைப்பது ரொம்பக் கஷ்டம். அதே பாரதியார், ‘‘உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாம்’’ என்று சொல்லியிருக்கிறார். அவர் ‘வாக்கினிலே ஒளி உண்டாம், என்று சொன்னதை நான் மாற்றி, ‘‘உள்ளத்திலே ஒளி உண்டாயின், செயலிலே ஒளி உண்டாம்’’ என்று நான் திருத்திக் கூறுகிறேன். ஏனெனில் உள்ளம், தெளிந்த உள்ளம். பண்பட்ட உள்ளம். அறிவாற்றல் படைத்த உள்ளம். இந்த உள்ளத்திலிருந்து தான் சிறந்த சிருஷ்டிகளையெல்லாம். நாம் செய்து காட்ட முடியும். அதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு என்று இந்த திருவள்ளுவரின் திருவுருவப் படத்தை நான் நிச்சயமாகக் கூற முடியும்.

என்னைப் பொறுத்த அளவில், இந்தப் படத்தைப் பார்த்தது முதல் அது என் உள்ளத்தில் ஒரு பெரிய ஒரு ஒளியையே உண்டாக்கியிருக்கிறது. என்று நான்

சொல்லுவேன். சர்மா அவர்களைப் பாராட்டு வதற்காக நான் சொல்லக் கூடிய பேச்சாக இதை யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது. நான் மனப்பூர்வமாகச் சொல்லுகிறேன். இந்தப் படம் மிகச் சிறந்த படம். அவருடைய கை வன்மையை, ஓவியத் திறமையைக் காட்டுகின்ற படம். அவர் உள்ளத்திலே எழுந்த குறளைப் பற்றி, குறளின் பேராசிரியர் வள்ளுவரைப் பற்றி, அவர் வாழ்ந்த அறநெறி யைப் பற்றி, அவர் போதித்த தந்துவத்தைப் பற்றி, அவர் உள்ளத்திலே எழுந்த சிறந்த கருத்துக்களைப் பிரதிபலிக்கும் மிக உயர்ந்த படம் என்று நான் மனப்பூர்வமாகச் சொல்ல விரும்புகின்றேன்.

இப்ப உயிருடன் இருக்கும் தலைவர்கள், புகைப் படம் இருக்கும் உயிருடன் இருந்து காலம் சென்ற பல தலைவர்கள் இருக் கிறார்களே, அவர்களுக்கெல்லாம் புகைப் படங்களிருக்கின்றன. அவைகளை வைத்து பலர் பல விதமாக, பல ஓவியர்கள்படம் எழுதி யிருக்கிறார்கள், அந்தப் படங்களெல்லாம் நம்மைக் கவர வில்லை என்றே தான் சொல்ல வேண்டும்.

உதாரணமாக, எட்டயாபுரத்திலே பாரதி யாருக்கு நினைவு மண்டபம் எழுப்பினார்கள். அந்த நினைவு மண்டபம் எழுப்பி, அதற்கு பெரிய திறப்பு விழா வைத்தார்கள். நமது ஒப்பற்ற தலைவர் ராஜாஜி அவர்கள் அந்த திறப்பு விழா வைபவத்திற்கு வந்திருந்தார்கள். நாங்களெல்லாம் சென்றிருந்தோம், அங்கே பாரதியார் படம் ஒன்று வரையப்பட்டு, ஒரு ஓவியரால் வரையப்பட்டு, அங்கே வைக்கப் பட்டிருந்தது. ராஜாஜி அந்தப் படத்தைப் பார்த்தார். பார்த்து பக்கத்திலிருந்தவர்களைக் கூப்பிட்டு. ''நண்பர்களே ! அடியில் இவர் தான் சுப்பிரமணிய பாரதியார் என்று எழுதுங்கள். எழுதினால் தான் இந்தப் படத்தை பாரதி என்று ஒப்புக் கொள்ள முடியும்'' என்று சொன்னார்.

புகைப்படம் இருக்கின்ற தவர்களின் படத்தை, ஓவியர்கள் தீட்டும் பொழுது எத்தனையோ தவறுகளைச் செய்கிறார்கள். அப்படங்களெல்லாம் உயிருள்ள சித்திரமாக நமக்குப் படுவதில்லை. ஆனால் படமே இல்லாத, காலம். புகைப்படமோ, இந்த விஞ்ஞானமோ இல்லாத காலத்திலே, எப்பவோ ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு மாபெரும் கவிஞனின் படத்தை இப்பொழுது நாமெல்லோரும் அனேகமாக 100க்கு 99 பேர் என்று கூடச் சொல்லி விடலாம். ஒப்புக் கொள்ளக் கூடிய முறையிலே ஒரு திருவுருவப் படத்தை அமைப் பதென்பது சாத்தியமல்ல அந்தக் காரியத்தை மகத்தான காரியத்தை, மிகச் சிறப்பாக சாதித் திருக்கிறார்- சர்மா அவர்கள் அவர்களை தமிழகம் என்றென்றும் பாராட்ட கடமைப் பட்டிருக்கிறது.

சமீபத்திலே மத்திய சர்க்காரின் மந்திரி யவர்கள், டாக்டர் சுப்பராயன் அவர்கள், ''ஸ்டாம்புகளிலே பாரதியார் படத்தையும், வள்ளுவர் படத்தையும் பொறிக்க வேண்டு மென்று நான் தீர்மானித்திருக்கிறேன்'' என்று சொன்ன பொழுது எனக்கெல்லாம் மிகவும் சந்தோஷமாக இருந்தது. இதுவரை செய்யாத ஒரு காரியம். வடநாட்டிலே பல தலைவர் களுடைய படங்களெல்லாம் ஸ்டாம்புகளிலே பொறிக்கப்பட்டு வெளி வந்திருக்கின்றன. நமது தமிழகத்திலே உள்ள கவிஞர்களின் படங்களெல்லாம் வரவில்லையே என்று ஏங்கி நான் சிலசமயங்களிலே கோபப் பட்டது கூட உண்டு. அந்த நிலையிலே சரியான காலத்திலே டாக்டர் சுப்பராயன் அவர்கள் வெளியிட்ட இந்த அறிவிப்பு எங்களைப்போன்றவர்களுக் கெல்லாம், மனத்திலே ஒரு பெரிய தெம்பையும், உற்சாகத்தையும் உண்டு பண்ணியது.

இன்று மத்தியானம் 2 மணிக்கு நண்பர் சொக்கலிங்கம் அவர்கள் திடீரென்று போன் செய்து, அங்கே சர்மா அவர்கள், சர்மா என்ற ஒரு நண்பர் சிறந்த படம் ஒன்று எழுதியிருக் கிறார். வள்ளுவர் படம் எழுதியிருக்கிறார். அதை நீங்கள் மூவரும் கண்டிப்பாகப் போய்ப் பார்க்க வேண்டும் என்று எங்களுக்கு கட்டளை யிட்டார். கட்டளையிட்டார் என்றால் அவர் எங்களுடைய ஒப்பற்ற நண்பர் சிறந்த. நாங்களெல்லாம் அவரை மதிக்கின்றன. ஒரு தலைவர் மாதிரி, எழுத்தாளர்களுக்கே அவர் ஒரு சிறந்த மனிதன். அவர் சொன்னவுடனே இதைப் பார்க்க வேண்டும் என்று நாங்கள் ஓடோடியும் வந்தோம், பார்த்ததோடு மட்டு மல்ல, எங்களுக்கு வேறு அலுவல் இருக்கிறது; அந்த அலுவலைக் கூட நான் மறந்து விட்டேன். ஏனென்றால்,

இந்தப் படம் என்னை இந்த இடத் திலேயே இருக்கும் படியாக செல்வது விட்டது என்று சொன்னாலும், அது மிகையாகாது. இந்த மாமெரும் தமிழ்ப் 'பணியைச் செய்த சர்மாஜீ அவர்களுக்கு தமிழகம் என்றென்றும் கடமைப் பட்டிருக்கிறது.

அவர்களுடைய கைத்திறன் இத்துடன் நின்றுவிடாமல் நான் அவரை இன்னொன்று இந்த சமயத்திலே அவருக்கு பிரத்தியேகமாக ஒரு வெண்டுகோள் விடுக்க ஆசைப் படுகிறேன். கவிஞன் பாரதிக்கு மிகச் சிறந்த படம் தேவை. என்று நான் சொல்லும்பொழுது இன்னொரு வுஷயத்தையும் சொல்ல விரும்பு கிறேன்.

அண்மையிலே டிசம்பர் மாதம் 16ந்தேதி யிலிருந்து 20 ந்தேதி வரை அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு ஒன்று சென்னையிலே நாங்கள் கூட்ட இருக்கிறோம். அகில இந்திய எழுந்தாளர் மகாநாடு. அந்த எழுத்தாளர் மகாநாட்டிலே அகில உலகத்திலிருந்தும் எழுத்தாளர்கள், சிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள், பேராசிரியர்கள் கலந்து கொள்ளப் போகிறார்கள். அந்தக் காலத்திலே கவிஞன் பாரதியாரின் படம், சமீபகாலத்தில் வாழ்ந்த பாரதி, மறுமலர்ச்சிக்குத் தந்தையாக இருந்த பாரதி, தமிழ் நாட்டை தட்டியெழுப் பிய பாரதி, உலகத்துக்கே வந்து வள்ளுவனை அளித்திருக்கிறான் என்று பாடிய பாரதி. "வான்புகழ் கொண்ட தமிழ் நாடு, "வள்ளுவன்" தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட "தமிழ் நாடு" என்ற அருமையான அமுத வாக்கினைப் பாடிய பாரதியின் படத்தை மிகச் சிறந்ததாக வரைந்து அந்த மகாநாட்டு மேடையிலே வைத்து இந்தியாவிலிருந்து, வெளி நாடுகளி லிருந்தும் வரும் பிரதிநிதிகளுக்கு நமது பாரதியை எடுத்துக் காட்டுமாறு நண்பர் சர்மாஜி அவர்களுக்கு நான் பாரதியின் பெயரால் தமிழின் பெயரால் கட்டளையிடு கிறேன்.

நண்பர் வேணுகோபால் அவர்கள் தீட் டிய வள்ளுவப் பெருந்தகையின் ஓவியத் தைக் காணுகின்ற வாய்ப்பினைப் பெற்றேன். பல்லோரும் வந்து கண்டு இதனைப் பாராட்டி யிருக்கின்றார்கள் என்பதை முன் கூட்டியே அறிந்திருந்தமையால் தனிச்சிறப்புற்று இது திகழக்கூடும் என்று நான் அறிவேன். இருப் பினும், தோற்றத்தைக் காணுகிற நேரத்தில், உள்ளமும் உருவத்தின் உள்ளே அடங்கி யிருக்கின்ற எண்ணங்களும், தெளிவாகத் தெரிகின்ற வகையில், இந்த அளவுக்கு ஓவி யம் காட்டுவதை நேரிலே கண்டேன்.

*

வள்ளுவருடைய ஓவியங்களைப் பல மேடைகளிலே காணுகின்ற பேறு பெற்ற போது, உள்ளே இருந்த குறையெல்லாம் ஒவ்வொருவரும் அவரவர்க்கு ஏற்றபடி வள்ளுவருடைய சமயத்தைக் கற்பித்து, அதற்கேற்ப மார்பிலே பூணூலோ, நெற்றி யிலே விபூதியோ அல்லது மாறுபட்ட மதச் சின்னங்களோ அணிந்திருப்பதைக் காட்டி யிருந்தார்கள். மதச் சின்னங்களே இல்லா மல் அவர் வாழ்நாளிலே எப்படி வாழ்ந் திருக்க முடியும்? என்பதைக் காணுகிற வாய்ப்பு இல்லாத நிலையிலேயும், ஒரு அறிவை, உள்ளொளியை வைத்துக் கொண்டு, எண்ணத்தை வைத்துக் கொண்டு

கவிஞர் கண்ணதாசன்

*

உருவம் இப்படி வாய்த்திருக்க முடியும் என்கின்ற கற்பனையை, நண்பர் வேணு கோபால் அவர்கள் தெளிவாக இதிலே சமைத்திருக்கின்றார்கள். வள்ளுவரைப்பற்றி நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட படங்கள் இதனின்று வெகுவாக மாறு பட்டன.

> "மழித்தலும் நீட்டலும் வேண்டாம் உலகம்
> பழித்ததை ஒழித்து விடின்"

என்று வரும் குறள், ஜடாமுடி வளர்க்கவும் வேண்டாம்; தாடி வைக்கவும் வேண்டாம் என்று வள்ளுவர் கூடா ஒழுக்கங்களை நீங் கள் விட்டுவிட்டால், இவை வைக்கவேண் டாம் என்று குறிப்பிடுவதாகக் கொண்டு, ஆனால் வள்ளுவருக்கு வைக்க வேண்டு மென்று நினைத்த தலைமுடியும், தாடியும் ஒரு நல்ல சிந்தனையாளனுக்கு வாய்க்கின்ற முடி யாக, தவஞானியோடு ஒன்றுபட்டிருக்கின்ற முடியாக கற்பித்து நண்பர் வேணுகோபால் அவர்கள் இந்த ஓவியத்தை வரைந்திருக் கின்றார்கள்.

அகத்து ஒளி நிறையப் பெற்றவராதலின் அந்நாளிலே அகத்தியர் என்று அழைக்கப் பட்டவரே, ஒரு வேளை வள்ளுவராக இருந் திருக்க முடியும் என்று நம்புகின்றவன் நான். அகத்தின் இயல்புகள் செம்மையாக உள் ளமையால் அகத்தியன் என்கின்ற பெயரை அவர் பெற்றிருக்கக்கூடும். காலங்கொண்டு கணக்கிட்டால், வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கு முன்னாலே இருந்தவர் என்பதைவிட, தொல்காப்பியர் காலத்தை ஒட்டியவராகக் கூட கருதப்பட முடியும்; அகத்தியன் என்ற பெயரை அவருக்கு வைத் துப் பார்த்தால்.

*

குருமுனி என்று குறிப்பதும், சோழர் களுடைய கோயில்களிலே அவர் இருந்த குருமுனி சிலைகளும், வள்ளுவருடைய சிலை களாக ஒருவேளை அமைந்திருக்கக் கூடும். நல்ல தத்துவ ஞானிகளுக்கு ஏற்ற பரந்த நெற்றி வள்ளுவருக்கு அமைக்கப் பட்டிருப் பதைப் படத்திலே காட்டிய நண்பர் வேணு கோபால் அவர்கள் குறிப்பிலேயும் அதனைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

*

நம்முடைய வாழ்நாளிலே கண்ட தத்துவ ஞானிகள் விவேகானந்தர் என்று எடுத்துக் கொண்டாலும், அதே அளவுக்கு நமக்குச் சிலைகளாகக் காட்டப்பட்ட புத்தர் என்று எடுத்துக் கொண்டாலும், அந்த ஞானிகளு டைய கண்களில் எவ்வளவு தெளிவிருக்கி றதோ, எவ்வளவு ஆழ்ந்த சிந்தனையிருக்கி றதோ, அந்த கண்கள் பலநாட்கள் நிலையாக நின்று, பார்த்துப் பார்த்து, அந்தப் பார்வை யிலே கண்களினுடைய ஒளி சிந்தனையோடு சேர்ந்து குழைந்து காணப்படுகிறதோ அந்தக் காட்சியையும், அந்த சிந்தனையின் காரண மாக ஓரளவுக்கு வீங்கிய முகத்தையும் இங்கே நான் ஓவியத்திலே பார்க்கிறேன். ஓவியத்தின் முகத்திலே இருக்கிறது தெளிவு என்பதைவிட, சிந்தனையாலே ஏற்பட்ட ஒரு களைப்பு முகத் திலே இருக்கிறது. அந்தக் களைப்புத்தான் வள் ளுவருக்கு நியாயமாக இருந்திருக்கக் கூடிய களைப்பு என்று நாம் நம்பவும் முடிகின்றது. வள்ளுவருடைய தத்துவங்களை முன்னாலே வைத்து படத்தை வரைந்திருக்கின்ற காரணத் தால் வள்ளுவர் நோயற்றவராக, "மெய்யினும் குறையினும் நோய் செய்யும்" என்பதை அறிந்து குறைந்த உணவு உண்டவராக, வெள்ளுடை அணிந்தவராக, அகம் புறம் இரண்டிலும் தெளிந்தவராகக் கற்பிக்கப்பட்டு அழகிய முறையிலே இந்த ஓவியம் வரையப் பட்டிருக்கின்றது.

ஓவியத்தை வரைந்தவர்கள் வர்ண ஜாலம் செய்ய வேண்டும் என்கின்ற ஆசையே இல்லாமல், மேனி சாதாரணமாக எப்படி இருக்குமோ அந்த அளவிலேயும் தோற்றம் அதிலே எவ்வளவுக்குப் பிரதிபலிக்குமோ அந்த அளவிலேயும், செம்மையாக இதனைப் படைத்திருக்கின்றார்கள்.

*

முன்னாலே சம்பத் அவர்கள் குறிப்பிட்டி ருந்ததைப்போல், இந்தப் படம் வள்ளுவர் படங்களைப்பற்றிய பிரச்னையைத் தீர்த்து வைக்கும் என்று நாம் நிச்சயமாக நம்பமுடியும். வள்ளுவர் படத்தைப் பற்றிய பிரச்சினை, வேறு எதையும்விட அதிகமாக திருவள்ளுவர் விழாக் களிலே தோன்றியதுண்டு. ஒவ்வொருவரும் மேடையிலே இருக்கின்ற வள்ளுவர் படத் தைப் பார்த்து கேலி செய்தோ புகழ்ந்தோ பேசுவது வள்ளுவர் விழாக்களிலே ஒரு மரபா கவே இருந்து வந்திருக்கின்றது. அதனை மாற் றுவதற்கு இந்தப் படம் பல இடங்களிலேயும் பரவினால் ஒரு நல்ல வாய்ப்பு நிச்சயம் தமிழ் மக்களுக்குக் கிடைக்கும். இந்தப் படத்தைக் கொண்டு வள்ளுவருடைய எண்ணத்தைக் காண முடியும்.

*

திருக்குறளைக் கொண்டு வள்ளுவரைக் காண முடிந்த நண்பர் வேணுகோபால் அவர் கள் இந்தப் படத்தைக் கொண்டாவது படிப் பறிவில்லாத மக்கள், வள்ளுவருடைய குறளைக் காணமுடிகின்ற நம்பிக்கையை ஏற்படுத்தி யிருக்கின்றார்கள்.

*

முன்னாலே இருந்த வள்ளுவர், வள்ளுவர் என்கின்ற அளவிலே மக்களாலே உணரப்பட் டாரா? திருக்குறள் என்கின்ற நூலைச் செய் ததாலே தெரிந்து கொள்ளப்பட்டாரா என்பது நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்று கும்.

*

திருக்குறள் என்கின்ற நூலைச் செய்து அந்த நூல் அச்சுப்பிரதி இல்லாத காலத்தில், ஆயிரம் ஆயிரம் பிரதிகள் எடுக்க முடியாத காலத்தில், மிகக் குறைந்த அளவிலே கை யெழுத்தாலே ஆயிரத்து முன்னூற்று முப்பது குறள்களையும், ஏட்டிலே எழுத்தாணியாலே எழுத வேண்டும் என்கின்ற நிர்பந்தம் இருந்த காலத்தில் எந்த அளவுக்கு வள்ளுவருடைய குறள் பரவியிருக்க முடியும்? என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

*

பாமரமக்கள், பொது மக்கள் கையிலே குறள் போனதோ இல்லையோ, வள்ளுவருடைய காலத்திலும் அதற்குப் பிற்காலத்திலும் வந்த எல்லா புலவருடைய கையிலேயும் அந்த ஏடு இருந்திருக்கிறது என்பதற்கு பிற்காலப் புலவர்கள் செய்த ஒவ்வொரு நூலிலேயும் திருக்குறள் வரிகள் வருவது சான்ருக அமைகிறது. நான் உண்மையிலேயே நம்புகிறேன், இவ்வளவு தெளிவான உருவமும், இவ்வளவு தெளிவான உள்ளமும் கொண்டவராகவே வள்ளுவர் இருந்திருக்க வேண்டும். இவ்வளவு தெளிவானவர், பக்குவமானவர், பண்பானவர், உயர்ந்த மனிதர் என்கின்ற முறையிலே முதலில் மக்கள் அவரை அறிந்திருக்க வேண்டும். 'அவ்வளவு பெரிய மனிதர் எழுதிய நூல், எப்படி இருக்கிறது என்ற ஆசையோடு படித்துப் பார்த்திருக்க முடியும். அப்படி படித்ததற்குப் பிற்பாடு வள்ளுவரிடம் ஏற்கனவே வைத்திருந்த மரியாதை இரட்டிப்பாக வளர்ந்திருக்க முடியும். உள்ளே தெளிவான ஒளி இல்லையென்ருல் சொல்லுகின்ற மொழியிலே தூய்மை இருக்க முடியாது. உள்ளே எது இருக்கிறதோ அதுதான் வெளியிலே வரும். அதுவும் வள்ளுவர் வாழ்ந்த காலம், வெளியிலே ஒன்றைச் சொல்லி, உள்ளே ஒன்றை வைத்துக் கொண்டு வாழ்கின்றவன் கண்டிப்பாக மக்களிடத்திலே தலைநீட்ட முடியாத காலம். இந்த காலம் போல் விளம்பரக் காலமாயிருந்தால்; செய்கின்ற காரியங்கள் வேறு, பத்திரிகையிலே வருகின்ற செய்தி வேறு என்று வாழ்க்கையை நடத்தியிருக்க முடியும். ஆனுல், வள்ளுவருடைய காலத்தில், அதேபடி வாழ்ந்து, அதே சிந்தனையோடு இருந்து, வள்ளுவர் மாண்டிருந்தால்தான் அந்தக் குறளை நமது தலைமுறை வரையிலே பல ஊழிகளைக் கடந்து காப்பாற்றி வைத்திருக்க முடியும். பல ஊழிகள் நம்முடைய நாட்டைக் கொள்ளை கொண்டிருக்கின்றன என்றும், அதிலே தப்பி பிழைத்து வந்த நூல்கள் சில, தப்பாமல் போனவை பல என்றும் நாம் வரலாற்றிலே படிக்கின்ருேம்.

*

வள்ளுவர் வாழ்ந்தது மயிலையிலே என்கிருர்கள். மயிலைக்குக் கடலாலே ஆபத்து வந்தது இல்லை. ஆனுல், கடலாலே ஆபத்து வந்த இடத்திலேயிருந்து காப்பாற்றிக் கொண்டு வரப்பட்ட தொல்காப்பியமும், அதே அளவுக்கு வள்ளுவருடைய குறளுக்கு ஒரு ஆபத்து வந்து அதுவும் காப்பாற்றிக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்று நம்புவதற்கும் நிச்சயமாக இடமிருக்கிறது. காரணம், வள்ளுவருடைய காலத்திலேயிருந்து இன்றைக்கு வரை அது ஒன்றுதான் எல்லோருடைய குடும்பங்களிலேயும் இருக்கிறது. மகோமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாதஐயர் அவர்கள் வள்ளுவருடைய குறள் பிரதிகளை ஏடுகளாக இருந்து எடுத்தபோது, பல ஏடுகளைத் தேடிப் போன சாமிநாத ஐயருக்கு ஒவ்வொரு வீட்டிலேயும் அவர் தேடிப் போனது வேறு ஏடாக இருந்தால், அந்த ஏடு கிடைக்காமல், திருவள்ளுவருடைய ஏடே கிடைத்திருக்கிறது. ஆகவே, காலங்களைக் கடந்து நிற்பதற்கு ஒவ்வொரு வீட்டிலேயும் பானைக்குள்ளே அதைப் போட்டு வைத்திருக்கிருர்கள், ஏட்டு வடிவிலே.

*

அவ்வளவு தெளிவான உள்ளமும், உறுதியும், எண்ணமும் வள்ளுவருக்கு இல்லாமல் இருந்திருந்தால், அவருடைய வாழ்க்கை அவ்வளவு தூய்மையாக இல்லாமல் இருந்திருந்தால் குறள் நிலைக்காது. வாழ்க்கை தூய்மையாக இருந்தால், உருவம் இந்த ஓவியத்தில் உள்ளதுபோல்தான் இருக்கும். வள்ளுவர் அந்த காலத்திலே புகை பிடிப்பது இருந்து, வள்ளுவர் புகை பிடித்திருந்தால், நெஞ்சு மார்பு, விரிந்திருக்காது; கூடு கட்டியிருக்கும். வள்ளுவர் காம இச்சையிலே அதிகமாக ஈடுபட்டவராக இருந்தால், மேனியிலே தெளிவிருக்காது; மேனி ஒடுங்கி விழுந்திருக்கும். வள்ளுவர் மது குடித்தவராக இருந்தால், கண்களிலே சிந்தனையின் போதை இருக்காது; மதுவினுடைய போதை இருக்கும். வாழ்க்கை, நெறிதவறிப் போயிருந்தால், எண்ணமும் நெறிதவறிப் போகும். வாழ்க்கை முறை தப்பிப் போயிருந்தால், உருவமும் ஒழுங்குத் தப்பிப் போகும். நெறியான வாழ்க்கை வாழ்ந்தவர் அதனுலே நெறியான பாதையைக் காட்டியவர். நெறியாக வாழ்ந்து, நெறியான பாதையைக் காட்டியவர் எப்படி இருப்பார் என்ருல், நண்பர் வேணுகோபால் அவர்கள் எழுதிய இந்த உருவத்திலே இருக்கின்ற வள்ளுவராக இருந்திருப்பாரே தவிர வேருக இருக்க முடியாது என்கின்ற நம்பிக்கையை உங்கள் மத்தியிலே வைத்து, விடை பெறுகிறேன்; வணக்கம்.

ஸ்ரீ திருமுருக கிருபானந்தவாரியார்

உலகத்திலே எண்பத்திநான்கு நூறுயிர யோனி பேதங்களிலே தலை சிறந்தது மனிதப் பிறப்பு. மனிதன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்பது பொருள். 'மன்' என்ற பகுதியடியாக, 'மனம்' என்ற சொல் தோன்றியது. நினைக்கின்ற கருவி மனம். அந்த நினைக்கின்ற கருவியாகிய மனத்தை நன்முகப் பயன்படுத்துகின்றவன் மனிதன். உண்ணுகின்ற வாயை மட்டும், வாய் என்று சொல்லுவதில்லை. ஆடு, மாடு, யானை முதலாகிய விலங்குகளுக்கும் வாய் உண்டு. நம்மைக் காட்டிலும், நிரம்பிய உணவை உண்ணுகின்றவிலங்குகளை வாயில்லாதபிராணி என்று சொல்லுகிறேம். அப்போது, உண்ணுகின்ற வாய் வாயாவதில்லை. நன்றாக பேசவேண்டிய கருத்துக்களை பேசுகின்ற வாய், வாய் என்று பெரியவர்களால் கருதப்படுகின்றது. அப்படியானல் வசனிக்கின்ற வாயை உடையவன்தான் வாக்குடையவன். உண்ணுகின்றவாய் இருந்தும், பேசுகின்ற வாய் இல்லாமையினலே, விலங்குகள் வாய் இல்லாத பிராணி என்று கருதப்படுகிறது.

ஆகவே, பேசுகின்ற வாய்போலவே சிறந்த கருத்துக்களை நினைக்கின்ற மனந்தான் சிறந்தது. அந்த நன் மனம் படைத்தவன் மனிதன். அந்த மனதிலே சிறிதாவது களங்கம் இருக்கக்கூடாது. சிறந்த ஆடை என்று சொன்னல் அழுக்கற்றது. தூய ஆடை எல்லோராலும் விரும்பப்படுவது போல தூய உள்ளம், தூய மனம் இருக்கவேண்டும். அத்தகைய சிறந்த மனம் படைத்தவன் எல்லோராலும் போற்றப்படுகிற மனிதனுகவிளங்குகின்ருன். அந்த நல்ல மனம் அமையுமானல், வாக்கு சிறந்த வாக்காக அமையும். மூன்ருவதாக், சிறந்த செயல்கள் அங்கே விளையும். ஆகவே, நல்ல மனம், நல்ல வாக்கு, நல்ல செயல் இவைகளெல்லாம் ஒன்ருக அமையவேண்டுமென்று தவங்கிடந்தவர் திருவள்ளுவ தேவர். "தேவர்" என்ற சொல்லுக்கு ஒளிமயமானவர்.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என்(று) உணர்" என்று

ஔவையார் தெரிவித்தார்கள்.

இத்தனை நூல் வரிசையிலே முதலணியில் நிற்கின்ருர் திருவள்ளுவர். தேவர் குறளும் - "சிறப்புடைப் பொருளை முந்துறக் கிளத்தல்" – சூத்திரம். எது ஆக உயர்ந்ததோ, அதை முதலிலே தெரிவிக்க வேண்டும். தேவர் குறளும்-மிகப் பெரியவர்களுக்குப் பேயர் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அந்த முறையிலே, தேவர் - குறளும் - அவரை தேவர் என்று தெரிவித்தார் அந்தக் கிழவி. அதன் பிறகுதான் வடமொழி வேதமும் வருகிறது. திருநான் மறை முடிவும், பிறகு, மூவர் தமிழும் - முப்பதுகோடி மக்கள் வாழ்கிற நாட்டிலே மூன்று பேரைத்தான் சொன்னுர்கள், 'மூவர் தமிழும்' என்று. அதை, தேவாரம் என்று சொல்லாமல் 'தமிழ்' என்று சொன்னுர்கள். 'முனிமொழியும்' என்ருர்கள். பெரியவர்களுக்கு சமரசஞானம் உண்டு.

'முனி' என்பது நம்மாழ்வார். குருகூர் முனி. அவர் மொழிந்தது திருவாய் மொழி. அதிலே, 'முனிமொழி' என்பது நம்மாழ்வருடைய திருவாய்மொழி. அவருக்கு சைவ, வைணவ பேதங் கிடையாது நான் எத்தனையோ பகுதிகளிலே சுற்றியிருக்கின்றேன். எத்தனையோ மாகாணங்களைப் பார்த்திருக்கின்றேன். ஒரே ஒரு பொருளை என்னுடைய வாழ்நாளில் இது வரை பார்க்கவில்லை. பார்க்கவும் முடியாது என்று கருதுகிறேன். அது எது?

ஒரே பக்கம் உள்ள காகிதத்தை நாம் இதுவரைக்கும் கண்டதில்லை. யாராவது கண்டிருந்தால், தெரிந்தால், நான் நன்றியறிவோடு ஏற்றுக் கொள்ளுவேன்.எரு பக்கமுள்ள காகிதம் எங்காவது இருந்தால் அது பாராட்டத்தக்கதாக இருக்கும். எத்தனை மெல்லிய காகிதமாயிருந்தாலும் அதற்கு இரண்டு பக்கம் இருக்கவேண்டும். ஒரு காகிதத்தில் இரண்டு பக்கம் இருப்பது போலே ஆண்டவனும் இரண்டு தன்மை உள்ளவனுக இருக்கின்ருன். ஒன்று தட்பம்; ஒன்று வெப்பம். தட்பமும், வெப்பமும் சேர்ந்துதான் உடம்பும் உலகமும் வாழ்கின்றன.

ஒரு மலர் வாடி விடுகிறது. காரணம் என்ன? அதிலே தட்பம் குறைந்து விட்டது. ஒரு மலர் அழுகி விடுகிறது காரணம் என்ன? வெப்பம் குறைந்து விட்டது. வெப்பம் இல்லாத மலர் அழுகிவிடும். தட்பம் இல்லாத மலர் வாடிவிடும். தட்பமும் சமமாக இருந்தால் மலர் மலராக இருக்கும்.

நம்முடைய சரீரத்திலே இருக்கிற வெப்பம் குறைகிற போது, நம்மைச்சுற்றி எல்லாரும் இருந்து கொள்வார்கள். மருத்துவரும் அவர் கேட்டதையெல்லாம் கொடுக்க வேண்டுமென சொல்லுவார். வெப்பம், தட்பம், சீதோஷ்ணம் சமமாக இருந்தால்தான் உடம்பு வாழும். அதே போலத்தான் நாம் ரூபமில்லாத கடவுளும் வெப்பமும் தட்பமுமாக இருக்கின்ருர். அந்த தட்பம் பச்சை. வெப்பம் சிவப்பு. அதிகம் உஷ்ணமானல் கண் சிவந்துவிடும். குளிர்ச்சியை விரும்புகிறவர்கள் பச்சைக் கண்ணுடி போடுவார்கள். ஆகவே, அந்த தட்பமான ஒரு பொருளை, "பச்சைமா மலைபோல் மேனி" என்று சொன்னுர்கள். வெப்பமான பொருளை, "பவளம்போல் மேனி" என்று சொன்னுர்கள்.

ஆகவே, இந்த வடிவங்களையெல்லாம், இந்த உயர்ந்த தத்துவத்தைக் குறிக்கிறது. சண்டை போடுவதற்காக

ஏற்பட்டதல்ல. தட்பத்தையும், வெப்பத்தையும் இப்படி நம்முடைய முன்னோர்கள் கண்டு—அருட் கண்ணாலே கண்டு சொன்னார்கள். கண்டு சொன்னார்கள்; கற்பனையினாலே சொல்லவில்லை. அவர்களெல்லாம் நேருக்கு நேராக, யோகக் காட்சியினாலே கண்டார்கள். 'நான் கண்டேன்' என்று அவர்கள் சொல்லுகிறார்கள். கண்டதைக் காணாத நமக்கு அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஆகவே, இந்த உயர்ந்த சமரச ஞானத்தில் உள்ளவர்கள் தெய்வ பேதம், சமய பேதம், மொழி பேதம், நிற பேதம் இவைகளையெல்லாம் கொள்ளமாட்டார்கள். எல்லாம் அவனாக, எல்லாம் அதுவாக பார்க்கிற தன்மை அவர்களுக்கு உண்டாகும், அந்த பெருநிலையில் நின்றவர் அருணகிரிநாத சுவாமிகள. இரண்டு வேறாகப் போய்விட வேண்டும், இரண்டு ஒன்றாக வேண்டும் என்று சொல்லுகிறார்கள். எந்த இரண்டு வேறாகப் போக வேண்டும்? எந்த இரண்டு ஒன்றாக வேண்டும்?

"எனதும் யானும் வேறாக
எவரும் யாதும் யானாகும்
இதய பாவனாதீதம் அருள்வாயே" என்பது

அருணகிரி நாதர் திருவாக்கு. 'நான்', 'எனது' என்பது வேறாக வேண்டும். நன்றாகச் சிந்தியுங்கள். 'எனது', 'யான்' போய் விட்டால், அங்கே இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு, வேண்டுதல், வேண்டாமை ஒன்றுமில்லை. இந்த வில்லங்கம் எல்லாம், 'எனது', 'யான்' என்பதனாலே வருகிறது. விருப்பு, வெறுப்பினாலேதான் இந்த விலலங்கங்கள் வருகிறது. என்னுடைய சமயம், என்னுடைய மொழி, என்னுடைய நாடு, என்னுடைய நிலம், என்னுடைய மதம், என்னுடைய சமயம் என்ற விருப்பினாலே இந்த பூசல்கள் வருகின்றன.

"எனதும் யானும் வேறாக எவரும் யாதும் யானாக", தமிழ்நாடு மட்டுமல்ல, தமிழர்கள் மட்டுமல்ல, சிவசமயம் மட்டுமல்ல, வைணவ சமயம் மட்டுமல்ல, சகல உலகங்களும் நானாக வேண்டுமென்றார். இங்கே, மனித குலங்கூட இல்லை; எல்லாம் நானாக வேண்டும். 'எவரும் யாதும்'—சராசரம்—மனிதர்கள் மட்டும் வாழ வேண்டுமென்று எண்ணுவதுகூட குறுகிய புத்தி. இராமலிங்க அடிகள், "அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும், ஆர் உயிர்கட்கு எல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்"—செடி கொடிகளும்கூட நாமாகப் பார்க்க வேண்டும், இந்த கருத்தைத்தான் மகாகவி பாரதியார், "காக்கை குருவி எங்கள் ஜாதி" என்றார். அந்த அருள் நோக்கம், வந்தவர்கள் அப்படி எண்ணுவார்கள். "எவரும் யாதும் யானாகும்"—சராசரங்களெல்லாம் தானாகப் பார்க்கிற தன்மை வந்து விடும். அங்கே சமயப் பிணக்கு, மொழிப் பிணக்கு, தேசப் பிணக்கு தலைகாட்ட முடியாது. அந்த பெருநிலையில் நின்றவர்தான் நம்முடைய சான்றோர்கள், அந்த நிலையிலே நின்றவர்களிலே தலையாயவர் திருவள்ளுவ தேவர். அந்த பெருமானாரைப் பற்றி சொல்ல வந்த அந்த பெருமாட்டி,

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என்(று) உணர்"

அவர்கள் வெவ்வேறு பாடல்களாகப் பாடியிருந்தாலும் கருத்து ஒன்று, பொருள் ஒன்று, முடிவு ஒன்று. பசுக்கள் வெவ்வேறு நிறமாயிருந்தாலும் பால் வெண்மை தான். கரிய மாட்டிலே கறுப்புப் பாலும், சிவப்பு மாட்டிலே சிவப்புப் பாலும், மஞ்சள் மாட்டிலே மஞ்சள் பாலும் கிடைப்பதில்லை. பசுக்கள் பல்வேறு நிறமாயிருந்தாலும், பால் ஒரு நிறமாக இருப்பதனாலே சான்றோர்கள், பல்வேறு வண்ணங்களாகப் பாடினாலும் அவர்கள் கருத்து ஒன்றாக அமைகிறது.

ஆகவே, திருவள்ளுவரை தேவர் என்று நாம் இப்போது கண்டோம், ஒளி மயமானவர் என்று. இந்த ஓவியத்திலும் அந்த ஒளி மயத்தை அவர்கள் சிறப்பாகக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் உள்ளத்திலே நல்ல ஞான ஒளி வீசியது. அவருடைய கண்ணிலே ஒளி வீசிக் கொண்டிருந்தது. அவர் வாக்கிலே அருள் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. அந்த அன்பு, அருள், அறிவு இத்தனையும் கலந்தவர் திருவள்ளுவர்.

அன்பு அவருடைய நெஞ்சிலே இருந்தது. அருள் அவருடைய கண்ணிலே இருக்கிறது. அந்த அறிவு நெற்றியிலே இருக்கிறது. அறிவை எப்பொழுதும் பிரகாசமாகச் சொல்லுவார்கள். அறிவுப் பிரகாசம் ஞானப் பிரகாசம் என்று சொல்லுவார்கள். அந்த ஞானமாயிருக்கிற வெண்மை, நெற்றியிலே காணப்படுகிறது. ஞானம் எப்போதும் நெற்றியிலே இருக்கும். அந்த ஞானத்தை வெண்மையாகச் சொல்லுவார்கள்—'ஞானப் பிரகாசம்' ஆகவே அந்த ஞானப் பிரகாசம் நெற்றியிலேயே காட்டப்பட்டிருக்கிறது.

எப்பவுமே ஒரு பொருள் அதிகமாகப் போனால் கொஞ்சம் வழியும். அப்படி நெற்றியிலே இருக்கிற ஞானப்பிரகாசம், அந்த காது வரைக்கும் அப்படி கொஞ்சம் ஓடி இருக்கிற அந்தக் குறிப்பும், இந்த ஓவியத்திலே காணப்படுகிறது. அப்படி பொங்கி, வழிந்து, ததும்பி பூரணமாயிருக்கிற தன்மை, இந்த ஓவியத்திலே காணப்படுகிறது.

திருவள்ளுவர் எத்தனை எத்தனையோ வண்ணங்களாக இந்த உலகத்துக்கு ஞானத்தைச்சொன்னார். மிகப் பெரும் பொது சமய நூல்களிலும் சொன்னார். அந்த சமயப் பிணக்கு அவர் பார்க்கிற திசைக்குக் கிடையாது. அத்தகைய பரந்த பண்பாடுடையவர் திருவள்ளுவர். அவரது உள்ளமெல்லாம் தூய்மை. வாக்கெல்லாம் வாய்மை. அவர் செயலெல்லாம் அருள், அருள், அன்பு, அறிவு இந்த மூன்றும் அமைந்தவர் திருவள்ளுவ தேவர்.

அறிவுக்கொரு அடையாளம் உண்டு.—'அஞ்சாமை' அறிவுடையவன் ஒன்றுக்கும் அஞ்சுவதில்லை. அஞ்சாமை தான் அறிவுக்கு "நாம் ஆர்க்கும் குடியல்லோம்". காந்தியடிகள் அஞ்சாமை உடையவர். வள்ளுவர் அஞ்சாமை உடையவர். அறிவினுடைய இலக்கணம் அஞ்சாமை. ஆனால், அஞ்சாமை உடையவ

னெல்லாம் அறிவுடையவனல்ல. பாலுக்கு இலக்கணம் வெண்மை. வெண்மையாக இருப்பதெல்லாம் பாலல்ல. சுண்ணும்புத் தண்ணீர்கூட வெள்ளையாயிருக்கிறது. பால் இலக்கணம்—வெண்மையென்று சொன்னேன். வெண்மையானதெல்லாம் பால் என்று மயங்கி விடக் கூடாது. அந்த அறிவினாலே இந்த உலகத்தை யெல்லாம் துரும்பாக எண்ண வைக்கும்.

"வானம் துளங்கில் என் மண்கம்பம் ஆகில் என்
வடகோடு தாழ்ந்தென்ன தென்கோடு
உயர்ந்தென்ன வான்பிறக்கின்"

என்று சொல்லுவது ஞானிகள் திருவாக்கு.

அத்தகைய சிறந்த அறிவினாலே, அஞ்சாமை பெற்று, தனக்கென்று ஒன்று வேண்டாமையோடு இருந்து,

"வேண்டாமை என்ற விழிச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப(து) இல்"

என்ற அந்த பெருநிலை உலகத்துக்குக் காட்டியருளிய கருணைக் கடல் திருவள்ளுவர். அவர் பெரியவர்களாக ஆவதற்கு இரண்டு வழி சொல்கிறார்கள். ஒன்று சொல்லாமை; ஒன்று கொல்லாமை. நல்ல உள்ளம் படைத்தவர்கள் பிறரை எந்த வகையினாலும் மனம் நோகச் சொல்லமாட்டார்கள். அந்த கொல்லாமையைக் காட்டிலும் சிறந்தது சொல்லாமை. பிறருடைய கொடுமைகளைச் சொன்னால், அவர்கள் உள்ளம் வருந்தி மாய்ந்து போவார்கள். அதைத்தான்,

"கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு"

வள்ளுவருடைய பெருந்தன்மையை இந்த ஒரு திருக்குறள் காட்டிவிட்டது. "கொல்லா நலத்தது நோன்மை". எந்த உயிரையும் கொல்லாததுதான் சிறந்த விரதம். 'சால்பு'—பண்பாட்டினுடைய சிகரம். அந்த சான்றாண்மை சால்புடையவர்கள் யாரென்றார். "பிறர்தீமை சொல்லா நலத்தது சால்பு"—பிறருடைய தீமைகளை எடுத்துச் சொல்லக் கூடாது. யாரையும் மனம் நோகப் பேசக்கூடாது யாரையும் மனம் நோக எழுத்திலே எழுதக்கூடாது. இதுதான் திருவள்ளுவருடைய சிறந்த பண்பு. வேண்டுமானால் அவரை ரகசியமாக அழைத்து, 'நீங்கள் அப்படி நடக்கிறீரே, அப்படி திருந்தி வாழ்ந்தால் நல்லது' என்று அதை மறைமுகமாக, அவருக்கும் காணுமாறு சொல்ல வேண்டுமே தவிர, எழுத்தாலேயோ பிறர் அறிய பிறருடைய குற்றங்களை பறைசாற்றுவது சான்றாண்மைக்கு அழகல்ல. ஒரு குறள் உலகமெல்லாம் பரவுமானால், பூசல்களே வாராது. ஆகவே, "கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை சொல்லா நலத்தது சால்பு"—கொல்லாமையும், பிறர்தீமை சொல்லாமையும் இரண்டு நேத்திரங்களாக வள்ளுவனார் நமக்குத் தெரிவிக்கிறார்.

இந்த சிறந்த பண்பாட்டை நமக்குத் தெரிவித்த அவர்கள், அந்த பண்பாட்டிலே நெடிது காலம் வாழ்ந்தவர், எத்தனையோ பிறப்புகளிலே செய்த நல்லொழுக்கம் திரண்டு வந்தவர் திருவள்ளுவர். ஒரு கோடிப் பிறப்பிலே செய்த தூய தவம் இந்தப் பிறப்பிலே அவருக்கு முற்றுப் பெற்றுவிட்டது. அந்த உள்ளமெல்லாம் பண்பட்டு, அவர் இப்ப, தமிழகத்திலே உருவாகி வந்து அதை எல்லோரும் பெற வேண்டுமென்று கருதி, "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்", என்று திருமூலர் தெரிவித்தவாறு, "என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே", என்று வள்ளலார் தெரிவித்தவாறு அந்த சான்றாண்மை, சிறந்த பண்பாடு எல்லா சமுதாயங்களும் பெற வேண்டுமென்று கருதி, சுருங்கிய வடிவத்திலே இரண்டு வரி கூட இல்லாமல், ஒண்ணே முக்கால் வரியிலே ஒருகோடி யுகங்கள் படித்தாலும், காணமுடியாத அரிய பெரிய கருத்துக்களை யெல்லாம் சுருக்கி நாம் உணரும் பொருட்டு, பெருங் கருணையினாலே, வடித்தெடுத்த வாக்கு, அவர் நமக்குக் கொடுத்த திருக்குறள்.

அப்படி செய்து கொடுத்த அந்த பெருமானாருடைய திருவுருவத்தை எத்தனை எத்தனை வண்ணங்களாக எண்ணினாலும், எப்படி வள்ளுவர் குறள் சிந்திக்கச் சிந்திக்கத் தித்திக்கிறதோ, அப்படி வந்திக்க வந்திக்க நம்மைப் புனிதப் படுத்துவது, அவருடைய திருவுருவம். வள்ளுவர், எப்படி எத்தனையோ ஜென்மங்களிலே சிந்தித்தச் சிந்தனையெல்லாம் இந்தப் பிறப்பிலே உருவாக்கிக் கொடுத்தாரோ அதுபோல, பல ஆண்டுகளாக சிந்தித்துச் சிந்தித்து, அந்த பொதுமை புலப்படுமாறு, அந்த சிறந்த சமரச நோக்கோடு இதை எழுதிய அன்பர், திருவாளர் வேணுகோபால் சர்மா அவர்கள் நன்றாக வடித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

இந்த திருவுருவம் பார்க்கப் பார்க்க தெவிட்டாததாக அந்த பொதுமை உள்ளே அந்த உருவத்தை அமைத்திருப்பது மிக மிகவும் போற்றுதற்குரியது. அந்த பொதுமை நலத்தோடு, இந்த திருவுருவத்தை எல்லா நலங்களும் அமையுமாறு வள்ளுவனார், எப்படி அந்த திருக்குறளில் அனேக கருத்துக்களையெல்லாம், சுருக்கமாகவும், விளக்கமாகவும், சிந்திக்கச் சிந்திக்க ஆழமாகவும், தெளிவாகவும், எளிமையாகவும் அமைத்திருக்கிறாரோ, அப்படி வள்ளுவர் குறள், எப்படி படிக்குந்தோறும் புதிய புதிய கருத்துக்களை நமக்குத் தருகின்றதோ அது போலவே, இந்த திருவுருவம், பார்க்குந்தோறும், பார்க்குந்தோறும் நல்ல உணர்வுகள் ஊற்றெடுக்கிற மாதிரி அமைந்திருக்கிறது. அவர் நெடிது காலம் சிந்தித்த சிந்தனையை இதிலே அமைத்திருக்கிறார்கள். அதைக் காணுந்தோறும் காணுந்தோறும் அனேக கருத்துக்கள் இந்த உருவத்திலேயிருந்து நாம் உணரலாம். அந்த முடிமுதல் அடிவரைக்கும் அவர்கள் ஆய்ந்து அந்த திருவடி, இப்படி இருக்க வேண்டும், அந்த அமைந்திருக்கிற கோலம் இப்படி இருக்க வேண்டும், அந்த ஆடை தூய்மையாக இருக்க வேண்டும், அவருடைய இடை இப்படி அமைய வேண்டும், மார்பு

இப்படி விசாலமாக, வீரம் தங்கினதாக இருக்க வேண்டும், அவருடைய முகத்திலே புன்னகை தவழ வேண்டும், அறிவிலே கூர்மை இருக்க வேண்டும். அந்த கூர்த்த அறிவு கண்களிலே தோன்ற வேண்டும், தொங்குகிற காதாக அமைய வேண்டும், அந்த திருமுடி இப்படி அமைய வேண்டும் என்று அறிவு நிறைந்த பெருமக்கள் பலகாலம் எண்ணிய எண்ணங்களெல்லாம், இங்கே இவரிடத்திலே தோன்றி, இப்போது உருவமாக வெளிப்பட்டிருக்கிறது இதை எல்லோரும் ஒரு சேர உடன்பட்டுக் கொள்வார்கள் என்பதிலே ஒரு சிறிதும் ஐயமில்லை.

ஆகவே, யாரும் ஒப்புக் கொள்ளுகிற முறையிலே வள்ளுவர் குறள், எப்படி எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிற முறையிலே அமைந்திருக்கிறதோ, அதேபோல, அது காவியம்; இது ஓவியம். அப்படியான ஓவியத்தை இவர்கள் அமைத்திருப்பது தமிழ்நாடு செய்த தவப்பயன் என்று கருதி இந்த ஓவியம் எப்போதும் நிலைத்திருக்க வேண்டும், எல்லாருடைய வீட்டிலே வழிபாட்டிலே இருக்க வேண்டும், மனதிலே விளங்க வேண்டும், இது நீடித்து, நிலைத்து, நின்று மிகப்பெரும் பயனை இந்த நாட்டிற்கு விளைவிக்க வேண்டுமென்று சொல்லி, இப்படி அமைத்துக் கொடுத்த அவருக்கு தமிழகமே அன்றி, அஞ்சு கண்டத்தாலும் நன்றி பாராட்ட வேண்டுமென்று சொல்லி, இந்த அளவிலே இந்த சொல்லை முடித்துக் கொள்கின்றேன்.

ஈ. வி. கே. சம்பத், எம்.பி.

★

தனது அறிவால் மட்டுமே நமக்கெல்லாம் அறிமுகமாகியிருந்த வள்ளுவப் பெருந்தகையினை உருவால் அறிமுகப்படுத்திய பெருமை ஓவியப் பெருந்தகை வேணுகோபாலனார் அவர்களுக்கே சாரும் என்று நான் அறுதியிட்டுக் கூற முடியும்.

இன்று, இந்தப் படத்தை—வள்ளுவப் பெருந்தகையினுடைய தெள்ளிய உருவத்தைக் காண வருவதற்கு முன்பு என்னுடைய உள்ளத்திலே இருந்த பெரும் ஆவல் அவருடைய முகத்தில் இந்த மண்ணுக்கேற்ற முகம் இருக்குமா? சாயல் இருக்குமா என்பதுதான்.

திரை நீக்கப்பட்ட உடனேயே மண்ணுக்கேற்ற சாயல் அவருடைய முகத்திலே இருப்பதை நான் கண்டேன். அதனை நண்பர் அவர்களிடத்திலே நான் குறிப்பிட்டுச் சொன்னேன். ஏனென்றால், அண்மையிலே மட்டுமல்ல, கடந்த சில நூற்றாண்டுகளாகவே பல கலைஞர்களுடைய ஓவியத்தில் கிரேக்க நாட்டு ஓவியத்தினுடைய ஆதிக்கம் இடம் பெற்றிருப்பதைப் பல இடத்திலேயும் நான் கண்டிருக்கிறேன். தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலேயும் நான் பார்த்திருக்கிறேன். பார்த்து, அதனை உள்ளபடி என்றால் பாராட்ட முடியவில்லை. ஏனென்றால், ஓவியம் அழகாக இருக்க வேண்டு மென்பது மட்டும் கருத்தாக இல்லாமல், மண்ணுக்கேற்ற இயல்பும், மண்ணுக்கேற்ற சாயலும் அதிலே தெரிவிக்க வைப்பதுதான் உண்மையான ஓவியனுடைய பெருந்தொண்டாக இருக்கமுடியும். அப்படிப்பட்ட நிலையில் வள்ளுவப் பெருந்தகையினுடைய உருவத்தை எழுத வேண்டுமென்று பல ஆண்டுகளாக எண்ணியெண்ணி, சிந்தித்துச் சிந்தித்து, மிக அழகான-மிகப்பொருத்தமான—காண்பவர் அனைவரும் ஒப்புக்கொள்ளத்தக்க வகையில், வள்ளுவப் பெருந்தகையினுடைய உருவத்தை ஓவியர் அவர்கள் தீட்டி இருப்பது உள்ளபடியே பாராட்டுதலுக்கு உரியதாகும்.

வள்ளுவரும், அவருடைய நூலும் விவகாரத்திற்கும் வியாக்கியானத்திற்கும், நிறைய காலம் வளர வளர இடங் கொடுத்துக்கொண்டே இருக்கின்ற இயல்பினைக் கொண்டதாகும் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். ஆனால், அவருடைய உருவத்தை ஓவியப் பெருந்தகை வேணுகோபாலனார் அவர்கள், இன்றைக்குத் தீட்டி முடித்திருப்பது, உருவத்தைப் பற்றிய விவகாரம் இனி நிச்சயம் தமிழகத்திலே எழாது என்று நான் நிச்சயமாகச் சொல்லமுடியும். அப்படிப்பட்ட விவகாரங்களுக் கெல்லாம் அப்பாற்பட்ட நிலையிலே இருந்து, காண்பவர் பல்வேறு கருத்துப் படைத்தவர்கள் ஆனாலும், அத்தனை பேரும் ஒப்புக் கொள்ளத்தக்க வகையிலே மிகப் பொருத்தமான முறையிலே, வள்ளுவப் பெருந்தகையினுடைய உருவத்தை அவர்கள் தீட்டித் தந்திருக்கிறார்கள். அதற்கு, நாடும் நானிலமும் அவருக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றது.

★

யாதெனின்

அருளல்லது யாதெனின் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல்

நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

★

உலகத்திலே உள்ள எல்லா நாட்டினராலும், எல்லா காலத்தினராலும், எல்லா இனத்தினராலும், எல்லா சமயத்தினராலும், எல்லா பாலினராலும், எல்லா வகையினராலும், எல்லா நிலையினராலும், எல்லா தரத்தினராலும், எல்லா பருவத்தினராலும், எல்லா அலுவலிலே ஈடுபட்டிருப்போரினுலும், எல்லா பிறவியினராலும் போற்றப்பட்ட வள்ளுவரைக் கண்ணாரக் காண நான் பலகாலம் முயன்றதுண்டு. அந்தத் திருவள்ளுவரைக் கண்ணாரக் காணும்படியான நிலைமையை நண்பர் வேணுகோபால் சர்மா அவர்கள் ஓவிய உருவில் தீட்டித் தந்திருப்பது உள்ளபடியே போற்றி வரவேற்க வேண்டிய ஒன்றாகும்.

அவர்கள் ஓவிய உருவில் தீட்டித் தந்திருப்பது தமிழர்களாகிய நாம் மட்டும் போற்ற அல்ல, தென்னவர்கள் மட்டும் போற்ற அல்ல, இந்தியத் துணைக்கண்டத்தில் இருப்பவர்கள் மட்டும் போற்ற அல்ல, உலகத்தில் இருப்போர் அத்தனைபேரும் போற்றக்கூடிய வகையில், ஓவியத்தை மிகச் சிறந்த முறையில் தீட்டித் தந்துள்ளார்கள்.

உலகத்திலே தோன்றி மறைந்த பல்வேறு பெரியவர்களுடைய உருவங்களைக் காணும் போது அந்த உருவத்தோற்றப் பொலிவிலிருந்தே அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை நாம் நல்ல முறையில் அறிந்து கொள்ளுகிறோம்.

சாக்ரட்டீஸ் படம் வந்து நிற்கும் போதும், புத்தருடையத் தோற்றத்தைக் காணும்போதும், ஏசுவைக் காணும்போதும், பெர்னட்ஷாவைக் காணும்போதும், காந்தியாரைக் காணும்போதும், பெரியார் இராமசாமியைக் காணும்போதும், இரவீந்திரநாத் தாகூரைக் காணும்போதும் அவர்களுடைய உள்ளப்பொலிவும், அவர்களுடைய வாழ்க்கையில் கொண்டிருந்த சிறந்த நோக்கங்களும், அவர்களுடைய தோற்றப் பொலிவிலிருந்து ஓரளவு அறிந்து கொள்ள முடியும். அதைப் போன்று, திருவள்ளுவருடைய அருமையான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, இந்தக் கருத்துக்கள் தவழ்ந்த உள்ளத்தைக் கொண்டவர்களுடைய தோற்றம் எப்படி இருக்குமென்று நீடு சிந்தித்து, அந்தத் தோற்றத்தை நாம் எப்படிக் கற்பனைக் கண்ணால் நினைக்க முயன்று முயன்று பார்த்திருப்போமோ, அந்த கற்பனைக் கண்ணுக்கு முன்னால் வந்து நிற்கின்ற அந்த உருவத்தை நேரிடையாக நமக்குக் காட்டுவதுபோல், ஓவியத்தின் மூலம் தீட்டிக் காட்டியிருப்பது உள்ளபடியே போற்றிப் பாராட்டி வரவேற்கவேண்டிய ஒன்றாகும்.

> "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்"

என்பது பழமொழி.

> "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
> கடுத்தது காட்டும் முகம்"

என்பது வள்ளுவருடைய வாக்கு.

வள்ளுவருடைய உள்ளம் —"உள்ளுவதெல்லாம் உயர் உள்ளது" என்று கூறிய வள்ளுவருடைய உள்ளம் மிக உயர்ந்த கருத்துக்களைத்தான் உன்னி இருக்க வேண்டும். அந்த மிக உயர்ந்த கருத்துக்கள் தவழ்ந்த, உள்ளத்தைக் கொண்டவர்களுடைய முகப் பொலிவு எப்படி இருக்குமென்று கற்பனை செய்து, அது இப்படித் தான் இருக்கவேண்டும் என்றமுறையில் அதற்கேற்ற நெற்றியும், அதற்கேற்ற தாடியும், அதற்கேற்ற முடியும், அதற்கேற்ற ஒளிபடைத்த கண்களும், அதற்கேற்ற தோற்றப் பொலிவையும் அமைத்துத் திருவள்ளுவர் உருவப்படத்தை நமக்கு நீட்டியிருப்பது உள்ளபடியே போற்றிப் பாராட்டி மகிழ வேண்டிய ஒன்றாகும்.

'திருவள்ளுவரைக் காணவேண்டும்; அவர் எப்படி இருந்திருப்பார்?' என்கின்ற ஆவல் தமிழக மக்களிடத்திலே நீண்ட நாட்களாக இருந்து வருகின்ற ஒருபெரும் வேட்கையாகும். அந்த வேட்கையை நல்ல முறையில் ஈடேற்றுகின்ற வகையில், மிக அருமையாக நாமெல்லாம் கண்டு களிக்கின்ற வகையில், ஓவியமாக தீட்டித் தந்திருக்கின்ற பெற்றி மிகமிகப் பாராட்டி மகிழத் தக்கதாகும்.

ஒரு செய்தியைப்பற்றி அல்லது ஒரு கருத்தைப்பற்றி நினைப்பதிலே நாம் மிக மகிழ்ச்சி

கொள்ளுகின்றோம். நினைக்கின்ற கருத்தைக் கேட்க, வாய்ப்பு ஏற்படுமேயானால் கேட்பதற்கு நாம் துடியாய்த் துடிக்கின்றோம். நினைத்துக் கேட்கப்படுகின்ற அத்தகைய கருத்தைக் கண்ணால் பார்க்க வாய்ப்பு இருக்குமேயானால், அப்படிப் பார்ப்பதிலே மிக முயன்று அந்த நிலையைப் பெறுவதற்கு நாம் விரும்புகின்றோம். அதைப் போன்று திருவள்ளுவருடைய அருமை பெருமைகளை எல்லாம் நாம் அவருடைய குறளின் மூலமாகச் சிந்திக்கின்றோம், பார்க்கிறோம், அவருடைய அருமை பெருமைகளைக் கேட்கிறோம்.

இப்படிப்பட்ட அரிய பெரிய கருத்துக்களை எல்லாம் எடுத்துச் செல்லிய வள்ளுவர், எப்படி இருந்திருப்பார் என்பதைக் காணுவதிலே நாம் மிக்கப் பேராவல் கொண்டிருக்கிறோம். அந்தப் பேராவலை நிறைவேற்றுகின்ற வகையில்தான் நமக்கு முன்னால் திருவள்ளுவருடைய ஓவியத் தோற்றம் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது. இந்தத் தோற்றம் தமிழக மக்களுடைய நீண்ட நாள் பேராவலை மிக நல்ல முறையில் ஈடேற்றி வைக்கக்கூடிய பெற்றி வாய்ந்ததாகும். அந்த முறையில் நண்பர் வேணுகோபால் சர்மா அவர்களை நாம் பல்வகையிலும் போற்றவும் பாராட்டவும் கடமைப் பட்டிருக்கின்றோம்.

திருவள்ளுவருடைய தோற்றத்தைப் பார்த்தவுடனேயே அவருடைய பெருமையும், புகழும், அவருடைய பேரும், அவருடைய பெருமிதமும். அவர் காலத்தில் எப்படிச் சான்றோராக, ஆன்றோராக அவர் வாழ்ந்திருப்பார் என்கின்ற அத்தகைய எண்ணத்தினை நம் உள்ளத்தில் ஊட்டி எழுப்புகின்ற அளவுக்கு அந்தத் தோற்றப்பொலிவு அமைந்திருப்பது–இப்படிப்பட்டத் திருவள்ளுவர் நமக்குக் கிடைத்திருப்பது மிகமிக மகிழத் தக்க ஒன்றாகும்.

அந்த முறையில் நண்பர் வேணுகோபால் சர்மா அவர்களுடைய உள்ளத்தை நாம் பாராட்டவும், போற்றவும் கடமைப்பட்டிருக்கின்றோம். இப்படி, நல்ல ஓவியத்தைத் தந்துள்ள அவர்களுடைய நல்ல உள்ளம் என்றென்றும் வாழ்க! அவர்களுடைய இப்படிப்பட்ட முயற்சிகள் மேலும் மேலும் வளர்க! அவர்களுடைய தொண்டு வெல்க! என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். ★

★

யாதெனின்

வாய்மை யெனப்படுவது யாதெனில் யாதொன்றுந்
தீமையிலாத செயல்

க. நா. சுப்பிரமணியம்

★

நம்மிடையே ஒரு நம்பிக்கை. கடவுளுக்கு உருவம் கிடையாது என்றுதான், அனேகமாக நாம் எல்லோருமே நம்புகிறோம். ஆனாலும், கடவுளுக்கு பல்வேறு கலைஞர்கள் பலவிதமான உருவங்கள் படைத்து, நமக்குத் தந்திருக் கிறார்கள். நடராஜாவின் உருவம், அரியணை துயிலும் அரங்கனின் உருவம்-இப்படியெல்லாம் பலவிதமான உருவங்கள் செய்து தந்திருக் கிறார்கள். அவர்களெல்லாம் பெரிய கலைஞர்கள். அவர்கள் செய்து கொடுத்த கலை நம்முடைய வாழ்க்கையிலே மிகவும் பிரமாதமான ஆட்சி செலுத்தி வந்திருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை.

இப்பொழுது கடவுளைப் பற்றிய நம்பிக்கையே அவ்வளவாக இல்லை. என்றாலுங்கூட, ஒரு அளவுக்கு நமது மகரிஷிகளையும், பெரியவர் களையும் பற்றிக் கொண்டாடுகிற ஒரு நிலை வந்திருக்கிறது. அந்த நிலையில் அந்த மகரிஷி களையோ, முனிவர்களையோ, அல்லது கவி களையோ பற்றிய உருவங்கள் நமக்குக்கிடைப்பது அரிதாகத்தான் இருக்கிறது. அந்த அரிய விஷயத்தில், பல கலைஞர்கள் கவனம் செலுத்தி ஏதோ தங்களுக்கு எட்டிய வரையில் இலட்சிய உருவங்கள் தர முயன்று வந்திருக்கிறார்கள். அந்த முயற்சிகளில் பாராட்ட வேண்டிய முயற்சி என்று இந்த திருவள்ளுவரின் உருவம் எனக்குத் தோன்றுகிறது. ஒரு அளவுக்கு ஏதோ நடராஜா என்று சொன்ன பிறகு, கடவுளை நடராஜாவாகவே பாவித்து, உருவகப்படுத்திக் கொள்ளும் தன்மை மனிதர்களில் பலருக்கு ஏற்படுகிறது. அதேபோல இந்த திருவள்ளுவரின் உருவத்தைப் பார்த்த பிறகு திருவள்ளுவர் இப்படித்தான் இருந்திருப்பார் என்று சைத்திரிகருடன் நாமும் சேர்ந்து நினைப் பதற்கு ஒரு ஆதாரம் இருப்பது போலத் தோன்று கிறது. அது உண்மையா, அல்லவா என்பது அவசியமல்ல; அது அவருடைய கலைத் திறமை யைப் பொறுத்தது. பாராட்டப்பட வேண்டிய விஷயம். இந்த உருவம் பொதுமக்களிடையே அதிகமாகப் பரவி வந்தால் ஒரு அளவு திரு வள்ளுவர் இப்படித்தான் இருந்தார் என்று சாதிக்கக் கூடிய அளவுக்கு சக்தி பெற்று விடலாம் என்றுதான் எனக்குத்தோன்றுகிறது. ★

★

யாதெனின்

அறவினை யாதெனில் கொல்லாமை கோரல்
பிறவினை எல்லாந் தரும்

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார்

★

தமிழ் நாட்டிற்கு மட்டுமன்றி, உலகத்திற்கெல்லாம் ஒரே உருவம் கொடுத்து பல மொழியினர், பல சமயத்தினர், பல கோட்பாட்டினர், பல நாட்டினர் ஒருமுகப்பட புகழ்ந்து ஏற்றுக் கொள்ளுகின்ற ஒரு பெரும் பெரியார் திருவள்ளுவர். அவருக்கேற்ற ஓர் உருவம் அமைப்பது நெடுங்காலமாக தமிழர்களுடைய கனவாய் இருந்து வருகிறது. அத்தகைய ஓர் உருவம் சமைக்கப்பட்டிருக்கிறது என்று கேள்விப் பட்டு இங்கு வந்து அவருடைய திருவுருவத்தை நான் பார்த்தபோது மிகமிக இனிமையான அதிர்ச்சியைப் பெற்றேன்.

பல கருத்துக்களையும் ஒருமுகப் படுத்திக் காட்டிய வள்ளுவரின் திருவுருவத்தை, உண்மையிலேயே பல கலைகளில் ஈடுபாடு கொண்டு, அந்த பல கலைகளையும் ஒரு கலையாக ஓவியத்தில் உருக்கி வார்த்த கலைஞர் வேணுகோபால் சர்மா அவர்களைப்போன்ற ஒருவர்தான் இத்தகைய ஒரு நல்ல உருவத்தை அமைத்திருக்க முடியும் என்று என் மனப் பூர்வமாக என்னுகிறேன். ஏனெனில், திருவள்ளுவருடைய திருவுருவத்தைப் பார்க்கும் போது, தமிழகத்தினுடைய ஒரு பெரும் தலைவருடைய உருவம் என்பது மட்டுமல்ல, தமிழகத்துக்குள்ளேயும் சரி, வெளியிலேயும் சரி, பல்வகைக் கோணத்திலிருந்து வாழ்க்கையைக் கண்டவர்கள் அத்தனை பேருடைய கோணத்துக்கும் பொருத்தமாக அத்தனையும் கலந்து ஒரே உருவாகக் கண்ட திருவள்ளுவருடைய உருவம் தமிழகத்தினுடைய சாயல் மட்டுமல்ல, உலகத்திலுள்ள வேற்றுமைகளை யெல்லாம் கடந்த ஒரு சாயலாக இருக்க வேண்டும். அத்தகைய முறையிலே இந்தத் திருவுருவம் அமைந்திருக்கிறது. எல்லா கலைஞர்களுடைய கலையும் இதில் பிழிந்தெடுக்கப் பட்டிருக்கிறது.

ஒரு நல்ல தமிழன், முழு வாழ்க்கையையும் ஒரே முகமாகக் கண்ட தமிழன், அது மட்டுமல்ல, தமிழன் என்ற முறையில் மட்டுமின்றி உலகிலுள்ள எல்லா வேற்றுமைகளையும் கடந்து கீழ்திசை உருவமா? மேல் திசை உருவமா? தெற்கே உள்ளவனா? வடக்கே உள்ளவனா? என்று வேற்றுமை காணமுடியாத அளவில் உலகத்திற்கே ஒரு பொதுமையான உருவம் அதில் நிலைத்திருக்கிறது. அதோடு, திருவள்ளுவரை நினைக்கின்ற மக்கள், பெரும்பாலும் திருவள்ளுவரைப் பற்றிய கதைகளை மனதில் எண்ணிக்கொண்டு சிலசில வகைகளிலே அந்த உருவத்தை ஓரோரு ஓவியர்கள் சமைத்து விடுகிறார்கள், சிலர் அவரை அறவோர் என்று நினைத்துக் கொண்டு, முழுக்க முழுக்க ஒரு அறவோராக அல்லது ஒரு துறவோராக எழுதிவிடுகிறார்கள். சிலர் அவர் இல்லறத்தை வற்புறுத்திச் சொன்னார் என்பதற்காக அவரை முழுக்க முழுக்க ஒரு இல்லற வாழ்வினராகக் காட்டி விடுகிறார்கள். ஆனால், அவர் அறவோர் மட்டுமல்ல, சிறந்த ஒரு அறிஞர். அவர் அறிஞர் மட்டுமல்ல, அதை விட நல்ல சிறந்த ஒரு கலைஞர். அறம், அறிவு, கலை, இன்பம் எல்லாம் ஓர் தரம் திரண்ட அந்த உருவத்தில் எல்லாம் அமையும்படி கலைஞர் அவர்கள் தீட்டிய உருவம் இப்பொழுது அமைந்திருக்கிறது.

அவருடைய முகத்திலே உள்ள கண்ணொளியிலேயே இந்த மூன்றையும் நாம் பார்க்கிறோம். அதிலே உள்ள கூர்மை அவருடைய அறிவைக் காட்டுகிறது. அதிலே அவருடைய அன்பு தவழ்ந்து நிற்கிறது. அவர் வாழ்க்கையில் இன்பம் கண்டவர் என்பதை அந்தக் கண்கள் காட்டுகின்றன. அவருடைய மூக்கினுடைய கூர்மை, அவருடைய அறிவுக்கு உகந்ததாக அமைந்திருக்கிறது. முகத்தினுடைய சாயல் பெரும்பாலும் தமிழர்களுடைய சாயலாக அமைந்திருந்தாலும் கூட அதிலே யாராவது சாக்ரடீஸைக் காண வேண்டுமென்று நினைத்தால், அல்லது வேறு மேனாட்டுப் பெரியார்கள் யாரை யாவது காணவேண்டுமென்று நினைத்தால்கூட அதன்உள்ளே அதனுடைய அமைப்பை ஓரளவு காணமுடியும். அந்த அளவில் அந்த அமைப்பு அமைந்திருக்கிறது.

கொஞ்சமும் முயற்சி இல்லாமலேயே திருவள்ளுவருடைய வாழ்க்கை அமைந்திருக்கிறது. அவர் முயற்சியில்லாமல் எல்லா அழகையும் பெற்றிருந்தார் என்பதை இந்த உருவம் காட்டுகிறது. அவருடைய தாடி, வேண்டுமென்று அமைத்த தாடியல்ல. அவருடைய தலைமுடி, வேண்டுமென்று அமைத்துக் கொண்ட தலைமுடியல்ல. இயற்கையாக வளர்ந்து அதை இயற்கையாக முயற்சியின்றி அவர் ஒதுக்கி விட்டமாதிரி அது அமைந்திருக்கின்றது. அவருடைய புன்னகை தவழ்கின்ற ஒளி உண்மையிலே அவர் வாழ்க்கையிலே எல்லா இன்பங்களையும், துன்பங்களையும் கடந்து, அதே நேரத்திலே துன்பத்தின் முடிவு இன்பம் என்று காட்டுவது போல அமைந்திருக்கிறது. அவருடைய உடலினுடைய பொலிவு முழு நிறைவு வாழ்க்கையைக் காட்டுகிறது. இத்தகைய முறையிலே ஓவியர் அவர்கள் அவரை அமைத்திருக்கிறார்கள். திருவள்ளுவர் நமக்குக் கொடுத்த, திருக்குறள், காலத்தையும், வெள்ளத்தையும் தாண்டியிருப்பது போல, இனி வருங்காலத்திலே காலத்தையும், வெள்ளத்தையும் தாண்டியிருக்க வல்ல ஒரு உருவத்தை சமைத்துத் தந்ததன் முலம், கலைஞர் அவர்கள் ஒரு பெரிய வருங்காலக் கருவூலத்தை நமக்குப் படைத்துத் தந்திருக்கிறார்கள்.

கலைஞர்கள் மூன்று வகை. ஒரு பொருளைப் பார்த்து அதைப்போல படம் அமைத்துக் கொடுப்பது ஒரு வகை. அதுவே மிகக் கடினமான ஒரு முறைதான். அதிலே, மற்ற இயற்கையைத் தீட்டிக் காட்டுவது, உயிர்களைத் தீட்டிக் காட்டுவது, மனிதனைத் தீட்டிக் காட்டுவது, மனிதனுடைய முகத்தை, அந்த முகத்திலே அகத்தின் ஒளியைத் தீட்டிக் காட்டுவது மிகவும் சிரமமான காரியம். இரண்டாவது வகையார் கலைஞர்கள் உண்டு. அவர்கள் இருக்கின்ற பொருளைக் காட்டாமல், கருத்துக்களுக்கு உகந்த ஒரு பொருளைக் காட்டுவார்கள். ஆனால், இங்கே நமக்கு கருத்துக்களையெல்லாம் ஊட்டிக் கொடுத்த திருவள்ளுவர் நிச்சயம் ஒரு உருவத்தோடுதான் இருந்திருக்க வேண்டும். அவருடைய உடல் உருவத்திலிருந்துதான் அவருடைய உள்ளத்தினுடைய பண்புகள், அறிவு எழுந்திருக்க வேண்டும். அதை வைத்துக்கொண்டு உலகத்திற்கெல்லாம் ஒற்றுமை கொடுத்த ஒருவருக்கு, திரும்ப அவருடைய பண்பு மட்டும் நமக்கு இப்பொழுது திருக்குறளில் கிடைத்திருக்கிறது. அதிலிருந்து பின்னோக்கிச் சென்று அவருடைய உருவத்தைப் படைப்பதென்பது, கடவுளுடைய படைப்புக்கு நேர் எதிரான இன்னொருபடைப்பு. அந்த படைப்பு செய்துள்ளார் நமது கலைஞர் அவர்கள். இது மூன்றுவது வகையான படைப்பு. இருப்பதைப் படைப்பது. இருந்திருந்த ஒன்றை இப்படி இருந்திருக்க வேண்டுமென்று நிதானித்து இப்பொழுது படைப்பது. அத்தகைய படைப்பை, எல்லாரும் ஏற்றுக் கொள்ளும்படியான வகையில் அவர்கள் படைந்துக் கொடுத்தார்கள். கற்பனையானாலும் உண்மை என்று நாம் ஒப்புக் கொள்வதற்குக் காரணம், அந்தக் கற்பனை முழுக்க முழுக்க கற்பனையல்ல. திருவள்ளுவருடைய திருக்குறள், அந்த திருக்குறள் அடிப்படையாக நமக்குக் கிடைத்த பண்புகள் ஆகியவற்றையெல்லாம் கொண்டு அவர் அமைத்த சிற்பம், உண்மையிலேயே நமக்கு திருவள்ளுவருடைய திருக்குறளை நினைவூட்டுகின்றது. அவருடைய கலை வாழ்க. திருவள்ளுவருடைய பெருமை ஒளி இந்த திருவள்ளுவரின் மூலமாக, திருவள்ளுவருக்கு ஒரு பொதுக் கோள்களாளாக, எல்லா தமிழர்களும், அதுபோல எல்லா உலகமும் இதை ஒப்புக்கொள்ளும்படியாக அவருக்கு இப்பொழுது ஒரு உருவம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இனி விரைவில் அவருக்கு அதுபோல ஒரு நினைவு நாளும், அதுபோல அவருக்கு எல்லா வகையிலும் ஒரு தேசிய ஒற்றுமையும், உலகில் புகழையும் நிறுவும் படியான செயல்களும் தொடர்ந்து நிகழ வேண்டும். இப்பொழுது உருவத்தில் ஒற்றுமை ஏற்பட்டிருப்பது போலவே, அவருக்கு நினைவாக ஒரு கற்பனை நாளை, அதே சமயத்தில் எல்லாரும் ஒத்துக்கொண்டு, எல்லா மொழிகளுக்கும் ஒருங்கே ஏற்ப ஒரு நாளை பார்க்கவேண்டும். மதங்கள் எல்லாம் கலந்த அவருக்கு நாம் செய்ய வேண்டிய ஒரு பெரும் செயலாக தமிழர்கள் இதை மேற்கொள்ள வேண்டும் என்று நான் விழைகிறேன். வாழ்க அவருடைய புகழ். வாழ்க அவரைத் தீட்டிய கலைஞருடைய கலைப் புகழ். அவர் இது போன்ற பல கலைப் படைப்புகளைச் செய்வார்கள் என்று நம்புகிறேன். ★

வள்ளுவரைக் கண்டேன் மகிழ்ந்தேன் திருக்குறளை
அள்ளிக் கொடுத்த அருளுருவம் இஃதென்றே
உள்ளபடி யான் உணர்ந்தேன் உண்மை ஒளிவிளங்காத்
தெள்ளமுத வண்ணத்தால் தீட்டியவர் வேணுவன்றோ!

ஆம், தமிழாகிய அமிர்தத்தைக் குழைத்து, அதனைத் திண்ணமான வண்ணமெனத் திரட்டி எடுத்து, காவியங் கலந்த ஓவியமாகத் தீட்டிக் காட்டியுள்ளார்.

உலகம் இந்த உண்மையை நன்கு உணர வேணும் என்று, வேணுமென்றே நமது வேணுகோபால்சர்மா அவர்கள் இந்த வியனுருவை அமைத்தார். அதைத்தானே நாம் இங்கு சிறப்பித்துச் சொல்ல வேணும்!

தெய்வத் தமிழ்மறையாம் திருக்குறளை அள்ளிக் கொடுத்த வள்ளுவர் இவர்தான். ஆம்; அதில் சிறிதும் சந்தேகமில்லை.

உண்மை அருள் ஒளியை இவரது கண்கள் வெண்மையாய் விளக்குகின்றன.

சாதி மதம் கடந்த சமரச சுத்த தத்துவத்தை வேதமுடிவான இவரது வடிவம் விளக்குகின்றது.

பரந்த உலகத்தை நிறைந்த நிலையில் பார்க்கும் இவரது விரிந்த பார்வையில் அருள் மலிந்த சுடர்த்தேன் சொட்டுகிறது.

அமைதியான இருக்கை, இவரை நாம் பார்த்துக் கொண்டே இருக்க வேணும்போல் இருக்கிறது.

ஏட்டிலே பாட்டு ஏறுவதற்கு முன்பே இந்த நாட்டிலே ஞானமணம் கமழத் தொடங்கி விட்டது.

இவர், வாரிமுடிந்திருக்கின்ற வளர் சிகையின் சிறப்பே சிறப்பு! நிறைந்த பல கருத்துக்கள் அதனிடையே நெளியத்தான் செய்கின்றன.

அகன்ற மார்பும், அதன் மேல் போர்த்திய மெல்லிய நல்லாடையும் அழகுக்கு அழகு செய்கின்றன.

சரவணபவானந்தர்

★

மீசைமீது ஆசைப்பட்டுதான் ஆகவேண்டும்; அப்படி யிருக்கிறது அதன் வளைவும், குழைவும்.

தாடி, அவரது நீடிய தவநிலையை நினைவு படுத்துகிறது.

மேல்ஒளி, இந்த மேதினி முழுதும் நிறைந்து விளங்குகிறது.

இறுதியாகச் சொல்லப்போனால், வள்ளுவர் என்ற இயற்பெயருக்கு உரித்தானவர் இவரேதான்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று வாய் நிரம்பச்சொன்ன பாரதியார் அந்தோ! இந்தச் சமயம் இருந்து இதனைப்பார்க்க முடியவில்லையே!

"வள்ளுவர் குறளை வளனுறப் படித்துக் கொள்ளும் வகையில் கூறுவள் உரையுடன்" என, வ. உ. சி. அவர்கள் தன் மனையாளைச் சிறப்பித்துச்சொன்ன அந்த வள்ளியம்மையம்மையார் இந்த நேரம் இருந்து இந்தத் திருவள்ளுவரைப் பார்த்திருக்க வேண்டும். ஆகா! காட்சிதரும் இந்தக் கள்ளமில் வள்ளுவரைப்பற்றி "உலகமெல்லாம் கொள்ளும் வகையில் கூறுவள் ஓவிய வேணுகோபாலரின் உரையுடன்."

வடலூரடிகளாகிய வள்ளலார் குறிப்பிட்ட அருளுருவம் இதுதானோ? ஆம், ஆம்; இந்த தெருள் உருவமே என்று தேறித் தெளிந்தேன்.

இந்த வள்ளுவரின் திருவுருவம் நாட்டிலே ஒவ்வொரு வீட்டிலேயும் இருக்க வேண்டும். தமிழர் வணங்கும் தனி வடியாய் அமைதல் வேண்டும். அரசாங்கத்தார் இதற்குப் போதிய ஆதரவு தருதல் வேண்டும். முத்திரையில் வந்தது மாத்திரமல்ல; என்றும் நம் நித்திரையிலும் இந்த வள்ளுவரின் நினைவு வருதல் வேண்டும். ஊராட்சி நகராட்சி, மன்றங்களில் இவ்வுருவம் நல்ல முறையில் காட்சியளிக்க வேண்டும். நீதி

மன்றங்களில் இவை நிச்சயமாக இடம் பெற வேண்டும். கலாசாலைகளில் கட்டாயம் இருக்க வேண்டும். வள்ளுவரை முப்போதும் வாழ்த்தி, வணங்கி அவர் வகுத்த அறவழி நடத்தல் வேண்டும்.

தெய்வீகத் திருவருள் மிக்க உயிரூட்டம் பெற்ற, உண்மைக்கு எடுத்துக் காட்டான இந்த வள்ளுவர் திருவுருவத்தை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். அருளுருவம் அமைத்துக் கொடுத்த அன்பர் திரு. வேணுகோபால் சர்மா அவர்களை நான் பெரிதும் பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன், பூரணமாய்ப் போற்று கின்றேன், புகழ்கின்றேன்.

வாழ்க! வணக்கம்!

★

யாதெனின்

நல்லாரெனப் படுவ(து) யாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி



திரு. P. A. T. சுப்பராயன் அவர்களும் நண்பர்களும்

திரு. தமிழ்ச்செல்வன்

திரு. ஆனந்தன், 'பிலிம் நியூஸ்'



திரு. P. S. ராஜகோபாலன், உரிமையாளர் சுதந்திரா பிரண்டர்ஸ்

நன்றியறிதல்

என்னால் வரையப்பட்ட இந்த திருவள்ளுவர், திருவுருவத்தைப் பார்வையிட்டு, நற்கருத்துக்களையும், நற்சாட்சிகளையும் தந்துதவிய சான்றாண்மை மிக்க நம் நாட்டுப் பிறநாட்டுப் பெரியோர்களுக்கு, என் நன்றி என்றும் உரியதாகும்.

* * *

உடனிருந்து இத்திருவுருவத்தினை அச்சிட்டு வெளியிட வேண்டும் என்ற ஊக்கத்தையும், எல்லா விதங்களிலும் உதவிய என் நண்பர், தமிழ்ச் செல்வன் (ஒலக்காசி, குடியாத்தம்) அவர்களுக்கு, என்றும் நன்றியுடனிருக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

* * *

திருவள்ளுவர், திருவுருவத்தினை எழுத முயன்ற நாட்களிலிருந்தே, எனக்கு எவ்வித இடுக்கண்களும் நேர்ந்துவிடக் கூடாதென, உள்ளக் கனி உடன் தோன்றாத் துணையாக உதவியருளிய பேருள்ளம் படைத்த என் உயிர்த் தோழர்கள் சிதம்பரம் P. A. T. சுப்பராயன் அவர்கட்கும், N. நம்பியப்பச் செட்டியார் அவர்கட்கும், என் இதயங்கனிந்த நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

* * *

நீண்ட நாட்கள் எடுத்துக் கொண்டு அச்சியற்ற வேண்டிய இம் மலரை மூன்றே நாட்களில் செய்து தீரவேண்டும் என்ற எதிர்பாராத விளைவுகள் ஏற்பட்ட நேரத்தில் சிறிதும் தயங்காமல் இம்மலரை அச்சிட்டு முடிக்கும் பணியை சந்தோஷத்துடனும், தைரியத்துடனும் ஏற்று முடித்துத் தந்த P. A. S. பிரஸ் அச்சியல் மேதை திரு. V. சத்ருக்னன் அவர்களை நான் என்றென்றும் மறக்க முடியாது. அவருக்கு மனதார நன்றி கூறுகிறோம்.

* * *

ஒரு வருட காலமாக திருவள்ளுவரின் திருவுருவத்தைப் பார்வையிட நேர்ந்த பெரியோர்களை உடனுக்குடன் தக்க முறையில் புகைப் படங்கள் எடுத்து இம்மலருக்குதவுமாறு செய்வதைத் தம் கடமையாக நினைத்து எந்நேரத்திலும் பணியாற்றித் தந்த நண்பர் மாயூரம், பாலு அவர்களுக்கு எங்கள் நன்றி.

* * *

அச்சுக்கு போக வேண்டிய புகைப் படங்களை நேர்படுத்தி தக்க விதத்தில் புகைப்படப் பிரதிகளை உருவாக்கித் தந்த திரு. காரைக்கால் கோவிந்தராஜன் அவர்களுக்கு எங்கள் நன்றி.

* * *

அவ்வப்பொழுது வெளியீட்டு விழா சம்பந்தமான விபரங்களையும் அவை நடைபெற வேண்டிய விதங்களையும் பாகுபாடு செய்து எல்லோரையும் செயல்பட ஊக்குவித்து உதவி வந்த எஸ் எம். லாரி ஸர்விஸ் நண்பர் திரு. R. ரத்தினம் அவர்களுக்கு எங்கள் நன்றி என்றென்றும் உரியது.

* * *

'' திருவள்ளுவர் உருவப்பட விளக்கம் '' தமிழில் என்னால் எழுதப்பட்டதை சுவை குன்றாமலும் கருத்து மாறாமலும் அதை அப்படியே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தந்துதவிய எமது நண்பர் சேலம் K. R. நாகராஜன் (புல்லாங்குழல் கலைஞர்) அவர்களுக்கு என்றும் எங்கள் நன்றி.

* * *

யானைகச் செய்ய வேண்டிய ஒவ்வொரு பணியையும் உடனிருந்து உட்கருத்தோடு அப்பணியை செய்து முடித்தது நானா, அவர்களா, என்பதே தெரியாமல் உணர்ச்சியுடன் இரவு பகலின்றி பணியாற்றியுதவிய நண்பர்கள் R. சுந்தரமூர்த்தி, T. N. விஜயகுமார் இருவரையும் நாங்கள் என்றென்றும் மறக்க முடியாது, அவர்களுக்கு எங்கள் நன்றி.

* * *

திருவள்ளுவரின், திருவுருவத்தை பலவர்ணங்களில் மூலப் படத்திற் கொப்ப அச்சியற்றித் தருவதை இன்றியமையாத பணியாகக் கருதி, பிரதிகளை முடித்துத் தந்த 'பிரஸாத் ப்ராஸஸ்'' அச்சகத்தார்களுக்கு எங்கள் நன்றி.

இப்படிக்கு

கே. ஆர். வேணுகோபால் சர்மா

டி. பி. சுந்தர நாயுடு



GIVE YOUR FILM FINER Publicity..
PRASAD PROCESS (PRIVATE) LTD.,
ARE EQUIPPED TO DO IT BETTER FOR YOU.
Flawless Colour
Reproduction.....
MULTICOLOUR
MULTI-SHEETED
POSTERS
SHOWCARDS
CALENDARS etc
Everything
IN
PHOTO-
OFFSET
PRINTING
ARCOT ROAD
VADAPALANI
MADRAS-26.

தேனமுது—
தமிழ் விருந்து!

மேகலாவின்

குறவஞ்சி

கதை, வசனம்: மு. கருணாநிதி

டைரக்ஷன்: காசிலிங்கம்

சென்னை நகர் வெளியீடு

சிவாஜி ரிலீஸ்

சிவாஜி பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட்
3. பெசன்ட் ரோடு — சென்னை

-JEEVAN-

MOHAN BROS

வெற்றிகரமாக நடைபெறுகிறது

சென்னை - கெயிட்டி ★ ராக்ஸீ ★ கிரவுன் ★ மற்றும் தென்னாடெங்கும்.

With best compliments from

SIMPSON & CO. LTD.

MADRAS-2.

★

Manufacturers of 'P' Series Diesel Engines,
Light Engineering Specialities,
Pioneers in Coach Building
with over a century's experience.

★

Branches :

BANGALORE — OOTACAMUND — TIRUCHIRAPALLI — SECUNDERABAD.

With best compliments from

SM LORRY SERVICE

GOODS CARRIERS & TRANSPORT CONTRACTORS

5, BASIN WATER WORKS STREET, MADRAS-1

Daily Prompt and Regular Service between
Madras and Tirunelveli.

Branch : **2, WEST MADA STREET, TIRUNELVELI TOWN**

FOR

★ PLANNING ......
★ DESIGNING ......
★ ADVERTISING...

CONSULT

ELEGANT PUBLICITIES

ADVERTISING CONSULTANTS

(SUBHADRABAI MANSIONS)

77, GENERAL PATTERS ROAD,

MADRAS-2

PHONE: **84784.**

Post Box No. 320

ஸ்ரீ ராமஜெயம்

TELE { PHONE: 82787
GRAM: 'RISING'

பிரகாசிக்கும் விற்பனை நிலையம்

வாடிக்கைக்காரர்கள் பொது ஜனங்களின் ஒத்துழைப்புப் பெறுவதே எங்கள் நோக்கம்!

உற்பத்தி இடங்களிலிருந்து நேரே தருவிக்கப்பட்டு விற்பனை செய்யும் பலசரக்கு சாமான்களும் மைசூர் தசரா எக்சிபிசனில் தங்கமெடல் பரிசு பெற்றதும் உடல் வலிமை தர வல்லதுமான ராகோடன் ராகிமால்ட் பவுடர் மற்றும் வத்தல் வகையருக்கள், கேர்ளா அப்பளம், சுத்தமான லெக்ஷ்மி மார்க் நல்லெண்ணை A. K. M. மார்க்கு குக்கிங் விஜிடபிள் ஆயில் சந்தனாதி, பொன்னுங்கண்ணித் தைலங்களும், பிஸ்டல் மார்க்கு விளக்கெண்ணை, வேப்பெண்ணை, போஜன கொறடா ஊறுகாய், ஓமத்தண்ணீர், ஊதுபத்தி தினுசுகள், சந்தன பில்லைகள் முதலியவைகளும் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

ஏ. கே. முத்தஞ் செட்டியார் அன் சன்ஸ்

69, அம்பாங் ஸ்திரீட், கோலாலம்பூர், மலாயா

கிளைகள் :

ருக்மணி ஸ்டோர், No. 370, 3¾ மைல், ஈப்போரோடு, கோலாலம்பூர் போன்: 69302

A. K. M. & Sons, No. 33, ஜாவா ரோடு, சிங்கப்பூர்-7 போன்: 31470

தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளிலும் தபால் மூலமும் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெரும் கல்வி அரங்கம்

KNOWLEDGE IS POWER

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக திருத்தமான முறையில் இங்கிலீஷ் தபால்மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து **21—3—60-ம்** தேதி வரை அனுப்பலாம்.

அச்சிட்ட பாட விளக்கங்கள் **25—3—60-ம்** தேதி முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்படும்.

முக்கிய அறிவிப்பு:—*16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். *அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும் எட்டு நயா பைசா (8 புதிய காசுகள்) தபால் பில்லை அனுப்பி உடனே பெறுக.

TGN Jewellers

வைரங்கள்

பொன் நகைகள்

வெள்ளி சாமான்களுக்கு

போன்: 4818 தந்தி: "அலங்கார்"

T. கோவிந்தராஜுலு நாயுடு

28, நேதாஜி ரோடு சென்னை-1.

போன்: 91596 தந்தி: "அலங்கார்"

பிரான்ச்:

95, கச்சேரி ரோடு சென்னை-4.

With the

Best

Compliments

from

ashby

LITHO WORKS

77, GENERAL PATTERS ROAD

MOUNT ROAD

MADRAS-2

PHONE: 84688
GRAMS: STRAIGHT

உலகமறை குறள்நெறியை உவந்துதந்த
உத்தமராம் வள்ளுவனார் உருவந்தன்னை
அழகான ஓவியமாய் ஆக்கித் தந்த
அன்புமிகு சர்மாஜீ வாழ்க வாழ்க.

கண்ணாடி பதித்த அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த கலியாண மண வரைகள். குறைந்த வாடகைக்கு உங்கள் வீட்டிலேயே வேன் மூலம் சப்ளை செய்யப்படும்.

ரோடு ரோலர்கள் மண் வெட்டும் இயந்திரம் (புல்டோசர்) முதலிய வைகளும் வாடகைக்கு விடப் படும்.

கங்கா ஸ்டோர்ஸ்

209, ஈப்போ ரோடு, கோலாலம்பூர்.

ஜெனரல் மெர்ச்சென்ட்ஸ், மளிகை, ஜவுளி வியாபாரம்.

ரஸ்தா வேலைகள், அள்ளூர் கட்டுதல், தள வேலைகள், புல் வேலைகள் குறித்த காலத்தில் கச்சிதமான முறையில் ஒப்பந்தபடி வேலைகளை முடித்துத் தரப்படும்.

மக்கள் சேவையே எங்கள் இன்பம்.

நகரின் பிறபல காண்ட்ராக்டர்.

உரிமையாளர் :

K. K. சாமி

25, டர்மன்ஸாரா ரோடு

கோலாலம்பூர் (மலாயா).

P. O. Box 291

Telephone 2552
Telegram "JAIHIND"

S. R. RENGASAMY CHETTIAR CO.,

Established. 1930.

IMPORTERS, EXPORTERS, GENERAL MERCHANTS & COMMISSION AGENT

26, AMPANG STREET, KUALA LAMPUR, MALAYA

எங்களிடம் சுத்தமான சாப்பாட்டு சாமான்களும், இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட, தேவிமார்க் நல்லெண்ணெயும், தேவிமார்க் அப்பளமும், நயம் அச்சு வெல்லம் வகையறுவும், மொத்தமாகவும், சில்லரையாகவும், நியாயமான விலைக்குக் கிடைக்கும், வாடிக்கையாளர்களைத் திருப்தி செய்வதே எங்கள் விருப்பம்.

26 அம்பாங்ஸ்த்ரீட்
கோலாலம்பூர்
மலாயா

ச. ரு. ரெங்கசாமி செட்டியார் கம்பெனி

உங்கள் மோட்டார் கார்களை

VANGUARD

வான் கார்டில்

இன்ஷ்யூர் செய்யுங்கள்

குறைந்த பிரிமியம் - உடனடியான சேவை

வான்கார்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

11 & 12, செகண்ட் லைன் பீச், சென்னை-1.